25 AUG 1958

UNIVERSITY OF MADRAS

B. A. DEGREE EXAMINATION

1958 and 1959

PART II—TAMIL

SELECTIONS IN POETRY

6-,1x.
N56

UNIVERSITY OF MADRAS

B. A. DEGREE EXAMINATION
1958 and 59

PART II—TAMIL

SELECTIONS IN POETRY

TAMIL NADU ARCHIVES LIBRARY
111057
EGMORE, MADRAS-600 008

PRINTED BY

THE KESARI PRINTING WORKS,
15, SUNKURAMA CHETTY STREET,
MADRAS–1
1956

முன்னுரை

பண்டைக் காலத்திலேயே* தமிழ் மக்கள் பழமையும் தனிப் பண்பும் வாய்ந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தனர். ஆடவரது தோளாற்றலும் மாசற்ற வீரமும், மகளிரது கற்பும் காதலும் அந்நாகரிகத்தைப் பாதுகாத்து வளர்த்தன. பயிர்த் தொழில் செய்தொழில்களாலும் தொலை நாடுகளின் வணிகத்தாலும் பசியும் வறுமையும் இன்றி மக்கள் வாழ்ந்தனர். ஆதலின், அவர் வாழ்க்கை காதலையும் போரையும் மாறிமாறிப் போற்றும் ஒரே திருவிழாவாய்த் திகழ்ந்தது. செல்வம் கொழித்தது. தமிழ் மொழியும் பல்வேறு இலக்கிய வளங்களுடன் வளர்ந்திருந்தது. அதை வளர்ப்பதற்கென்றே மதுரையில் சங்கம் இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இலக்கிய வளர்ச்சிக்கென்று தமிழ்ச் சங்கம் போன்ற ஒரு தாபனம் எங்கேனும் இருந்ததாக உலக சரிதத்திலே இல்லை. சங்கம், தமிழகத்தின் தனிச் சிறப்பு. அதன் ஆதரவிலே வெளிவந்த இலக்கியச் செல்வங்களே பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும். இவை, பழைய நாகரிகம் பண்பாடு பழக்க வழக்கங்களைப் பளிங்கு போலக் காண்பித்துப் பின்வந்த இலக்கியங்களுக்கும் வழிகாட்டியாய் நீடித்து நிலைத்து வந்துள்ளன.

இடைக்காலத்திலே சமண பௌத்த மதங்களின் தாக்குதலாலும், சைவ வைணவ சமயங்களின் எழுச்சியாலும் போரிலும் காதலிலும் திளைத்த தமிழர் மனப்பான்மையிலே சமயப் பற்றுப் பதிந்தது. சமய உண்மைகளைக் குறித்த வாதப் பிரதிவாதங்கள் அவர்களுக்கு நல்விருந்தாயின. சமய குரவர்கள் தூய்மையான வாழ்க்கை நடத்தி, அருள் உணர்ச்சியுடனும் ஞான ஒளியுடனும் தங்கள் அனுபவத்தைப் பாடி மற்றவர்களுக்கு வழி காட்டினர்கள். அதனால் சமய வாழ்வுடன் ஒழுக்க நெறியும் உயர்ந்தது. மெய்யான கடவுள் பக்திக்கும் தனி மனிதன் ஒழுக்கத்துக்கும்

* தமிழ் இலக்கிய வரலாற்றின் காலவரம்புகளை உத்தேசமாகத் தான் உரைக்க முடியும். கி. பி. 4-ம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 3-ம் நூற்றுண்டு வரை பழங்காலம்; கி. பி. 4-ம் நூற்றுண்டு முதல் 12-ம் நூற்றுண்டு வரை இடைக்காலம். 13-ம் நூற்றுண்டு முதல் பிற்காலம். இப்படிப் பிரித்துப் பேசுவது பொருந்தும்.

சமுதாயக் கடமைகளுக்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தி நீதி நூல்கள் எழுந்தன. அவை கீழ்க்கணக்கிலே சேர்க்கப் பெற்றுள் ளன. அவற்றிலே திருக்குறள் நமக்குப் பாடம்.

இக்கால எல்லையிலே சமய உணர்வால் கல் நெஞ்சையும் கனி விக்கும் இசைப் பனுவல்கள் பக்தியைப் பரப்பி எழுந்தன. அதே சமயத்தில் இலக்கியச் சுவை வாய்ந்த சமண பௌத்த காவியங் களும் தோன்றின. நோக்காலும் போக்காலும் இக் காவியங்கள் சங்க நூல்களின் வேறுனவை. சங்க நூல்களின் இயற்கையான செய்யுள்நடை தன்மை நவிற்சிகளுக்கு மாருக, உயர்வு நவிற்சிகள் மனேபாவத்திரிபுகள் கற்பனை விரிவுகளை இந்தக் காவியங்களிலே காணலாம். இவைகளிலே சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் நமக்குப் பாடம்.

சமய எழுச்சியின் பயனுய்த் தமிழரிடம் சமுதாய உணர்ச்சி ஓங்கியது. ஆட்சி முறைகளும் திட்டங்களும் அபிவிருத்தி அடைந்தன. சமுதாய வாழ்வு சுதந்திரத்துடன் இயங்கியது. சத்திரங்கள் சாவடிகள் எழுந்தன. கோயில்கள் தோன்றின. நமது கோயில்களைக் கல்லிலே செதுக்கிய காவியம் என்பர். பழங் காலநாகரிகத்தைச் சங்க நூல்களிலே காண்பது போல, இடைக் காலக் கலைவளத்தைக் கோயில்களிலே காணலாம். இவைகளைப் போன்ற மகத்தான கல் கட்டிடங்கள் உலகிலே வேறு எந்த நாட்டிலும் இல்லை. சிற்பநூலின் அற்புதமாய் அவை திகழ்கின் றன. இவைகளை எளிதிலே ஆக்கக் கூடிய ஆற்றலைப் பெற் றிருந்த மூதாதையரது சமயப்பற்றைப் போற்ருமல் இருக்க முடியாது. இந்தச் சமயப்பற்றைப் பக்திப் பனுவல்கள் வளர்த் தன. சைவ நாயன்மார்களின் தேவாரங்களும் ஆழ்வாராதியரின் பிரபந்தங்களும் சிறந்த இலக்கியச் செல்வங்கள் அல்லவா? பக்தி இயக்கத்தின் பயனுகச் சேக்கிழார் தோன்றினர். அவர் சோழ ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரி. சோழ வேந்தர் ஆட்சியிலே கல்வியும் கலைகளும் முழு வளர்ச்சி அடைந்தன. சமுதாய வாழ் விலே மகிழ்ச்சியும் ஆர்வமும் பெருகின. தமிழ்க் கலைகள் ஒவ் வொரு துறையிலும் ஓங்கி உயர்நிலை எய்தின. இலக்கியத்திலே அதன் சிகரமாகக் கம்பராமாயணம் பிறந்தது.

கம்பனுக்குப் பிறகு, பல்வேறு காரணங்களால் தமிழ் மக்களின் சமய வாழ்வும் கலைஞானமும் மங்கி மழுங்கிப்போன பிற்காலத்திலே பிள்ளைத் தமிழ் கலம்பகம் போன்ற சிறு பிரபந் தங்கள் எழுந்தன. பிரபந்த கவிஞரிலே குமரகுருபரர் சிறந்தவர்.

செய்யுள் இயற்றுந் திறமை தொடர்ந்து நீடித்திருந்தது. எனினும், புலவர் தாம் கூறும் பொருளை விட நடையை அதிகமாக நாடினர். செயற்கை அணிகளிலே சிந்தை செலுத்தினர். சொந்த அனுபவத்திற்குப் பதில் பிறர் வாய்மொழி மீது கவிதை கட்டினர். எனினும் தாயுமானவர் இராமலிங்கர் போன்ற இரண்டொருவரிடம் உண்மைக் கவித்துவம் ஒரு சிறிது காணப் பட்டது.

சென்ற நானூறு வருடங்களும் தமிழ்க் கலைமகள் கடு நித்திரை புரிந்தாள் என்று தான் கூற வேண்டியிருக்கிறது. இன்றேனும் அவள் துயில் உணர்ந்தாள் என்று திட்டமாய்க் கூற முடியுமா ? மற்றைய இந்திய மொழிகள் தத்தமக்குப் பெரிய இலக்கியச் செல்வங்களைப் புதியவையாய்த் தேடிக்கொண்டன. நாம் என்ன செய்கிறோம் ? பழங் கதைகள் பேசுகிறோம் ; அதிலே திருப்தியுறுகிறோம். இல்லை என்றால், பாரதியாரைக் காட்டுகிறோம். அவரைப் பின்பற்றுகிறோமா ?

5—5—'56. பதிப்பாசிரியர்.

திருத்தம்

பக்கம்	71.	வரி	22.	பிழை : போக்குப்
				திருத்தம் : போக்குக்குப்
,,	74.	,,	8.	பிழை : கிடந்து
				திருத்தம் : கிடந்
,,	84.	,,	6.	பிழை : வெறி
				திருத்தம் : வெரி

பொருளடக்கம்

முன்னுரை

1. பத்துப்பாட்டு 1
முல்லைப் பாட்டு

2. புறநானூறு 7
கோவூர்கிழார் பாடல்கள்

3. திருக்குறள் 15
ஒழிபியல்

4. சிலப்பதிகாரம் 26
வாழ்த்துக் காதை
வரந்தரு காதை

5. சீவக சிந்தாமணி 43
கேமசரியார் இலம்பகம்

6. பெரிய புராணம் 55
கண்ணப்ப நாயனூர் புராணம்

7. கம்ப ராமாயணம் 70
கும்பகருணன் வதைப் படலம்

8. காசிக் கலம்பகம் 86
கலம்பகவுறுப்புக்கள்

குறிப்புரை 91

1. முல்லைப் பாட்டு

தமிழ் இலக்கிய சரிதம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தொடங்கியுள்ளது. இப்பெருமை எல்லா மொழிகளுக்கும் இல்லை. சமஸ்கிருதம் சீனம் லத்தீன் கிரேக்கு எபிரேயம் முதலிய ஒரு சில மொழிகளிலே தான் தமிழிற்போலப் பழமையான நூல்கள் உண்டு.

கிறிஸ்தவப்தத்தின் தொடக்கத்திலே மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது என்றும், இதற்குமுன் இரண்டு சங்கங்கள் இருந்தனவென்றும், களவியலுரை கூறுகிறது. தொல்காப்பியம் இடைச்சங்கத்து இறுதியிலே தோன்றியது. பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் கடைச்சங்க நூல்கள்.

பழமையான பத்துப் பாடல்களின் தொகுப்புத்தான் பத்துப்பாட்டு. இதிலே முல்லைப்பாட்டு நமக்குப் பாடம். குறிஞ்சிப் பாட்டு, ஓர் ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டது. மதுரைக் காஞ்சி மதுரை மாநகரை வருணித்து, உயர்ந்த குறிக்கோளுடன் வாழவேண்டும் என்று வற்புறுத்துகிறது. நெடுஞ்செழிய னுடைய பாசறையிருப்பைச் சிறப்பிப்பது நெடுநல் வாடை. கரிகாற் பெருவளத்தானைப் பற்றியது பட்டினப் பாலை. எஞ்சிய ஐந்தும் ஆற்றுப்படை என்ற நூல் வகையைச் சேர்ந்தவை.

பிரிந்துசென்ற கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்து மனைவி இல்லறம் நடத்தும் இயல்பு முல்லை. அகப் பொருட்குரிய 'இல்லிருத்தல்' ஆகிய முல்லையையும், புறப் பொருட்குரிய 'பாசறையிருத்தலாகிய' வஞ்சியையும் இணைத்து, நப்பூதனார் முல்லைப்பாட்டை இயற்றினார். காடாகிய முல்லை நிலத்தைப், பெரும்பொழுதாகிய கார்காலத்துடனும், சிறு பொழுதாகிய மாலைவேளையுடனும், அந்நிலத்தையும் காலத்தை யும் சார்ந்த மக்கள் மரம் விலங்கு முதலிய கருப்பொருளுடன் பொருத்திப், பிரிந்து சென்ற கணவனை நினைந்து இல்லிருக் கும் மனைவியின் இயல்புடன், காட்டகத்துப் பாடி வீட்டிலே தங்கிப் போரிலே ஈடுபட்டுள்ள கணவன் செயலைச் சித்தரித்து,

வினைமுடித்து அவன் மீண்டதைக்கண்ட தோழி முதலியோர் தம்முட்கூறியதாக இப்பாடல் இயங்குகின்றது.

இப்பாடலால் பழங்காலப் போர்முறையிலே பாசறைச் செய்திகளை நாம் அறிகின்றோம். பற்பல தெருக்கள், நாற் சந்திகளைக் காத்துநிற்கும் யானைகள், தானைத் தலைவர்களும் பிறரும் தங்குதற்குக் கூடாரங்கள், திரையிட்ட ஈரறைப் பள்ளி—இவை உள்ளடங்கிய பாடி வீடு, 'வேறுபல் பெரும் படை' (அதாவது, பலநூறாக அடுக்கப்பட்ட பதினெண் பாடை மக்களாகிய படைத் தொகுதி) தங்கியிருப்பதற்கு வசதியாகவும் வாய்ப்பாகவும் இருக்கிறது. கன்னல் என்ற நாழிகை வட்டில், பாவை விளக்கு, பல்வண்ணத்திரைகளை இங்கே நாம் பார்க்கலாம். அங்கே திரிகிற யவனர்கள் பயங்கர மானவர்கள் ; மிலேச்சர்கள் வாய்பேசார்-ஊமையர். ஒள்வாள் மங்கையர் பரபரப்புடன் அங்குமிங்கும் ஓடுகிறார்கள்.

இப்பாட்டு 103 அடிகளையுடைய நேரிசையாசிரியப்பா. இதன் நடை திட்பமும் தெளிவும் வாய்ந்தது. எளிய சிறிய சொற்களை வழங்கிப் பெருமித நடையிலே பழங்கால மக்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியை வாய்மை வழுவாது வரையும் ஆசிரியர் செய்திறனைப் போற்றுகின்றோம்.

இந்த ஆசிரியர் யார்? பூதனார் என்பது அவர் பெயர். அவருடைய முகவரி : 'காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்'. இதற்குமேல் அவரைப் பற்றி நாம் எதுவும் அறியோம்.

இந்தப் பாடலைப் பெற்ற பாக்கியவான் யார் என்பது அறியப்படவில்லை. அகப் பாடலிலே கிளவித் தலைவன் பெயர் கூறல் மரபன்று. இதன் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனாய் இருத்தல் கூடும் என்று யூகிக்கலாம். நெடுநல் வாடையிலே கூறப் பெறும் நெடுஞ்செழியனின் பாசறை யிருப்புடன் இது ஒப்புமை உடையது ஆதலாலும், அவனுக்குரிய மதுரைக் காஞ்சிக்கு முன் இது பத்துப் பாட்டிலே வைக்கப்பட்டிருத்த லாலும், இதன் 97 வரி 'கானம் நந்திய செந்நிலப் பெருவழி' என்பதிலே, கானம் என்பது தலையாலங்கானம் ஆதல் கூடுமோ என்பதாலும் அவ் யூகம் பிறந்தது.

முல்லைப் பாட்டு

நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்,
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு
கோடுகொண்(டு) எழுந்த கொடுஞ்செலவு எழிலி
6. பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை—

அருங்கடி மூதூர் மருங்கிற் போகி,
யாழிசை இனவண்(டு) ஆர்ப்ப, நெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்(பு) அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது,
11. பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப,

'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் "கைய
கொடுங்கோல் கோவலர் பின்நின்(று) உய்த்தர
இன்னே வருகுவர் தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
21. பருவரல் எவ்வங் களைமா யோய்!' எனக்,

காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
23. பூப்போல் உண்கண் புலம்புமுத்(து) உறைப்ப—

கான்யாறு தழீஇய அகன்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
28. படுநீர்ப் புணரியின் பரந்த பாடி

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்(து) யாத்த
வயல்விளை இன்குள(கு) உண்ணாது, நுதல்துடைத்(து)
34. அயில்நுனை மருப்பின் தங் கையிடைக் கொண்டென,

கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளங் கைப்ப,
கற்றோய்த்(து) உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
40. கூடங் குதித்துக் கயிறுவாங்(கு) இருக்கை—

பூந்தலைக் குந்தம் குத்திக், கிடுகு நிரைத்து,
வாங்குவில் அரணம் அரண மாக,
வேறுபல் பெரும்படை நாப்பண், வேறோர்
44. நெடுங்காழ்க் கண்டம் கோலி, அகம்நேர்பு

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்(து)
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
49. கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட,

நெடுநா ஒண்மணி நிழற்றிய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்(கு) அசைவந் தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
54. பெருமூ தாளர் ஏமஞ் சூழ,

பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
'எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
58. குறுநீர்க் கன்னல் இனைத்(து)' என்(று) இசைப்ப,

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறி(வு)உடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்
திருமணி விளக்கம் காட்டித், திண்ஞாண்
64. எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்—

உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையர் ஆக
67. மண்டமர் நசையொடு கண்படை பெறாது,

எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம்,—வேழத்துப்

பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்தி
சோறுவாய்த்(து) ஒழிந்தோர் உள்ளியும், தோல்துமி
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்(து) [பு
74. உண்ணா(து) உயங்கும் மா சிந் தித்தும்,

ஒருகை பள்ளி ஒற்றி, ஒருகை
76. முடியொடு கடகம் சேர்த்தி,நெடிது நினைந்து,
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசிருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை
80. இன் துயில் வதியுநன்—

காணாள் துயர் உழந்து,
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும், ஓடுவளை திருத்தியும்,
மையல் கொண்டும், ஒய்யென உயிர்த்தும்,
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி,இழை நெகிழ்ந்து,
பாவை விளக்கின் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந்(து) உயரிய எழுநிலை மாடத்து
முடங்(கு)இறைச் சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
89. அஞ்செவி நிறைய ஆலின,

வென்று, பிறர்
வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி, வலன்ஏர்பு
92. வயிரும் வளையும் ஆர்ப்ப,

அயிர
செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
97. கானம் நந்திய செந்நிலப் பெருவழி—

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப்(பு) இரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக்(கு) ஒழியத்
துனைபரி துரக்கும் செலவினர்
103. வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

வண்டடைந்த கண்ணி
 வளராய்ச்சி வாள்நெடுங்கண்
சென்றடைந்த நோக்கம்
 இனிப்பெறுவ(து)—என்றுகொல்
கன்றெடுத் தோச்சிக்
 கனிவிளவின் காய்உகுத்துக்
குன்றெடுத்து நின்ற
 நிலை

புனையும் பொலம்படைப்
 பொங்குளைமான் திண்டேர்
துனையும் துணைபடைத்
 துன்னார்—முனையுள்
அடல்முகந்த தானை
 அவர்வாரா முன்னம்
கடல்முகந்து வந்தன்று
 கார்.

2. புறநானூறு

இது எட்டுத் தொகையிலே ஒன்று. பதிற்றுப் பத்து மற்றையது; அது சேரவேந்தர்க்குரிய நூறு செய்யுட்களை யுடையது. அடுத்தது பரிபாடல்; பண்ணுடன் இது பாடப் பெற்றுவந்ததால் இதற்குத் தனிச் சிறப்புண்டு. இம் மூன்றும் புறப்பொருள் பற்றியவை; எஞ்சிய ஐந்தும் அகப்பொருள் தழுவி அமைந்தவை. மனைவாழ்வாகிய காதல் இன்பத்தைக் கூறுவது அகம்; அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் முயற்சிகளைக் கூறுவது புறம். இவ்வாறு, கவிதைக் குப் பொருளாக உள்ளனவற்றை அகம் என்றும், புறம் என்றும், பேசுவது தமிழ் மரபு.

தொகைநூற் செய்யுட்கள் பல்வேறு காலங்களில் பற்பல இடங்களிலே வாழ்ந்த புலவர் பலரால் பல சந்தர்ப்பங்களில் பாடப் பெற்றவை. இவர்களைக் கணக்கிட்டு 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்று களவியலுரை கூறுகிறது. சுமார் 25 புலவர்கள் புனைபெயரால் வழங்கப்படுகிறார்கள். நூற்றுக்கு 6 விழுக்காடு பெண்பாற் புலவர்கள் காணப்படு கிறார்கள்.

புறநானூறு முற்காலத்திலேயே மிகுதியாய்ப் பயிலப் பட்டு வந்தது. உரையாசிரியர்கள் பலரும் இதிலிருந்து மேற் கோள் கொடுத்திருக்கிறார்கள். இதிலே சரித்திர சம்பவங்கள் மலிந்துள்ளன. இதன் பொது இயல்பு யாது? சொல்லும் பொருளும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் அமைதி, கட்டுரை நலம்பட அமைந்த சொற்செறிவு, எளிமையும் எடுப்பும் வாய்ந்த செய்யுள் நடை - இவ்வியல்புகள் உள்ள இலக்கியச் செல்வம் என்றும் போற்றுதற்கு உரியது அல்லவா? மேலும், வரலாற்றுச் செய்திகளாலும் கருத்து ஆற்றலாலும், இது நிலைத்த புகழ் பெற்றுள்ளது. இயற்கைக் காட்சிகளையும் உணர்ச்சிகளையும் நயமாகக் கூறும் தன்மை நவிற்சி இதன் தனிப் பண்பு.

புறநானூறு

கோவூர்கிழார் பாடல்கள்

1. சோழன் நலங்கிள்ளியைப் பாடியது.

திணை : வாகை ; துறை - அரசவாகை ; மழபுலவஞ்சியுமாம்.

1. சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல,
இருகுடை பின்பட ஓங்கிய ஒரு குடை
உருகெழு மதியின் நிவந்து சேண் விளங்க—

நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே ;
நுதிமுகம் மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயுநின் களிறு அடங்கலவே ;
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடு நனி சேய
செல்வேம் அல்லேம் என்னார் ;
கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப் புலத்து இறுத்துக்,

குணகடல் பின்ன தாகக், குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப,
வலமுறை வருதலும் உண்டென்று அலமந்து
நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே.

திணை : பாடாண்திணை ; துறை - இயன்மொழி.

2. கடும்பின் அடுகலம் நிறையாக, நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவன் ஒன்றோ !
வண்ணம் நீவிய வணங்கிறைப் பணைத்தோள்
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவன் ; எல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள் !

தொன்னிலைக் கிழமை சுட்டின், நன்மதி
வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போல, அவன்
கொண்ட குடுமித்து இத்தண் பணை நாடே.

திணை : வாகை ; துறை - அரச வாகை.

3\. கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும், நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவம் எறிந்துகைக் கொண்டு,நின்
பேழ்வாய் உழுவை பொறிக்கு மாற்றலை.

பாடுநர் வஞ்சி பாடப், படையோர்
தாதெரு மறுகிற் பாசறை பொலியப்,
புலராப் பச்சிலை யிடை யிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
ஊன்சோற் றமலை பாண்கடும்பு அருத்துஞ்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை !

வல்லோன் தைஇய வரிவனப் புற்ற
அல்லிப் பாவை ஆடுவனப்பு ஏய்ப்பக்
காம இருவர் அல்லது யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
ஒதுக்கின் திணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயின் மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே.

திணை : பாடாண் திணை ; துறை - கடைநிலை.

4\. கடற்படை அடற்கொண்டி
மண்டுற்ற மறன்நோன்றாள்
தண்சோழ நாட்டுப்பொருநன்
அலங்குளை அணிஇவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்,

பிறர்ப்பாடிப் பெறல் வேண்டேம் ;
அவற்பாடுதும் அவன் தாள் வாழிய என ;
நெய் குய்ய ஊன் நவின்ற
பல சோற்றான் இன்சுவைய
நல்குவன்நின் பசித்துன்பற
என்பநின் பொருநர் பெரும, அதற்கொண்டு

முன்னாள் விட்டமூதறி சிறுஅரும்
யானும், ஏழ்மணியங் கேழணி உத்திக்
கட்கேள்விக் கவை நாவின்
நிறனுற்ற அராஅப்போலும்
வறனொரீஇ வழங்கு வாய்ப்ப
விடுமதி யத்தை கடுமான் றோன்றல் !

நினதே,முந்நீ ருடுத்தஇவ் வியனுலகுஅறிய ;
எனதே, கிடைக்காழ் அன்ன தெண்கண் மாக்கிணை ;
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோல்
எறிதொறும் நுடங்கி யாங்கு,நின் பகைஞர்
கேட்டொறும் நடுங்க ஏத்துவென்
வென்ற தேர் பிறர் வேத்தவை யானே.

2. நெடுங்கிள்ளியைப் பாடியது.

சோழன் நலங்கிள்ளி ஆவூர் முற்றியிருந்த காலத்து
அடைத்திருந்த நெடுங்கிள்ளியைப் பாடியது.

திணை : வாகை ; துறை - அரசவாகை.

5. இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்துஅரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்,
பாலில் குழவி அலறவும், மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்,
இன்னா தம்ம ஈங்கினி திருத்தல் !

துன்னருந் துப்பின் வயமான் தோன்றல் !

அறவை யாயின் நினதெனத் திறத்தல் ;
மறவை யாயின் போரொடு திறத்தல் ;
அறவையும் மறவையும் அல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொரு சிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்து இது காணுங்காலே.

• சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் பாடியது.

திணை : வஞ்சி ; துறை - துணைவஞ்சி.

6. *இரும்பனை வெண்தோடு மலைந்தோ னல்லன் ;*
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன் ;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே ; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ;
ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே ;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே ; அதனல்
குடிப்பொருள் அன்று நும்செய்தி ; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யும் இவ்விகலே.

சோழன் நலங்கிள்ளி யுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தான் என்று கொல்லப் புக்குழிப் பாடிஉய்யக் கொண்டது.

திணையும் துறையும் அவை.

7. *வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி*
நெடிய என்னது சுரம் பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை,
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே ;

திறப்பட

நண்ணர் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி(து) ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே.

3. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியது.

திணை : வஞ்சி ; துறை - கொற்றவள்ளை.

8. *காலனும் காலம் பார்க்கும் ; பாராது*
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே !

திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்,
பெரு மரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்,
வெங்கதிர்க் கனலி துற்றவும், பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்,
எயிறு நிலத்து வீழவும் எண்ணெ யாடவும்,
களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்,
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,
கனவின் அரியன காணூ நனவில்
செருச் செய் முன்ப!
நின்வரு திறல் நோக்கி,

மையல் கொண்ட ஏமமில் இருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்கு
எவ்வம் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றால் தானே
காற்றோடு
எரிநிகழ்ந் தன்ன செலவிற்
செரு மிகு வளவ! நிற் சினைஇயோர் நாடே.

திணை : பாடாண்திணை ; துறை - பாணாற்றுப்படை.

9. தேஎங் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண!
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோல் தகைத்த தெண்கண் மாக்கிணை
இனிய காண்க இவண் தணிக எனக் கூறி
வினவல் ஆனு முதுவாய் இரவல!

தைஇத் திங்கள் தண்கயம் போலக்
கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியன்நகர்
அடுதீஅல்லது சுடுதீ அறியாது
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவன் நல்லிசை உள்ளி,
நாற்ற நாட்டத்து அறுகாற் பறவை
சிறுவெள் ஆம்பல் ஞாங்கர் ஊதும்
கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழும் ஓதி ஒண்ணுதல்
இன்னகை விறலியொடு மென்மெல இயலிச்
செல்வை யாயின், செல்வை ஆகுவை.

விறகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பாடு அன்(று)அவன் ஈகை;
நினைக்க வேண்டா வாழ்க அவன் தாளே.

திணை : பாடாண்திணை ; துறை - வாழ்த்தியல்.

10. நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவும்,
சூடுகிழித்து வாடுன் மிசையவும்,
ஊன்கொண்ட வெண்மண்டை
ஆன்பயத்தான் முற்றழிப்பவும்,
வெய்துண்ட வியர்ப்பல்லது
செய் தொழிலான் வியர்ப்பறியாமை
ஈத்தோன் எந்தை இசைதன தாக—

வயலே, நெல்லின்வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர்ப் பூத்ததும்பின்று ;
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில் இருந்த வெங்குறும்பின்று ;
கடலே, கால்தந்த கலன் எண்ணுவோர்
கானற் புன்னைச் சினைஅலைக்குந்து ;
கழியே, சிறுவெள் ளுப்பின் கொள்ளைசாற்றிப்
பெருங்கல் நன்னாட்டுஉமண் ஒலிக்குந்து ;
அன்னநன்னாட்டுப் பொருநம் யாமே !

பொராஅப் பொருநரேம்

குணதிசை நின்று குடமுதற் செலினும்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினும்
தென்திசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளி ; யாம்
வேண்டியது உணர்ந்தோன் தாள் வாழியவே !

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான்
மக்களை யானைக் கிடுவுழிப் பாடி உய்யக் கொண்டது.

திணையும் - துறையும் அவை.

11. நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை ;
இவரே, புலன்உழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர் ;
களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர் ;
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே.

திணை : வாகை : துறை - மூதின் முல்லை.

(பாடப்பட்டோர் அறியப்படவில்லை.)

12\. பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக் குரல் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண !

சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்
வேந்தூர் யானை ஏந்து முகத்ததுவே ;
வேந்(து)உடன் றெறிந்த வேலே என்னை
சாந்தார் அகலம் உளங்கழிந் தன்றே ;
உளங்கழி சுடர்ப்படை யேந்தி,நம் பெருவிறல்
ஓச்சினன் துரந்த காலை, மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சரம் எல்லாம் புறக்கொடுத் தனவே.

3. திருக்குறள்

திருவள்ளுவர் எக்குலத்தினர்? எக்காலத்தினர்? எம் மதத்தினர்? அவர் இல்லறத்தாரா? துறவியரா?—இந்த வினக்களுக்கு எழுந்துள்ள விடைகள் வேடிக்கையாய் இருக்கின்றன. அவர் எவரேனும் ஆகுக. தமிழ்நாட்டின் தனிப் பெருஞ் சோதி அவர். தமிழிற் பிறந்து, தமிழில் வளர்ந்து தமிழே ப்யின்று, பிறமொழிகளையும் தெரிந்து, சாதிமதச் சழக்குகளைக் கடந்து, எந்நாட்டவரும் எச்சமயத்தவரும் உச்சி மேற் கொண்டு போற்றும் அருமைத் திருக்குறளை உலகுக்கு உதவிய பெரியார் அவர்; இதிலே ஐயம் இல்லை.

திருக்குறளிலே கூறப்பெற்றுள்ள கருத்துக்கள் எல்லா முமே வள்ளுவர்க்குச் சொந்தம் என்று சொல்லுவதற்கில்லை. பழங்கால ஞானத்தையும் நாகரிகப் பண்பையும் அடிப் படையாகக் கொண்டு அவர் குறள் நூல் இயற்றினர். நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் வேரூன்றி வளர்ந்த கொள்கை களை அவர் குறள் வடிவிலே கூறினர். அதன்மூலம் அவர் தமிழ்மொழிக்கு அற்புதமான குரலைக் கொடுத்தார். தமிழ்ச் சொல்லுக்குத் தெளிவும் ஒளியும் கொடுத்தார்.

திட்பமும் நுட்பமும் செறிந்த தமது சிந்தனைகளைத் தெரிவிக்கத் தமிழிலே விருத்தம் தாழிசை முதலிய வளமான பாவினங்கள் மிகுந்திருக்கவும், அவைகளை ஒதுக்கிவிட்டு, ஊசி முனையிலே நிற்பவர்போல, ஒன்றே முக்காலடியிலே காட்சி தரும் வள்ளுவர், கட்டுப்பாட்டுள் அடங்குவதன் மூலந்தான் மனிதன் உண்மையான வல்லமையைப் பெறலாம் என்பதை வலியுறுத்துகிறார் போலும்.

'ஒழுக்கமே மனிதனுடைய உன்னதமான இலட்சியமாய் இருக்கவேண்டும் என்பதை மிகுந்த துணிச்சலோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பதைப் பற்றிச் சிறந்த பண் பாட்டோடும் விவேகத்தோடும் அவர் பேசுகிறார். உலக இலக்கியத்திலே இவ்வளவு மகோன்னதமான ஞானம் வேறு ஒரு நூலினும் இல்லை என்று சொல்லலாம்' என்கிறார் ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் என்ற ஜெர்மானியத் தத்துவஞானி.*

---

* அவர் எழுதிய இந்திய சிந்தனை - எஸ். மகராசன், சப்-ஜட்ஜ் மொழி பெயர்ப்பு.

இதற்கு அவர் எடுத்தியம்பும் ஆதாரக் குறள்களிலே நமக்குப் பாடமாய் உள்ளவை பின்வருவன.

999. 'நகைச் சுவையோடு பழகத் தெரியாதவன் இதயத்திலே பட்டப்பகலிலும் அமாவாசை இருட்டுத்தான்.'

1007. 'ஒன்றும் இல்லாதவர்களுக்கு உதவாதவனுடைய செல்வம், காலத்தைக் கன்னியாய்க் கழித்துக் கிழடு தட்டிப் போன கட்டழகிக்குச் சமானமாகும்.'

அறத்துப் பாலிலே ஒழுக்கத்தை வலியுறுத்திப், பொருட் பாலிலே அவ்வொழுக்கந் தானும் நல்லாட்சியால் எய்தப் பெறுவதாகும் என்ற வள்ளுவர், மக்களுடைய பொறுப்புக் களையும் கடமைகளையும் ஒழிபியலிலே பேசுகிறார். அது நமக்குப் பாடம். வாழ்க்கையின் உண்மை உயர்வுகளை உணர்ந்து, மக்கள் ஒழுக்கம் உடையவராகிப் பொறுப் பேற்றுக் கடமை புரிந்து ஒப்புரவாற்றற் கென்றே இது எழுதப்பெற்றது.

எங்கே அறிஞர் மிகுந்து மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனரோ, எங்கே வணிகரும் உழவரும் கம்மியரும் அடுத்தடுத்திருந்து நண்புடனும் பண்புடனும் பழகுகின்றனரோ, எங்கே அன்பும் அமைதியும் நிறைந்து நிலவுகின்றனவோ அந்த நாடு நல்ல நாடு; அதன் ஆட்சி நல்லாட்சி. இந்த நல்லாட்சியை அரசியல் வலியால் அன்று, ஒருமை ஒத்துழைப்பு அன்பால் சாதிப்பதற்குச், சாதிசமயங்கடந்த சமரசப் பெருநோக்குடன் வள்ளுவர் திருக்குறளை எழுதினர்.

திருக்குறள்—ஒழிபியல்

1. குடிமை

1. இல்-பிறந்தார் கண்ணல்லது இல்லை, இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

3. நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும், பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.

6. சலம்பற்றிச் சால்பில செய்யார்,மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

8. நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

9. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும், காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்.

10. நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்; குலம்வேண்
வேண்டுக யார்க்கும் பணிவு. [டின்

2. மானம்

1. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

2. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

4. தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

5. குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின்.

6. புகழ்இன்றால் புத்தேள் நாட்(டு) உய்யாதால் என்
இகழ்வார்பின் சென்று நிலை? [மற்று

7. ஒட்டார்பின் சென்(று) ஒருவன் வாழ்தலின் அந்நிலை
கெட்டான் எனப்படுதல் நன்று. [யே

8. மருந்தோமற்(று) ஊன்ஓம்பும் வாழ்க்கை, பெருந்
பீடழிய வந்த இடத்து? [தகைமை

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்.

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளி,தொழுது ஏத்தும் உலகு.

3. பெருமை

1. ஒளி ஒருவற்(கு) உள்ள வெறுக்கை; இளி ஒருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும் எனல்.

2. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

3. மேலிருந்தும் மேல் அல்லார் மேலல்லார்; கீழிருந்தும்
கீழ்அல்லார் கீழல் லவர்.

4. ஒருமை மகளிரே போலப், பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

5. பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின்
அருமை உடைய செயல்.

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை, பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

7. இறப்பே புரிந்த தொழிற்றாம், சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.

8. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

9. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

10. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

---

10. **பாட பேதம்,**

அற்றம் மறைக்கும் சிறுமை பெருமைதான்
குற்றமாக் கொண்டு விடும்—காளிங்கர்
அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

4. சான்றாண்மை

1. கடன்என்ப நல்லவை எல்லாம், கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2. குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

4. கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?

8. இன்மை ஒருவற்(கு) இளிவன்று, சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்.

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

5. பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்,
பண்புடைமை என்னும் வழக்கு.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

3. உறுப்(பு)ஒத்தல் மக்கள் ஒப்பன்றால், வெறுத்
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. [தக்க

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

5. நகையுள்ளும் இன்னா(து) இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

6. பண்புடையார்ப் பட்டுண்(டு) உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

7. அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

8. நண்புஆற்றார் ஆகி, நயம்இல செய்வார்க்கும்
பண்புஆற்றார் ஆதல் கடை.

9. நகல்வல்லர் அல்லார்க்கு, மாயிரு ஞாலம்,
பகலும்பாற் பட்டன்(று) இருள்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம், நன்பால்
கலந்தீமை யால்திரிந்(து) அற்று.

6. நன்றியில் செல்வம்

1. வைத்தான்,வாய் சான்ற பெரும்பொருள்—அஃ(து)
செத்தான் செயக்கிடந்த தில். [உண்ணான்

2. பொருளான்ஆம் எல்லாம் என்(று), ஈயா(து) இவறும்
மருளான்ஆம் மாணா பிறப்பு.

3. ஈட்டம் இவறி, இசைவேண்டா ஆடவர்
தோற்றம், நிலக்குப் பொறை.

4. எச்சம்என் றுஎன் எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்?

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்(கு) அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்.

6. ஏதம் பெருஞ்செல்வம், தான் துவ்வான் தக்கார்க்(கு)
ஈதல் இயல்பிலா தான். [ஒன்று

7. அற்றார்க்கு ஒன்று ஆற்றா தான் செல்வம், மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

8. நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

9. அன்(பு)ஒரீஇத், தற்செற்று அறம்நோக்கா(து)
ஒண்பொருள் கொள்வார் பிறர். [ஈட்டிய

10. சீருடைச் செல்வர் சிறுதுனி, மாரி
வறங்கூர்ந் தனைய(து) உடைத்து.

7. நாணுடைமை

1. கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2. ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

3. ஊனைக் குறித்த உயிர்எல்லாம்; நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

4. அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்(கு);
பிணி அன்றோ பீடு நடை. [அ∴தின்றேல்

5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)
உறைபதி என்னும் உலகு.

6. நாண்வேலி கொள்ளாது, மன்னோ, வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7. நாணால் உயிரைத் துறப்பர், உயிர்ப்பொருட்டால்
நாண் துறவார், நாண் ஆள் பவர்.

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்,
அறம்நாணத் தக்க(து) உடைத்து.

9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை.

10. நாண்அகத்து இல்லார் இயக்கம், மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

8. குடிசெயல் வகை

1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின், பீடுடையது இல்.

2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி.

3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத், தெய்வம்
மடிதற்று தான்முந் துறும்.

4. சூழாமல் தானே முடி(வு) எய்தும், தன்குடியைத்
தாழா(து) உஞற்று பவர்க்கு.

5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்,
சுற்றமாச் சுற்றும் உலகு.

6. நல்லாண்மை என்ப(து) ஒருவற்குத், தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

7. அமர்அகத்து வன்கண்ணர் போலத், தமர்அகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க்(கு) இல்லை பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ, குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு ?

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும், அடுத்துஊன்றும்
நல்லாள் இலாத குடி.

9. உழவு

1. சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் ; அதனால்
உழந்தும் உழவே தலை.

2. உழுவார் உலகத்தார்க்(கு) ஆணி, அ.:.(து) ஆற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்,
அலகுடை நீழ லவர்.

5. இரவார், இரப்பார்க்கு ஒன்(று)ஈவர், கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை, விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை.

7. தொடிப் புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினும் நன்றால் எருவிடுதல் ; கட்டபின்
நீரினும் நன்(று)அதன் காப்பு.

9. செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

10. இலம்என்(று) அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

பாடபேதம். 9. நிலமடந்தை, புல்லாள் புரளவிடும்.
10. இரப்பாரை.

10. நல்குரவு

1. இன்மையின் இன்னாத(து) யாதெனின், இன்மையின்
இன்மையே இன்னா தது.

2. இன்மை என ஒரு பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக,
நல்குர(வு) என்னும் நசை.

4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை, இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

5. நல்குர(வு) என்னும் இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று விடும்.

6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

7. அறஞ்சாரா நல்குர(வு) ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

10. துப்புர(வு) இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

11. இரவு

1. இரக்க இரத்தக்கார்க் காணின் ; கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.

2. இன்பம் ஒருவற்(கு) இரத்தல், இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

3. கரப்பிலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று
இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து.

4. இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றா தார் மாட்டு.

5. கரப்பிலார் வையகத் துண்மையான் கண்நின்று
இரப்பவர் மேற்கொள் வது.

6. கரப்பிடும்பை இல்லாரைக் காணின், நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

7. இகழ்ந்தெள்ளா(து) ஈவாரைக் காணின், மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப(து) உடைத்து

8. இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று,

9. ஈவார்கண் என்உண்டாம் தோற்றம், இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை?

10. இரப்பான் வெகுளாமை வேண்டும், நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

12. இரவச்சம்

1. கரவா(து) உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான்.

3. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின், வன்பாட்ட(து) இல்.

4. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே, இடம் இல்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

5. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்.

6. ஆவிற்கு நீர்என்(று) இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்.

7. இரப்பன் இரப்பாரை எல்லாம், இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

8. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9. இர(வு)உள்ள உள்ளம் உருகும்; கர(வு) உள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

10. கரப்பவர்க்(கு) யாங்கொளிக்கும் கொல்லோ? இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

13. கயமை

1. மக்களே போல்வர் கயவர்; அவர் அன்ன
ஒப்பார் யாங்கண்ட(து) இல்.

2. நன்றறி வாரின் கயவர் திருவுடையர்,
நெஞ்சத் தவலம் இலர்.

3. தேவர் அனையர் கயவர், அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

4. அகப்பட்டி யாவாரைக் காணின், அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

5. அச்சமே கீழ்கள(து) ஆசாரம்; எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

6. அறைபறை அன்னர் கயவர், தாம்கேட்ட
மறைபிறர்க்(கு) உய்த்துரைக்க லான்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு,

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

10. எற்றிற் குரியர் கயவர்? ஒன்(று) உற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

4. சிலப்பதிகாரம்

ஐம் பெருங் காப்பியங்களிலே சிலப்பதிகாரம் மிகவும் சிறந்தது. தமிழ் மக்களின் பழைமையான நாகரிகம் பண்பாடு கலைகளைப் பற்றிய பல நுட்பமான செய்திகளைத் தெரிவிப்ப தால் இதற்குச் சிறந்த மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுக்குச் சொந்தமான ஒரு நல்ல தமிழ்க் கதையைப் பொருளாகக் கொண்ட முதல் தமிழ் நூல் இதுதான்.

அரசர், நீதியிற் சிறிது பிழைப்பினும் அவரை அறக் கடவுள் கூற்றாய் நின்று கொல்லும்; கற்புடைய மகளிரை மக்களே அன்றித் தேவரும் முனிவரும் துதிப்பர்; இருவினை யும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து, தம்பயனை நுகர்விக்கும்—இம் மூன்று உண்மைகளையும் உலகுக்கு உணர்த்தவே சேர முனிவராகிய இளங்கோஅடிகள் இதனை இயற்றினர். இது பிரமாண நூல்களுள் ஒன்று.

இயல்-தமிழின் பாகுபாடான அகவல், வெண்பா, கலிப் பாக்களும், இசைத் தமிழான வரிப்பாடல்களும், நாடகத் தமிழான உரைப்பாட்டுக்களும் இந்நூலிலே பயின்றுள்ளன. ஆதலின், இதை முத் தமிழும் விரவப்பெற்றது என்பர். தமிழ் மக்களின் கலைவளத்தை அறிவிக்கும் கருவி நூலாவது போலவே, இது பழந்தமிழகத்தின் சரிதநூலும் ஆம். மூவேந்தரது அறம், மறம், ஆணை, குடிமக்களின் ஒழுக்கம், ஊக்கம், ஒப்புரவு, மற்றும் உழவு, தொழில், வணிகம், ஆகிய பல துறைகளிலும் மேம்பட்ட தமிழகத்தைச் சிலப்பதிகாரத் திலே காணலாம்.

இதன் இலக்கியச் சிறப்பைக் கற்பனை வளங்களிலே காணலாம்; அகவல் நடையின் நயங்களிலே காணலாம்; பண் அமைந்த கவிதைகளிலே காணலாம். இதன் வரிப் பாடல்களைப் பாடி அல்லது படித்து அனுபவிக்க முடியா தவர்கள் கவிதைக்குத் தலைமுழுக்குப் போடுவதுதான் நல்லது.

சிலப்பதிகாரம்

1. வாழ்த்துக் காதை

[செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் (பிரதிஷ்டை) செய்த பிறகு, தேவந்தியும் செவிலித்தாயும் அடித்தோழியும் மதுரை சென்று, மாதரி மகள் ஐயையுடன் மலைநாடு சேர்ந்து, கண்ணகி கோயிலிற் புகுந்து, ஆற்றாமையால் வருந்தி அரற்றினர். அப்போது கண்ணகி காட்சி நல்கி வாழ்த்தினள்.]

உரைப்பாட்டு மடை

குமரியொடு வட-இமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத், திகழ்ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள்[1] ஈன்ற மைந்தன்—

கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேர்யாற்றுக் கரை போகிய[2] செங்குட்டுவன் சினஞ்செருக்கி வஞ்சியுள் வந்திருந்த காலை—

வட-ஆரிய மன்னர் ஆங்கோர் மடவரலை மாலைசூட்டி, உடனுறைந்த இருக்கைதன்னில், ஒன்றுமொழி நகையினராய்த் "தென்தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்தவழும் இமய நெற்றியில் விளங்கு வில், புலி, கயல் பொறித்த நாள் எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்" என்ற வார்த்தை—

அங்கு வாழும் மாதவர் வந்து அறிவுறுத்த இடத்து, ஆங்கண் உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்ததுபோல், இமயமால்வரைக் கல் கடவுளாம் என்ற வார்த்தை இடந்துரப்ப—

ஆரிய நாட்டரசோட்டி அவர் முடித்தலை அணங்காகிய பேரிமயக் கல் சுமத்திப் பெயர்ந்து போந்து, நயந்த கொள்கையின் கங்கைப் பேர் யாற்றிருந்து நங்கை தன்னை நீர்ப்படுத்தி, வெஞ்சினம் தரு வெம்மை நீங்கி, வஞ்சிமாநகர் புகுந்து, நிலவரசர் நீள்முடியால் பலர்தொழு படிமங் காட்டித், தடநகில்-பூசலாட்டியைக் கடவுள் மங்கலஞ் செய்த பின்னாள்,

கண்ணகிதன் கோட்டத்து மண்ணரசர் திறை

கேட்புழி—

---

1. சோழன் மகள் - நற்சோணை என்பர் அடியார்க்கு நல்லார்; மணக்கிள்ளி என்னும் பதிற்றுப்பத்து.

2. தன்தாயின் அங்கத்தைக் கங்கையாற்றிலே கரைப்பதற்காகக் கொண்டுபோனது போலும்.

அலம்வந்த மதிமுகத்திற் சில செங்கயல் நீர் உமிழப், பொடியாடிய கருமுகில்தன் புறம் புதைப்ப, அறம்பழித்துக் கோவலன் தன் வினை உருத்துக் குறுமகனல் கொலையுண்ணக், காவலன் தன் இடஞ்சென்ற கண்ணகிதன் கண்ணீர் கண்டு—

மண்ணரசர் பெருந்தோன்றல் உண்ணீர் அற்று உயிர் இழந்தமை மாமறையோன் வாய்க் கேட்டு, மாசாத்துவான் தான் துறப்பவும் மனைக்கிழத்தி உயிர் இழப்பவும் எனைப் பெருந்துன்பம் எய்திக், காவற் பெண்டும், அடித்தோழியும், கடவுட் சாத்தனுடன் உறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் காண்டும் என்று—

மதுரைமாநகர் புகுந்து, முதிரா நகில்-பூசல் கேட்டு, ஆங்கு அடைக்கலம் இழந்து உயிர் இழந்த இடைக்குல மகளிடம் எய்தி ஐயையவள் மகளோடும் வையை ஒருவழிக் கொண்டு, மாமலை மீமிசை ஏறிக் கோமகள்தன் கோயில் புக்கு, நங்கைக்குச் சிறப்பு அயர்ந்த செங்குட்டுவற்குத் திறம் உரைப்பர்மன்.

சிலப்பதிகாரம்—1. வாழ்த்துக் காதை

தேவந்தி சொல்

1. மூடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வ
வடபேர் இமய மலையிற் பிறந்து,
கடுவரற் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத்
தோழிநான் கண்டீர் ;
சோணாட்டார் பாவைக்குத்
தோழிநான் கண்டீர்.

காவற்பெண்டு சொல்

2. மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள், காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கன்னிக்குத்
தாயர்நான் கண்டீர் ;
தண்புகார்ப் பாவைக்குத்
தாயர்நான் கண்டீர்.

அடித்தோழி சொல்

3. தற்பயந் தாட் கில்லை, தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கும் எனக்கும் ஓர் சொல்லில்லை ;
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத்
தோழிநான் கண்டீர் ;
பூம்புகார்ப் பாவைக்குத்
தோழிநான் கண்டீர்.

தேவந்தி யரற்று

4. செய்தவம் இல்லாதேன் தீக்கனுக் கேட்டநாள்
எய்த உணரா திருந்தேன்மற் றென்செய்தேன் ?
மொய்குழல் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும்
கேட்டாயோ தோழீ ?
அம்மாமி தன்வீவும்
கேட்டாயோ தோழீ ?

காவற் பெண்டரற்று

5. கோவலன் தன்னைக் குறுமகன் கோள்இழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டேங்கிச்
சாவதுதான் வாழ்வென்று தானம் பல செய்து,
மாசாத்து வான்துறவும்
கேட்டாயோ அன்னை ?
மாநாய்கன் தன் துறவும்
கேட்டாயோ அன்னை ?

அடித்தோழி யரற்று

6. காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாம்கூறும் ஏச்சுரையுங் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம் புரிந்த
மாதவி தனதுறவும்
கேட்டாயோ தோழீ ?
மணிமே கலைதுறவும்
கேட்டாயோ தோழீ ?

தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றியது

7. ஐயம்தீர் காட்சி அடைக்கலம் காத்தோம்ப
வல்லாதேன், பெற்றேன் மயலென்று உயிர்நீத்த
அவ்வை மகள்இவள்தான் அம்மனம் பட்டிலா
வையெயிற்று ஐயையைக்
கண்டாயோ தோழீ ?
மாமி மடமகளைக்
கண்டாயோ தோழீ ?

செங்குட்டுவன் கூற்று

8. என்னே இஃ(து)என்னே இஃ(து)என்னே இஃதென்னே
பொன்னம் சிலம்பிற் புனைமே கலை வளைக்கை [கொல்!
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடி யொன்று மீவிசும்பில் தோன்றுமால்.

கண்ணகி கடவுள்நல்லணி காட்டியது.

9. தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினன்; நான்அவன் தன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு யான்அகலேன்
என்னோடும் தோழிமீர்!
எல்லீரும் வம்மெல்லாம்.

வஞ்சிமகளிர் சொல்

10. வஞ்சியீர்! வஞ்சி யிடையீர்! மறவேலான்
பஞ்சடி ஆயத்தீர்! எல்லீரும் வம்மெல்லாம்;

கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்;
தென்னவன் தன் மகளைப் பாடுதும் வம்மெல்லாம்;

செங்கோல் வளைய உயிர்வாழார் பாண்டியர் என்று
எங்கோ முறைநா இயம்ப, இந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்;
பாண்டியன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்.

ஆயத்தார் சொல்

11. வானவன் எங்கோ மகளென்றான்; வையையார்
கோனவன்தான் பெற்ற கொடியென்றான்—வான
வாழ்த்துவோம் நாமாக, வையையார் கோமானை [வனை
வாழ்த்துவாள் தேவ மகள்.

வாழ்த்து

12. தொல்லை வினையால்
துயர்உழந்தாள் கண்ணின் நீர்
கொல்ல உயிர்கொடுத்த
கோவேந்தன் வாழியரோ,
வாழியரோ வாழி
வருபுனல் நீர் வையை
சூழும் மதுரையார்
கோமான்தன் தொல்குலமே.

13. மலையரையன் பெற்ற
மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண் முடிமேல்
ஏற்றினான் வாழியரோ,
வாழியரோ வாழி
வருபுனல்நீர்த் தண்பொருநை
சூழ்தரும் வஞ்சியார்
கோமான்தன் தொல்குலமே.

14. எல்லா நாம்:
காவிரி நாடனைப் பாடுதும், பாடுதும்;
பூவிரி கூந்தல் புகார்.

அம்மானை வரி

15. வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை ?
ஓங்கரணங் காத்த உரவோன், உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை.
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.

16. புறவு நிறைபுக்குப், பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை ?
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை.
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.

17. கடவரைகள் ஓரெட்டும் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன்யார் அம்மானை ?
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன்திக் கெட்டும்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்காண் அம்மானை.
கொற்றவன்தன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.

18. அம்மனை தங்கையிற் கொண்(டு)அங்(கு) அணியிழையார்
தம்மனையிற் பாடும் தகையேலோர் அம்மானை.
தம்மனையிற் பாடுந் தகையெலாம் தார்வேந்தன்
கொம்மை வரிமார்பிற் கூடவே அம்மானை
கொம்மை வரிமார்பிற் கூடிற் குலவேந்தன்
அம்மென் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.

கந்துக வரி

19\. பொன்னிலங்கு பூங்கொடி
பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கஎன்று
சென்றுபந் தடித்துமே
தேவர்ஆர மார்பன்வாழ்க
என்றுபந் தடித்துமே.

20\. பின்னும்முன்னும் எங்கணும்
பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் இளங்கொடி
வியனிலத்(து) இழிந்தெனத்,
தென்னன்வாழ்க வாழ்கஎன்று
சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க
என்றுபந் தடித்துமே.

21\. துன்னிவந்து கைத்தலத்(து)
இருந்ததில்லை நீள்நிலந்
தன்னி னின்றும் அந்தரத்து
எழுந்ததில்லை தான்எனத்,
தென்னன்வாழ்க வாழ்கஎன்று
சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க
என்றுபந் தடித்துமே.

ஊசல் வரி

22. வடங்கொள் மணிஊசன் மேல்இரீஇ, ஐய
உடங்(கு)ஒருவர் கைநிமிர்த்துஆங்கு ஒற்றைமே
கடம்பு முதல்தடிந்த காவலனைப் பாடிக், [லாக்கக்
குடங்கை நெ(டு)ங் கண்பிறழ
ஆடாமோ ஊசல்
கொடுவிற் பொறிபாடி
ஆடாமோ ஊசல்.

23. ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்,
கார்செய் குழலாட
ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி
ஆடாமோ ஊசல்.

24. வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி ஆண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் கும்கோமான் மன்னன் திறம்பாடி,
மின்செய் இடைநுடங்க
ஆடாமோ ஊசல்
விறல்விற் பொறிபாடி
ஆடாமோ ஊசல்.

25. தீங்கரும்பு நல்லுலக்கை யாகச், செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர் ;
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோள்
பாடலே பாடல் !
பாவைமார் ஆரிக்கும்
பாடலே பாடல் !

26. பாடல்சான் முத்தம் பவள உலக்கையால்
மாட மதுரை மகளிர் குறுவரே;
வானவர்கோன் ஆரம் வயங்கியதோட் பஞ்சவன்தன்
மீனக் கொடிபாடும்
பாடலே பாடல் !
வேப்பந்தார் நெஞ்சுணக்கும்
பாடலே பாடல் !

27. சந்துரற் பெய்து, தகைசால் அணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால் ;
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த
பாடலே பாடல் !
பனந்தோ(டு)உளங் கவரும்
பாடலே பாடல் !

28. ஆங்கு,
நீள்நில மன்னர் நெடுவிற் பொறையன்நல்
தாள்தொழார் வாழ்த்தல் தமக்கரிது ; சூழொளிய
எங்கோ மடந்தையும் ஏத்தினள் நீடூழி
செங்குட் டுவன்வாழ்க என்று.

2. வரந்தரு காதை

வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை
கடவுட் கோலம் கட்புலம் புக்கபின்,
தேவந் திகையைச் செவ்விதின் நோக்கி
வாயெடுத்து அரற்றிய மணிமே கலையார் ?
5. யாதவள் துறத்தற்கு ஏது? ஈங் குரை ? என—

'கோமகன் கொற்றங் குறைவின்று ஓங்கி
நாடு பெருவளஞ் சுரக்கெ'ன்று ஏத்தி,
அணிமே கலையார் ஆயத் தோங்கிய
9. மணிமே கலைதன் வான்துறவு உரைக்கும்.

'மையீர் ஓதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது ;
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
அவ்வியம் அறிந்தன, அதுதான் அறிந்திலள் ;
ஒத்தொளிர் பவளத்(து) உள்ளொளி சிறந்த
15. நித்தில இளநகை நிரம்பா அளவின ;

புல்லகம் அகன்றது ;
தளர்இடை நுணுகலும் தகைஏர் பரந்தது ;
குறங்(கு)இணை திரண்டன ; கோலம் பொருஅ
நிறங்கிளர் சீறடி நெய்தோய் தளிரின ;
தலைக்கோல் ஆசான் பின்உளன் ஆகக்,
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார் ;
யாது நின்கருத்து என்செய் கோ ? என,
23. மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப,—

'வருகஎன் மடமகள் மணிமே கலைஎன்(று),
உருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத்(து) எறியக்,
கோதைத் தாமங் குழலொடு களைந்து
28. போதித் தானம் புரிந்(து)அறம் படுத்தனள்.

'ஆங்கது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர்
தம்மின் துன்பம் தாம்நனி எய்த,
செம்மொழி மாதவர், சேயிழை நங்கை

தன்துறவு எமக்குச் சாற்றினள் என்றே
அன்புறு நன்மொழி அருளொடுங் கூறினர்.
பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோலம் நீங்கினள்; ஆதலின்
37. அரற்றினென்' என்றாங்(கு) அரசற் குரைத்தபின்—

குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்,
துடித்தனள் புருவம்; துவரிதழ்ச் செவ்வாய்
மடித்தெயி(று) அரும்பினள்; வருமொழி மயங்கினள்;
திருமுகம் வியர்த்தனள்; செங்கண் சிவந்தனள்;
கைவிட் டோச்சினள்; கால்பெயர்த் தெழுந்தனள்;
பலரறி வாராத் தெருட்சியள்; மருட்சியள்;
உலறிய நாவினள்; உயர்மொழி கூறித்
45. தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்—

'கொய்தளிர்க் குறிஞ்சிக் கோமான் தன்முன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார் மாண்இழை யோருள்
அரட்டன் செட்டிதன் ஆயிழை ஈன்ற
இரட்டையம் பெண்கள் இருவரும், அன்றியும்
ஆடக மாடத்(து) அரவணைக் கிடந்தோன்
52. சேடக் குடும்பியின் சிறுமகள் ஈங்(கு)உளள்;

'மங்கல மடந்தை கோட்டத்(து) ஆங்கண்
செங்கோட்(டு) உயர்வரைச் சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கல் பிடர்த்தலை, நிரம்பிய
அணிகயம் பலவுள; ஆங்கவை யிடையது
கடிப்பகை நுண்கலும் கவிர்இதழ்க் குறுங்கலும்
இடிக்கலப்பு அன்ன இழைந்துகு நீரும்
உண்(டு)ஓர் சுனை;அத னுள்புக்(கு) ஆடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர்; ஆதலின்,
ஆங்கது கொணர்ந்து ஆங்(கு) ஆயிழை கோட்டத்(து)
ஓங்கிருங் கோட்டி இருந்தோய்! உன்கைக்
குறிக்கோள் தகையது கொள்கெனத் தந்தேன்;
உறித்தாழ் கரகமும் உன்கைய தன்றே;
கதிர்ஒழி காறுங் கடவுள் தன்மை
முதிரா(து) அந்நீர் முத்திற மகளிரைத்
தெளித்தனை ஆட்டின்இச் சிறுகுறு மகளிர்
ஒளித்த பிறப்பினர் ஆகுவர் காணாய்;

பாசண் டன்யான், பார்ப்பனி தன்மேல்
70. மாடல மறையோய்! வந்தேன்' என்றலும்—

மன்னவன் விம்மிதம் எய்தி,அம் மாடலன்
72. தன்முகம் நோக்கலும், தான்தனி மகிழ்ந்து,

'கேள்இது மன்ன! கெடுக,நின் தீயது;
மாலதி என்பாள் மாற்றாள் குழவியைப்
பால்சுரந் தூட்டப், பழவினை உருத்துக்
கூற்றுயிர் கொள்ளக், குழவிக் கிரங்கி
ஆற்றாத் தன்மையள் ஆரஞர் எய்திப்
பாசண் டன்பால் பாடு கிடந்தாட்(கு)
ஆசில் குழவி அதன்வடி வாகி,
வந்தனன் அன்னைநீ வான்துயர் ஒழிகெனச்,
செந்திறம் புரிந்தோன் செல்லல் நீக்கிப்
பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பால்
காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து,
தேவந் திகையைத் தீவலஞ் செய்து,
நாலீ ராண்டு நடந்ததற் பின்னர்,
மூவா இளநலங் காட்டி, 'என் கோட்டத்து
87. நீவா' என்றே நீங்கிய சாத்தன்,

'மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
அங்குறை மறையோ னாகத் தோன்றி,
உறித்தாழ் கரகமும் என்கைத் தந்து,
குறிக்கோள் கூறிப் போயினன் வாரான்;
ஆங்கது கொண்டு போந்தேன் ஆதலின்,
ஈங்கிம் மறையோள் தன்மேல் தோன்றி
அந்நீர் தெளிஎன்(று) அறிந்தோன் கூறினன்;
மன்னர் கோவே! மடந்தையர் தம்மேல்
96. தெளித்தீங் கறிகுவம்' என்றுஅவன் தெளிப்ப—

ஒளித்த பிறப்புவந் துற்றதை ஆதலின்,
98. 'புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்
இகழ்ந்(து) அதற்(கு) இரங்கும் என்னையும் நோக்காய்;
ஏதில் நன்னாட்(டு) யாருமில் ஒருதனிக்
காதலன் தன்னொடு கடுந்துயர் உழந்தாய்;
யான்பெறு மகளே! என்துணைத் தோழீ!
103. வான்துயர் நீக்கும் மாதே வாராய்!'

'என்னோ டிருந்த இலங்கிழை நங்கை
தன்னோ(டு,) இடையிருள் தனித்துயர் உழந்து,
போனதற் கிரங்கிப் புலம்புறு நெஞ்சம்
107. யானது பொறேஎன், என்மகன் வாராய்!'

'வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தேன்;
உருகெழு மூதூர் ஊர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணேன்
எந்தாய்! இளையாய்! எங்கொளித் தாயோ?'
என்றாங்(கு) அரற்றி, இனைந்தினைந் தேங்கிப்

பொன்தாழ் அகலத்துப் போர்வெய் யோன்முன்
குதலைச் செவ்வாய்க் குறுந்தொடி மகளிர்
115. முதியோர் மொழியின் முன்றில் நின்றழத்—

தோடலர் போந்தைத் தொடுகழல் வேந்தன்
117. மாடல மறையோன் தன்முகம் நோக்க,

'மன்னர் கோவே! வாழ்'கென் றேத்தி,
119. முந்நூல் மார்பன் முன்னிய(து) உரைப்போன்,

'மறையோன் உற்ற வான்துயர் நீங்க,
உறைகவுள் வேழக் கையகம் புக்கு
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலிதன் மேற் காதல ராதலின்,
மேனிலை யுலகத் தவருடன் போகும்
தாவா நல்லறஞ் செய்திலர்; அதனால்
அஞ்செஞ் சாயல் அஞ்சா தணுகும்
வஞ்சி மூதூர் மாநகர் மருங்கில்
பொற்கொடி தன்மேற் பொருந்திய காதலின்
அற்புளஞ் சிறந்தாங்(கு) அரட்டன் செட்டி
மடமொழி நல்லாள் மனமகிழ் சிறப்பின்
131. உடன்வயிற் றோராய் ஒருங்குடன் தோன்றினர்.

'ஆயர் முதுமகள் ஆயிழை தன்மேல்
போய பிறப்பிற் பொருந்திய காதலின்
ஆடிய குரவையின் அரவணைக் கிடந்தோன்
135. சேடக் குடும்பியின் சிறுமக ளாயினள்.

'நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்

பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை ;
ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன் ஆதலின்,
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமும்
கையகத் தனபோற் கண்டனை அன்றே ;
ஊழிதோ றூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை' என்ற
147. மாடல மறையோன் தன்னொடு மகிழ்ந்து—

பாடல்சால் சிறப்பிற் பாண்டிநன் னாட்டுக்
கலிகெழு கூடல் கதழெரி மண்ட,
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து,
நித்தல் விழாவணி நிகழ்கென் றேவிப்,
பூவும் புகையும் மேவிய விரையும்
தேவந் திகையைச் செய்கென் றருளி,
வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி,
156. உலக மன்னவன் நின்றோன் முன்னர்—

அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
'எந்நாட்(டு) ஆங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கெ'ன்றே வணங்கினர் வேண்டத்
164. 'தந்தேன் வரம்' என் றெழுந்த(து) ஒருகுரல்—

ஆங்கது கேட்ட அரசனு மரசரும்
ஓங்கிருந் தானையும் உரையோ டேத்த,
வீடுகண் டவர்போல் மெய்ந்நெறி விரும்பிய
மாடல மறையோன் தன்னொடுங் கூடித்
தாழ்கழன் மன்னர் தன்னடி போற்ற
170. வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்—

'யானும் சென்றேன் ; என்னெதிர் எழுந்து
தேவந் திகைமேல் திகழ்ந்துதோன்றி,
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாள்நிழல் இருந்தோய் ! நின்னை
அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி உண்டென்று

உரைசெய்து அவன்மேல் உருத்து நோக்கிக்,
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்தன் செல்லல் நீங்கப்,
பகல்செல் வாயில் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்(து) அரசாள் வேந்துஎன்று
என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி
தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி
185. தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் !

'பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ(து) ஒழியாது
செல்லுந் எதேத்துக்(கு) உறுதுணை தேடுமின்
202. மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்' ஈங்கென்.

5. சீவக சிந்தாமணி

'தத்தை குணமாலையொடு தாவில் புகழ்ப் பதுமை ஒத்த புகழ்க் கேமசரி' முதலிய பாவையர் எண்மரைச் சீவகன் என்ற சமண மதத்தான் மணஞ்செய்த கதையையும் அவன் துறவையும் பொருளாகக் கொண்டு, மலை கடல் நாடு வளநகர் முதலியவைகளை வருணிக்கும் இப்பெருங்காப்பியம், பின்வந்த காவியங்களுக்கும் புராணங்களுக்கும் சொற்களையும் சொல் தொடர்களையும் ஆசிரிய வசனமாகக் கொடுத்துதவியது; நச்சினார்க்கினியர் உரையுடையது. இதன் எளிய இனிய நடையும், பாடல்களின் பொருட்பொலிவும்,. செம்மையான கற்பனை செறிந்த கவிதையும் இதன் ஆசிரியராகிய திருத் தக்க தேவரை ஒரு சிறந்த கவி என்ற நிலைக்கு உயர்த்து கின்றன. கவிச்சக்கரவர்த்தி கம்பர் இவருக்கு மிகவும் கட மைப் பட்டுள்ளார்.

இது ஒரு சமண நூல். இதன் வளமான கவிகளிலே திளைத்துக்கொண்டிருந்த சோழ மன்னனுடைய மனத்தை மாற்றவே சேக்கிழார் பெரிய் புராணம் செய்தார் என்ற கதை, சிந்தாமணியின் பெருமையை நன்கு விளக்குகிறது. நன்னூல் உரையிலே தன்மையால் பெயர் பெற்ற நூலுக்கு சிந்தாமணி கூறப்பட்டிருக்கிறது.

சங்ககாலத்திலே எளிய பா வகைகள் மூலம் இயங்கி வந்த கவி நடைக்குச் சிந்தாமணியிலே விருத்தம் கருவியாக அமைந்தது. கற்பனைகள் எவ்வளவு அகலமாயும் ஆழமாயும் இருந்தபோதிலும், கருத்துக்கள் எவ்வளவு திட்ப நுட்பஞ் செறிந்ததாய் இருந்தபோதிலும் அவைகளை எளிதிலே தன்னுள் அடக்கும் சக்தி விருத்தத்துக்கு உண்டு. விருத்தத் தால் செய்யப் பெற்றுச், சிறந்த நயங்களையுடைய முதற் காவியம் சிந்தாமணி. காதற் காவியங்களிலே இது முதன்மை யானது. திருமணங்களையும் காதல் வாழ்க்கையையும் வரு ணிக்கும் சீவகன் வரலாறு தற்காலத்தவருக்குச் சலிப்புத் தருமாயினும் இதன் விருத்தங்கள் படிக்குந்தோறும் சுவை பயக்கும்.

இதன் காலம் 10-ம் நூற்றூண்டு என்பர்.

சீவக சிந்தாமணி

கேமசரியாரிலம்பகம்

காட்டு வழியில்

1. கனிகொள் வாழைக் காட்டுள் கருமைமெழுகி யவை
[போன்று
இனிய அல்லா முகத்த முசுவுங் குரங்கும் இரியத்
துனிவு தீர நோக்கித் தோன்றல் செல்லும் முன்னால்
பனிவெண் திரைசூழ் கடல்போல் பழுவந் தோன்றிற்
[றவணே

2. செல்வர் மனத்தின் ஓங்கித் திருவில் மாந்தர் நெஞ்சின்
எல்லை யிருளிற் றாகிப் பூந்தா தினிதின் ஒழுகிக்
கொல்லும் அரவின் மயங்கிச் சிறியார் கொண்ட
[தொடர்பிற்
செல்லச் செல்ல அஃகும் நெறிசேர் சிலம்பு சேர்ந்தான்.

3. சுனைகள் கண்க ளாகச் சூழ்ந்த குவளை விழியா
வனைய லாகா உருவம் நோக்கி மைந்தற் கிரங்கி
இனைவ போலும் வரையின் அருவி இனிதின் ஆடி
நனைகொள் போது வேய்ந்து நாதற் பாடு கின்றான்.

வேறு

4. செய்தான் இருவினையின்
பயத்தைச்சேரும் சென்றென்றி ;
எய்தான் அதன்பயத்தைப் பிறனே
துய்த்தல் இயல்பென்றி ;
கொய்தாமந் தாழ்ந்தொசிந்த
குளிர்பூம் பிண்டிக் கோமானே !
இஃதே நின்சொல் இயல்பென்றால்
அடியேன் நின்னைத் தொழுதேனே.

5. உண்டே தனதியல்பின் உணருங்காலை உயிர் என்றி ;
உண்டாய அவ்வுயிரே பிறிதின் இல்லை என உரைத்தி ;
வண்டார்த்து நாற்காதம் வண்ணமாலை சுமந்தொசிந்து
கொண்டேந்து பூம்பிண்டிக் கோமான் ! நின்னைத்
[தொழுதேனே.

6. இனிதின் ஈங்ஙனம் ஏத்திவ லங்கொண்டு
முனிவர் சித்திர கூடமு றுதெனத்
தனிதின் ஏகுபு தாபதர் வாழ்வதோர்
பனிகொள் பூம்பொழிற் பள்ளிகண் டானரோ.

7. புல்லும் அல்லியும் போகுயர் நீள்கழை
நெல்லும் நீர்விளை கேழலுந் தோரையும்
அல்ல தீம்பழங் காய்கிழங் காதியா
நல்ல வேறுகர் வார்பள்ளி நண்ணினான்.

8. அரிய கொள்கையர் அரழ லைந்தினுள்
மருவி வீடுவ ளைக் குறு மாட்சியர்
விரிய வேதம்வி ளம்பிய நாவினர்
தெரிவில் தீத்தொழிற் சிந்தையின் மேயினார்.

9. வள்ளி யின்னமு தும்வரை வாழையின்
தெள்ளு தீங்கனி யுஞ்சில தந்தபின்,
'வெள்ள மாரிய னாய்! விருந் தார்கெ'ன
உள்ள மாட்சியி னார்உவந் தோம்பினர்.

10. பாங்கின் மாதவர் 'பான்மதி போன்றிவன்
வீங்கு கல்வியன் மெய்ப்பொருட் கேள்வியன்
ஆங்கு நாமும்அ ளக்குவம்' என்றுதம்
ஓங்கு கட்டுரை ஒன்றிரண் டோதினார்.

11. ஐயர் கூறலும் அண்ண லுங் கூறுவான்
'சையம் பூண்டுச முத்திரம் நீந்துவான்
உய்யு மேல்தொடர்ப் பாட்டினிங்(கு) யாவையும்
எய்தி னார்களும் உய்ப'என் றோதினான்.

12. 'வீடு வேண்டி விழுச்சடை நீட்டல் மெய்
மூடு கூறையின் மூடுதல் வண்டலை
ஓடு கோடல் உடுத்தல்என் றின்னவை
பீடில் லாப் பிறவிக்கு வித் தென்பவே.'

13. 'ஏம நன்னெறி எந்நெறி? அல்நெறி
தூய்மை யின்னெறி' யாமுந்து ணிகுவம்;
காமன் தாதைநெ றியின்கட் காளைநீ
தீமை யுண்டெனிற் செப்'பெனச் செப்பினான்.

14. 'தூங்குஉறிக் கிடந்து காயும் பழங்களும் துய்ப்ப நில்லா
பங்கலா வினைகள் என்ருர் பகவஞர் எங்கட்கு என்னின்,
ஓங்குநீள் மரத்தில் தூங்கும் ஒண்சிறை ஒடுங்கல் வாவல்
பாங்கரின் பழங்கள் துய்ப்பப் பழவினை பரியும் அன்றே.

15. 'நீட்டிய சடையமாகி நீர் மூழ்கி நிலத்திற் சேர்ந்து
வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைத்துமென்னில்,
காட்டிடைக் கரடி போகிக் கயமூழ்கிக் காட்டினின் று
வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமின்'
[என்ருன்.

16. 'நோய்முதிர் குரங்குபோல நுகர்ச்சிநீர் நோக்கல் வேண்டா
காய்முதிர் கனியி னூழ்த்து வீழுமிவ் வியாக்கை 'இன்னே
வேய்முதிர் வனத்தின் வென்ரு னுருவொடு விளங்க
[நோற்றுப்
போய்முதிர் துறக்கத் தின்பம் பருகுவ புரிமின்' என்ருன்.

17. 'மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள்
[தம்மைப்
பொய்வகை யின்றித்தேறல் காட்சி; ஐம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுத லொழுக்கம்;
[மூன்றும்
இவ்வகை நிறைந்தபோழ்தே இருவினை கழியும்' என்ருன்.

18. குன்றனன் உரைப்பக் கேட்டே பாகத்தார் குடும்ப நீக்கி,
'இன்றுகண் விடுக்கப்பட்டேம் யா'மென வெழுந்து போகி
வென்றவன் பாதஞ்சேர்ந்து வீட்டுநன் நெறியைப் பெற்ரு
சென்றது பருதிவட்டம் செம்மலும் அசைவு தீர்ந்தான்.[ர்.

கேமமா புரத்தில்

19. அந்நகர்க் கரசனே அனைய ஆண்டகை
மெய்ந்நிக ரிலாதவன் வேத வாணிகன்
கைந்நிக ரமைந்தவேற் கமழுந் தாரினன்
மைந்நிகர் மழைக்கணர் மருட்ட வைகுவான்.

20. வார்சிலை வடிப்ப வீங்கி வரையெனத் திரண்ட தோளான்
சோர்புயல் தொலைத்த வண்கைச் சுபத்திரன் மனைவி
[பெற்ற
சீர்நலங் கடந்த கேம சரியெனத் திசைக ளெல்லாம்
பேர்நலம் பொறித்த பெண்மைப் பெருவிளக் காகி
[நின்ருள்.

21. மாசிலாள்பிறந்தஞான்றே மதிவலான் விதியினெண்ணிக்,
'காசிலாள் கண்டபோழ்தே கதுமென நாணப்பட்டான்

தூசுலா நுசுப்பினட்குத் துணைவனும் புணர்மின்' என்று
பேசினன் அன்றுகொண்டு பெருவிருந் தோம்பு கின்றான்.

22. தாழ்தரு பைம்பொன் மாலைத் தடமலர்த் தாம மாலை
வீழ்தரு மணிசெய் மாலை இவற்றிடை மின்னி னின்று
சூழ்வளைத் தோளி செம்பொன் தூணையே சார்ந்துநோக்
ஊழ்படு காதலானை யொருபிடி நுசுப்பினளே. [கும்

23. சேயிழை கணவ னாகுந் திருமகன் திறத்து, நாளும்
ஆயிரத் தெட்டு நேர்ந்தஆரமு தடிசி லூட்டி
ஏயின வகையி னாலே ஆறிரண் டெல்லை யாண்டு
போயினவென்ப மற்றப் பூங்கொடிச்சாய லாட்கே.

24. மாவடு மருட்டு நோக்கின் மதிமுக மழைக்கண் மாசில்
பூவொடு புரையுஞ் சாயல் புனைநலந் தனித்து வைக
ஏவடு பிணையி னேக்கி இறைவளை கழல நின்ற
தாய்படுந் துயர மெல்லாம் தாரவன் நீக்கினனே.

25. 'போதுவாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங்
ஊதுமேமகளிர்க்கொத்த போகமு மன்ன தொன்றே[(கு)
ஆகுநீ கவல வேண்டா ஆரழ குடைய நம்பி
காதலான் தவத்தின் மிக்கான் கண்ணுறும் நாளை'யென்
[றான்.

வேறு

26. பொன்னிலத் தெழுந்ததோர் பொருவில் பூங்கொடி
மின்னுவிட் டெரிவதோர் நலத்தள் வீங்கிருள்
பின்னிவிட் டன குழல் பெருங்கட் பேதையூர்
துன்னினன் தொடு கழற் குரிசி லென்பவே.

27. தென்றிசை முளைத்ததோர் கோலச் செஞ்சுடர்
ஒன்றி மற் றுத்தரம் வருவ தொத்தவண்
மன்றல்கொள் மார்பினன் வந்தொ ரானிழல்
நன்றுவந் திருந்தனன் நாதற் சிந்தியா.

28. குடைகவித் தனையது கோல மாமுடி ;
அடியிணை யாமையின் வடிவு கொண்டன ;
புடைதிரள் விலாவும்வில் வளைந்த பொற்பின ;
கடிகமழ் தாமரை கண்ணின் வண்ணமே.

29. வார்ந்திலங்(கு) எயிறணி பவழ மாண்டவாய் ;
ஆர்ந்த பூ வங்கையு மடியும் தாமரை ;
தேர்ந்தனன் திருமகள் கணவனெனத்
தீர்ந்தனன் சொல்லளைஇத் தேர்க்கொண் டேறினன்.

30. தேரிவர் ஊர்ந்தனர் செல்ல, இல்தலைக்
கூருகிர் விடுத்ததோர் கோல மாலையைப்
பேரிசை வீணையிற் சூட்டிப் பெண்கொடிக்
காரிகை உலகுணர் கடவுட் பாடுமே.

31. ‘வீங்கோத வண்ணன் விரைததும்பு பூம்பிண்டித்
தேங்கோத முக்குடைக்கீழ்த் தேவர் பெருமானைத்
தேவர் பெருமானைத் தேனார் மலர்சிதறி
நாவின் நவிற்றுதார் வீட்டுலகம் நண்ணாரே’.

32. முத்துமிழு முந்நீர் மணிவண்ணன் மூன்றுலகும்
பத்திமையாற் பாடப் படுவான்தாள் பாடக்கேட்(டு)
ஒத்தரம்பை யன்னாள் உவந்து, ‘இவளோ டொப்பானோர்
வித்தகனை யின்னே பெறுக’ எனவுரைத்தாள்.

33. நிலந்தினக் கிடந்தன நிதியம் நீள்நகர்ப்
புலம்பறப் பொலிவொடு புக்க காலையே
இலங்குபூங் கொடியன ஏழை நோக்கமும்
உலங்கொள்தோள் உறுவலி நோக்கு மொத்தவே.

34. கண்ணுறக் காளையைக் காண்ட லும் கைவளை
மண்ணுறத் தோய்ந்தடி வீழ்ந்தன ; மாமையும்
உண்ணிறை நாணும் உடைந்தன வேட்கையும் ;
ஒண்ணிறத் தீவிளைத் தாள்உருக் குற்றாள்.

35. வாக்கணங் கார் மணி வீணை வல்லாற்(கு) அவள்
நோக்கணங் காய் மனம் நோய் செய, நொந்தவன்
‘வீக்கணங் கார் இள வேய் நெடுந் தோளியொர்
தாக்கணங்கோ மகளோ’ எனத் தாழ்ந்தான்.

36. நல்வளத் தாமரை நாணிய வாண்முகக்
கொல்வளர் வேற்கணி னாள் குழைந் தாள்எனச்
சொல் வளர்த் தார்அவள் தோழியர் சோர்குழல்
மல்வளர் மார்பனை வந்துவ ளைந்தார்.

37. ‘காதன்மை கண்ணுளே அடக்கிக் கண்ணெனும்
தூதினால் துணி பொருளுணர்த்தித் தான்தமர்க்
கேதின்மை படக்கரந் திட்ட வாட்கணேக்(கு)
ஓதநீ ரமுதமும் உலகும் விற்குமே.

38. திருவிற்கும் கற்பகத் தெரியன் மாலையார்
உருவிற்கோர் விளக்கமாம் ஒண்பொற் பூங்கொடி
முருகற்கும் அநங்கற்கும் எனக்கும், மொய்சடை
ஒருவற்கும் பகைத்தியால் ஒருத்தி வண்ணமே.’

39. கலைத்தொகை நலம்பல கடந்த காளை தான்
நலத்தகை யவள்நலம் நினைப்ப, நாய்கனும்
மலைத் தொகை மதந்தவழ் யானை மன்னவன்
நிலத்தவர்க் கறிவுற நெறியிற் செப்பினன்.

40. கடியுமிழ் எறிதிரை முழக்கிற் பல்லியம்
கொடியணி வியனகர்க் குழுமி ஆர்த்தெழக்
கடிமணம் இயற்றினர் கடவுள் நாளினல்
வடிமலர்க் கோதையை மைந்தர்க் கென்பவே.

வேறு.

41. புனைமலர்த் தாரி னானும் போதணி கொம்ப னாளும்
நனைமலர்க் காவும் அந்தண் வாவியும் நல்ல ஆடிச்
சுனைமலர்க் குவளை குற்றுச் சூழ்மலர்க் கண்ணி சூட்டி
வினைநலம் நுகர்ந்து செல்வார் விதியினன் மிக்க நீரார்.

42. பொழிந்துகு காதல்பூண்டு புல்லுகை விடாது செல்லக்
கழிந்தன விரண்டு திங்கள்; காளையும் மற்றோர் நாளாற்
பிழிந்துகொள் வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி
[தன்னோடு
அழிந்துவீ ழருவிக் குன்றில் ஆய்மலர்க் காவு புக்கான்.

43. தினைவிளை சாரற் செவ்வாய்ச் சிறுகிளி மாத ரோப்பப்
புனைவளைத் தோளி சொல்லிக் கிளியெனக்கிள்ளைபோகா
நனைவிளை கோதை நாணிப் பொன்னரி மாலை யோச்சசக்
கனைகழற் குரிசில் நண்ணிக் கவர்கிளி யோச்சி னானே.

44. திங்களங் குழவி செவ்வா னிடைக்கிடந் திமைப்பதேபோல்,
குங்கும மார்பிற் பூண்ட குளிர்கதிர் ஆரம் மின்ன
மங்கையோடிருந்த போழ்தோர் மணிவண்டு கண்டு
[சொன்னான்
கங்குல்தான் நீங்கலுற்றுக் கமழ்மல ரணிந்த தாரான்.

45. ‘மணிவண்டிம் மாதர் கோதை மதுவுண வந்த போழ்தங்கு
இணைவண்டங் கிறந்து பாடின் றிருக்குமே இரங்க
[லின்றாய்த்,
துணைவண்டு துஞ்சின் நீயுந் துஞ்சுவை யென்று நின்கட்
பணிகொண்ட தின்மை யால்தான் பரிவொடும் இருக்கு
[மன்றே.’

46. குழவியாய்ப் பிறந்து வெய்யோன் குமரனாய் முருகிஇப்பால்
விழைவுதீர் கிழவ னாகி விழுக்கதி ருலந்து வீழ,
மழலைவண் டுழல நக்க மல்லிகை அலங்கல் சூட்டிக்
குழல்புரை கிளவியோடுங்கொழும்புகைஅமளிசேர்ந்தான்.

47. திருத்துயில் பெற்ற மார்பன் திருந்துதார் உழக்க இன்பம்
வருத்தமுற் றசைந்த கோதை வான் றனித் தடங்கண் நீலம்
பொருத்தலும், பொன்ன னாளைப் புறக்கணித்(து) எழுந்து [போகிப்
பருச்சுடர்ப் பவழ நோன்தாள்ப் பன்மணிக் கதவு [சேர்ந்தான்

48. அல்லியுட் பாவை யன்னாள் அறிவுறா வகையின் ஒற்றி
மெல்லவே திறந்து நீக்கி மின்னுவிட் டிலங்கு பைம்பூண்
கொல்சின மடங்கல் அன்னான் கொழுநிதி மாடம் நீந்திப்
பல்கதிர்ப் பருதி போலப் பாயிருள் ஏகி னானே.

49. திருமணி குயின்ற செம்பொன் திருந்துபூங் கொம்பனாள் [தன்
கருமணிப்பாவையன்னான் கரந்துழிக் காண்டல்செல்லாள்
எரிமணி விளக்க மாடத் திருளறு காறு மோடி
அருமணி யிழந்தோர் நாகம் அலமரு கின்ற தொத்தாள்.

50. 'யாண்டை யாய்ஐய அஞ்சினென் ஆருயிர்
ஈண்டு டம்பொழித் தேகவ லிக்குமால்
நீண்ட தோளவ னே! நிறை யானிலேன்
தீண்டு வந்'தெனத் தேனின்மி ழற்றினாள்.

51. 'கனிகொள் காமம்க லந்துயிர் ஒன்றலின்
இனியர் மங்கையர் என்பது கூறுவாய்;
பனிகொள் மாமதி போற் பசப் பூரயான்
தனிய ளாவது தக்கது வோசொலாய்?

52. 'கழலும் நெஞ்சொடு கைவளை சோருமால்;
சுழலும் கண்களும்; சூடுறு பொன்னென
அழலும் மேனியும்; ஆற்றலென் ஐயவோ!
நிழலின் நீப்பருங் காதலும் நீந்தியோ?

53. 'நுனசீ றடிநோ வடடந் துசெலேல்!
எனதா வியகத் துறைவாய் எனும்நீ
புனைதா ரவனே! பொயுரைத் தனையால்
வினையே னொழியத் தனியே கினையே!

0–, 12
N5

54\. 'புன மா மயிலே! பொழிலே புனலே!
வனமார் வழையே! வரையே! திரையே!
இனமா மணிசூழ் எரிபூ ணவனைத்
துனயான் பெறுகோ தொழுதேன் உரையீர்.

55\. 'மடமா மயிலே! குயிலே! மழலை
நடைமாண் அனமே! நலமார் கிளியே!
உடனாடும் என்ஐ யனை'-என் றுருகத்
தொடை யாழ் மழலைமொழி சோர்ந்தனளே.

வேறு

56\. கடத்திடைக் கவளந் தேனெய்
கனியைத் தோய்த் தினிய துற்றத்
தடக்கையாற் கொடுத்துப் புல்லுந்
தவழ்மதக் களிறு நீங்கின்
மடப்பிடிக் குய்தல் உண்டோ?
வாலடிக் குஞ்சி சூட்டும்
கொடைக்கையான் பிரிந்த பின்றைக்
கோதையாட் குய்த லுண்டோ?

57\. எரிநுதி யுற்ற மாவின் இளந்தளிர் போன்று மாழ்கிப்
புரிநரம் பிசையிற் றள்ளிப் புன்கணுற் றழுத லாலே
அரிகுரல் கொண்ட பூச லகத்தவர்க் கிசைப்ப ஈண்டித்
திருவிரி கோதை நற்றாய் நிப்புதி சேர்ந்து சொன்னாள்.

58\. 'விழுத்திணைப் பிறந்து வெய்ய வேட்கை வேரரிந்து மெய்ந்
[நின்று
இழுக்கமொன் றானு மின்றி யெய்திய தவத்தின் வந்து
வழுக்குத லின்றி விண்ணோன் வச்சிர நுதியினிட்ட
எழுத்தனன் தந்த வின்ப மின்னுநீ பெறுதி' என்றாள்.

59\. 'பிறங்கின கெடுங்கள் யாவும்,புணர்ந்தவர் பிரிவர்,பேசின்
இறங்கின வீழு மேலா யோங்கிய, எண்ணில் யோனிப்
பிறந்தவர் சாவர் செத்தார் பிறப்பவே என்ன நோக்கிக்
கறங்கிசை வண்டு பாடுங் கோதைநீ கவலல்' என்றாள்.

60\. 'எரிதலைக் கொண்ட காமத் தின்பநீர்ப் புள்ளி யற்றால்
பிரிவின்கட் பிறந்த துன்பம் பெருங்கட லனைய தொன்
உருகிநைந் துடம்பு நீங்கி னிம்மையோ டும்மை யின்றி [றால்;
இருதலைப் பயனு மெய்தா ரென்று யாங் கேட்டு மன்றே.

61. ‘ மன்னுநீர் மொக்கு ளொக்கு மானிட ரிளமை யின்பம்;
மின்னி னைத்திறக்குஞ்செல்வம்வெயிலுறுபனியினீங்கும்;
இன்னிசை யிரங்கு நல்யாழ்இளியினு மினியசொல்லாய்!
அன்னதால் வினையினுக்க மழுங்குவ தென்னை’ என்றாள்.

62. பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதிய மொத்து,
மெய்யெரி துயரின் மூழ்க, விதிர்விதிர்த் துருகி நையும்
மையிருங் குழலி னாள்தன் மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டுங் காணாள்; காளையுங்காலிற்சென்றான்.

63. காழகச் சேற்றுள் தீம்பால் கதிர்மணிக் குடத்தின் ஏந்தி
வீழ்தரச் சொரிவ தேபோல், விளக்கொளித் திங்கட் [புத்தேள்
சூழிருள் தொழுதி மூழ்கத் தீங்கதிர் சொரிந்து, நல்லார்
மாழைகொண் முகத்தின் தோன்றி வளைகடன் முளைத்த [தன்றே.

64. ஏறனற் கிருளை நீக்கக் கைவிளக் கேந்தி யாங்கு
வீறுயர் மதியந் தோன்ற, விரைவொடு போய பின்றை—
மாறிலாப் பருதி வட்டம் வருதிரை முளைத்த ஆங்கண்
ஆறுசெல் ஒருவற் கண்ணல் அணிகலம் அருளலுற்றான்.

வழிப் போக்கனுடன்

65. ‘எவ்வூரீர்? எப்பதிக்குப் போந்தீர்? நும்
மனைவியர்தாம் எனைவர்? மக்கள்
ஒவ்வாதார் தாமெனைவர்? ஒப்பார்மற்
றெனைவர்? நீர் உரைமின்!’ என்றாற்(கு)—
‘இவ்வூரேன், இப்பதிக்குப் போந்தேன்,என்
மனைவியரும் நால்வர், மக்கள்
ஒவ்வாதார் தாமில்லை, ஒப்பான்
ஒருவன்’என உரைத்தான் சான்றோன்.

66. ‘ஒப்பா னொரு மகனே நால்வர்
ஒரு வயிற்றுட் பிறந்தான்’ என்ன
நக்கான் பெருஞ்சான்றோன் ‘நம்பிபோல்
யாருலகில் இனியார்’ என்ன,
‘மிக்கா னுரைப்பதுவும் மிக்கதே
போலுமால்; வினவிக் கேட்பேன்;
தக்காய் குறித்த துரை’என்றான்—
தானுரைப்பக் கேட்கின் றானே.

67\. ‘நற்றானம் சீலம் நடுங்காத்
தவம்அறிவர் சிறப்புஇந் நான்கும்
மற்றாங்குச் சொன்ன மனைவியர்இந்
நால்வரவர் வயிற்றுள் தோன்றி
உற்றான் ஒருமகனே மேற்கதிக்குக்
கொண்டுபோம் உரவோன் தன்னைப்
பெற்றார் மகப்பெற்றார்; அல்லாதார்
பிறர்மக்கள் பிறரே கண்டீர்.

68\. ‘படநாகந் தோலுரித்தாற் போல்துறந்து
கண்டவர்மெய் பனிப்ப நோற்றிட்டு
உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு
உவந்தீதல் தான மாகும்;
திடனாகத் தீந்தேனுந் தெண்மட்டும்
உயிர்க்குழாம் ஈண்டி நிற்றற்கு
இடனாகும் ஊனும்இவை துறத்தலே
சீலம்என் றுரைத்தார் மிக்கார்.

69\. ‘ஓவா திரண்டுவவும் அட்டமியும்
பட்டினிவிட் டொழுக்கந் காத்தல்
தாவாத் தவமென்றார்; தண்மதிபோல்
முக்குடைக்கீழ்த் தாதை பாதம்
பூவே புகைசாந்தம் சுண்ணம்
விளக்குஇ வற்றால் புனைதல் நாளும்
ஏவா இவைபிறவும் பூசனையென்று
ஈண்டியநூல் கரைகண் டாரே.

70\. ‘இந்நால்வர் துணைவியராக், காதன்
மகனிவனை உடையார் போகிப்
பொன்னாரை மார்பிற் புரந்தர
ராய்ப்,பூமி முழுதும் ஆண்டு
மன்னாகி, முக்குடைக்கீழ் வாமன்
சிறப்பியற்றி, வரம்பி லின்பம்
பின்னை விளைவித்துப், பிறவா
உலகெய்தல் பேச லாமே.

71\. ‘மட்டார்பூம் பிண்டி வளங்கெழு
முக்குடைக்கீழ் மாலே கண்டீர்
முட்டாத இன்பப் புதாத்திறக்குந்
தாளுடைய மூர்த்தி பாதம்

எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு
இவ்உலகி லின்ப மேபோல்,
ஒட்டாவே கண்டீர் இனையவனைத்
தேருதார்க் குணர்ந்தீர் அன்றே.

72. ‘வேற்றுவர் இல்லா நுமரூர்க்கே
செல்லினும் வெகுண் டீர் போல,
ஆற்றுணாக் கொள்ளா தடிபுறத்து
வைப்பீரே யல்லீர் போலும்;
கூற்றங்கொண் டோடத் தமியே
கொடுநெறிக்கட் செல்லும் போழ்தின்
ஆற்றுணாக் கொள்ளீர் அழகலால்
அறிவொன்றும் இலிரே போலும்.

73. ‘இழுதன்ன வெண்ணிணத்த செந்தடிக்கே
ஏட்டைப்பட்டு இரும்பிற் போர்த்த
பழுதென்னும் வன்மனத்தார் ஓட்டை
மரச்செவியர் கேளார், பால்போன்று
ஒழுகி அமுதூறும் நல்லறத்தை
ஓர்கிலர்ஊன் செய்கோட் டக்குக்
கழுகுண்ண வள்ளூர மேசுமந்து
புள்ளிற்கே புறஞ்செய் கின்றார்.

74. ‘கையாற் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்;
ஐயா விளாம் பழமே என்கின் றீர்;
ஆங்கதற்குப் பருவ மன்றுஎன்
செய்கோ எனச், சிறந்தாள் போற்சிறவாக்
கட்டுரையாற் குறித்த வெல்லாம்
பொய்யே பொருளுரையா முன்னே
கொடுத்துண்டல் புரிமின் கண்டீர்.’

வேறு

75. இன்னவா றுறுதி கூறி
எரிமணி வயிர மார்ந்த
பொன்னவிர் கலங்கள் எல்லாம்
பொலிவொடு புகன்று நீட்டிச்
சென்மினீர் என்று கூற,
வலங்கொண்டு தொழுது சென்றான்,
வின்மாீஇ நீண்ட தோளான்
வெயிற்கடம் நீந்தல் உற்றான்.

6. பெரிய புராணம்

எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் தலைவன் ஆகிய முதல்வன் ஒருவன் உண்டு. உலகத்து உயிர்கள் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றன. பிறப்பும் இறப்பும் பெருந்துன்பங்கள் அல்லவா? துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெறுவதல்லவா அறிவின் காரியம்? மெய்யறிவு கைவந்த பின், எல்லா உயிரகத்தும் புறத்தும் உறைபவனுகிய இறைவன் குருவாகிப் போந்து, நிலைத்த இன்பத்தை எய்தும் வழி வகைகளை உணர்த்தி உபகரிக்கிறுன்—இந்த உண்மைகளை மெய்ப்பித்து உலகிலே வாழ்ந்த உத்தமர்களது வரலாறு தான் பெரிய புராணம். இவர்களை,

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினர்

என்பர் சேக்கிழார். இவர்களிலே ஒருவர் கண்ணப்பர்.

> காப்பதோர் வில்லும் அம்பும்
> கையதோர் இறைச்சிப் பாரம்
> தோற்பெரும் செருப்புத் தொட்டுத்
> தூயவாய்க் கலசம் ஆட்டித்,
> தீப்பெருங் கண்கள் செய்ய
> குருதிநீர் ஒழுகத், தன்கண்
> கோட்பதும் பற்றிக் கொண்டார்
> குறுக்கை வீரட்ட னரே—அப்பர்.

இதுதான் கண்ணப்பர் கதை. இதன் மூலம் சேக்கிழர், 'அன்பர்கள் அன்பால் செய்கிற செயல்கள் எவையேனும் ஆகுக—அவை சிவபுண்ணியச் செயல்களே?' என்ற உண்மையை வலியுறுத்துகிருர்.

கண்ணப்பர் ஒரு வேடர் அல்லவா? சாதியும் குலமும் உயர்வும் தாழ்வும் ஆகிய உலக முரண்பாடுகள் அன்பின் முன் அழிந்து விடுகின்றன. அன்பு வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை வளர்க்கிறது. 'அன்பின் வழியது உயிர் நிலை'. அன்பு வேறு சிவம் வேறு அல்ல; சிவம் என்றுலே அன்பு.

இந்தப் பேருண்மையை விளக்கிச் சேக்கிழார் 'பெரிய புராணம் பாடினார்.

சோழ சாம்ராச்சியத்தின் முதலமைச்சரான அவர், 'அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார் புகழ்' பாடியதால் 'தொண்டர்சீர் பரவுவார்' ஆனார்.

சேக்கிழார் செய்யுள் நடை செம்பாக மானது; எளிய சொற்போக்கும் உயர் நோக்கும் வாய்ந்தது. அவர் கையாளும் அணிவகைகள், பழைய நூல்களிலே பயின்றவை என்றாலும், செய்வினைத் திறனால் புதுமெருகுடன் பொலிகின்றன. பெரிய புராணத்தின் இலக்கியத் தன்மைக்கு அதிலே ததும்பி நிற்கும் பக்திச் சுவையுடன், நூல் முழுவதும் குன்றாது குறையாது வழிந்தோடும் மெல்லிய நாதமும் காரணமாகும்.

பெரிய புராணம்

கண்ணப்பநாயனர் புராணம்

1. மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்பர்,
நாவலர் புகழ்ந்து போற்றும் நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.

2. இத்திரு நாடு தன்னில் இவர்திருப் பதியா தென்னில்,
நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்ரெடர் வேலி கோலி
ஒத்தபேர் அரணஞ் சூழ்ந்த முதுபதி உடுப்பூ ராகும்.

3. மைச்செறிந் தனைய மேனி வன்ரெழின் மறவர் தம்பால்
அச்சமு மருளும் என்றும் அடைவிலர் உடைவன் ரேலார்
பொச்சையின் நறவும் ஊனின் புழுக்கலும் உணவும் [கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாகன் என்பான்.

4. பெற்றியால் தவமுன் செய்யதான் ஆயினும் பிறப்பின் [சார்பாற்
குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலைநின் [றுள்ளான்
விற்ரெழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் [போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியுந் தத்தை [யென்பாள்.

5. பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப் [பேறே
அரியதென் றெவருங் கூற அதற்படு காத லாலே
முருகல ரலங்கற் செவ்வேன் முருகவேண் முன்றிற் [சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியி னிற்பார்.

6. கானவர் குலம்வி ளங்கத் தத்தைபாற் கருப்பம் நீட
ஊனமில் பலிகள் போக்கி உறுகடன் வெறியாட் டோடும்
ஆனவத் திங்கள் செல்ல அளவில்செய் தவத்தி னலே
பான்மதி யுவரி யின்ரு லெனமகப் பயந்த போது,

7. அண்ணலைக் கையி லேந்தற் கருமையால் உரிமைப் பேருந்
திண்ணன்என் றியம்பு மென்னத், திண்சிலை வேட ரார்த் [தார்;

புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீ ருருவி னைக்
கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பலவணிந் தாரன்றே.

8. வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபிற் றங்கள்
புரையில்தொன் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்
[றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்
அரைமணிக் கவடிக் கட்டி அழகுற வளர்க்கு நாளில், [த

9. தண்மல ரலங்கல் தாதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரில்
உண்ணனைந் தமுத மூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா
[நின்றார்.

10. அலர்பகல் கழிந்த அந்தி ஐயவிப் புகையு மாட்டிக்
குலமுது குறத்தி யூட்டிக் கொண்டுகண் துயிற்றிக் கங்குல்
புலரவூன் உணவு நல்கிப் புரிவிளை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலைபயில் பருவஞ் சேர்ந்தார்.

11. வெங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதி லெங்கும்
மங்கல வாழ்த்து மல்க மருங்குபல் லியங்க ளார்ப்பத்
தங்கள்தொன் மரபின் விஞ்சைத் தனுத்தொழில் வலவர்
[தம்பால்
பொங்கொளிக் கரும்போ ரேற்றைப் பொருசிலை பிடிப்
[பித்தார்கள்.

வேறு

12. அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்க ளெங்கும்
அடலேனம் புலிகரடி கடமை யாமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலாயுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்,
திங்கண்முறை வேட்டைவினை தாழ்த்த தென்று
சிலைவேடர் தாமெல்லாந் திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ னாகி யுள்ள
தண்தெரியல் நாகன்பாற் சார்ந்து சொன்னார்.

13. சொன்னவுரை கேட்டலுமே நாகன் றானுஞ்
சூழ்ந்துவருந் தன்மூப்பின் றொடர்வு நோக்கி
முன்னவர்கட் குரைசெய்வான் 'மூப்பி னாலே
முன்புபோல் வேட்டையினின் முயல கில்லேன் ;

என் மகனை யுங்களுக்கு நாத னாக
வெல்லீருங் கைக்கொண்மின்' என்ற போதின்,
அன்னவரு மிரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன்
அடிவணங்கி யிம்மாற்ற மறைகின் றார்கள்.

14. 'இத்தனைகா லமுமினது சிலைக்கீழ்த் தங்கி
இனிதுண்டு தீங்கின்றி யிருந்தோம்; இன்னும்
அத்த! உன தருள்வழியே நிற்ப தல்லால்
அடுத்தநெறி வேறுளதோ? அதுவே யன்றி
மெய்த்தவிறல் திண்ணனையுன் மரபிற் சால
மேம்படவே பெற்றளித்தாய்; விளங்கு மேன்மை
வைத்தசிலை மைந்தனையீண் டழைத்து நுங்கள்
வரையாட்சி யருள்'என்றார் மகிழ்ந்து வேடர்.

15. முன்னிருந்த மைந்தன்முக நோக்கி நாகன்
'மூப்பெனைவந் தடைதலினான் முன்பு போல
என்னுடைய முயற்சியினல் வேட்டை யாட
இனியெனக்குக் கருத்தில்லை; எனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு
மாறெறிந்து மாவேட்டை யாடி யென்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்குவாய்' என்று
உடைதோலுஞ் சுரிகையுங்கைக்கொடுத்தானன்றே.

வேறு

16. தாளில் வாழ்செ ருப்பர்தோல் தழைத்த நீடு தானையார்
வாளி யோடு சாபமேவு கையர் வெய்ய வன்கணார்
ஆளி யேறு போலவேகு மண்ண லார்மு னெண்ணிலார்
மீளி வேடர் நீடுகூட்ட மிக்கு மேலே ழுந்ததே.

17. கோடு முன்பொ லிக்கவும் குறுங்க ளாகு ளிக்குல
மாடு சென்றி சைப்பவும் மருங்கு பம்பை கொட்டவும்
சேடு கொண்ட கைவிளிச் சிறந்த வோசை செல்லவும்
காடு கொண்டெ ழுந்தவேடு கைவ ளைந்து சென்றதே.

18. வெய்ய மாவெ ழுப்பஏவி வெற்ப ராய மோடிநேர்
எய்யும் வாளி முன்தெரிந்து கொண்டு செல்ல வெங்கணும்
மொய்கு ரல்து டிக்குலங்கள் பம்பை முன்சி லைத்தெழக்
கைவி ளித்த திர்த்துமா வெழுப்பி னார்கள் கானெலாம்.

19. ஏன மோடு மானினங்க ளெண்கு திண்க லைக்குலங்
கான மேதி யானை வெம்புலிக்க ணங்கள் கான்மரை
ஆன மாவ னேகமா மருண்டெழுந்து பாயமுன்
சேனை வேடர் மேலடர்ந்து சீறி அம்பி னாரினர்.

வேறு

20. நாடியகழல் வயவர்களவர் நாணனுநெடு வரிவிற்
காடனுமெனு மிருவருமலை காவலரொடு கடிதிற்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு நீழலின்விரை கேழல்.

21. குன்றியைநிகர் முன்செறவெரி கொடுவிழியிடி குரனீள்
பன்றியுமடல் வன்றிறலொடு படர்நெறிநெடி தோடித்
துன்றியதொரு குன்றடிவரை சுலவியநெறி சூழற்
சென்றதனிடை நின்றதுவலி தெருமரமர நிரையில்.

22. அத்தருவளர் சுழலிடையடை யதனிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர்விடுசுரிகையமுனைபெறவெதிருருவிக்
குத்தினருடன் முறிபடவரி குலமறவர்க டலைவர்.

வேறு

23. மற்றவர் திண்ண னார்க்கு மொழிகின்றார் 'வழிவந் தாற்ற
உற்றது பசிவந் தெம்மை உதவிய விதனைக் காய்ச்சிச்
சற்றுநீ யருந்து யாமுந் தின்றுதண்ணீர்கு டித்து
வெற்றிகொள்வேட்டைக்காடுகுறுகுவோமெல்ல'வென்றார்.

24. 'நாணனே தோன்றுங்குன்றினண்ணுவேமெ'ன்ன,
'காணநீ போதி நல்ல காட்சியே காணும் இந்தச் [நாணன்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித்தேவ ரிருப்பர்கும் பிடலா மெ'ன்றான்.

25. 'ஆவதென் இதனைக்கண்டிங்கணைதொறும்என்மேற்பாரம்
போவதொன்றுளதுபோலும் ஆசையும்பொங்கிமேன்மே
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும் [ன்
தேவரங்கிருப்ப தெங்கே போகெ'ன்றார் திண்ணனார்தாம்.

26. உரைசெய்து விரைந்து செல்லஅவர்களுமுடனேபோந்து
கரைவளர் கழையின் முத்துங் காரகிற் குறடுஞ் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும்புளினந்தோறுந்
திரைகண்முன் திரட்டிவைத்ததிருமுகலியிணைச்சார்ந்தார்.

27. ஆங்கதன் கரையின் பாங்கோர் அணிநிழற் கேழலிட்டு
வாங்குவிற் காடன் றன்னை மரக்கடை தீக்கோல் பண்ணி

'ஈங்குநீ நெருப்புக் காண்பாய் இம்மலை யேறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோ மென்று நாணனுந் தாமும்
போந்தார்.

28. அளிமிடை கரைசூழ் சோலை அலர்கள் கொண்டணைந்த
[வாற்றின்
தெளிபுன லிழிந்து சிந்தை தெளிவுறுந் திண்ணனார்தாங்
களிவரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார்.

29. முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான
அன்பினை யெடுத்துக் காட்ட, அளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர, வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்,

30. நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத், தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி,
ஆணையாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல, ஐயர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில்,

31. திங்கள்சேர் சடையார்தம்மைச்சென் றவர்காணுமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார்.

32. மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்; எழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விரைவி னோடு
மோகமா யோடிச் சென்றார்; தழுவினர் மோந்து நின்றார்.

33. நெடிதுபோ துயிர்த்து நின்று, நிறைந்தெழு மயிர்க்கால்
[தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க, மலர்க்கணீ ரருவி பாய,
'அடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ' என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற,

34. 'வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதி யார்போற்
கைம்மலை கரடி வேங்கை யரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையா யுள்ளா ரொருவரு மின்றிக்
[கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே' யென்று நைந்தார்.

35. கைச்சிலை விழுந்த தோரார்; காளையார் மீள 'இந்தப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ' என்றலு மருங்கு நின்ற
அச்சிலை நாணன் றானும் 'நானிது அறிந்தேன்' என்பான்.

36. 'வன்றிற லுந்தை யோடு மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக், குளிர்ந்தநீ ரிவரை யாட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டியூட் டிமுன் பறைந்தோர் பார்ப்
[பான்
அன்றிது செய்தா னின்று மவன்செய்த தாகும் என்றான்.

37. உண்ணிறைந் தெழுந்த தேனும் ஒழிவின்றி ஆராவன்
[பின்
திண்ணனார் 'திருக்கா ளத்தி நாயனார்க் கினிய செய்கை
எண்ணிய விவைகொ லாம்'என் றிதுகடைப் பிடித்துக்
வண்ணலைப்பிரியமாட்டா தளவில்ஆதரவுநீட,[கொண்டவ்

38. 'இவர்தமைக் கண்டே னுக்குத்தனியராயிருந்தாரென்னே
இவர்தமக் கமுது செய்ய விறைச்சியு மிடுவா ரில்லை
இவர்தம்மைப் பிரிய வொண்ணாது என் செய்கேன்
[இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டும்'
[என்று,

39. போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னேக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்
'நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேன்'
[என்பார்.

40. 'ஆர்தம ராக நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்
நீர்பசித் திருக்க இங்கு நிற்கவுங் கில்லேன்' என்று,
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை யெடுத்துக் கொண்டு மலர்க்கையால் தொழுது
[போந்தார்.

41. காடனும் எதிரே சென்று தொழுது 'தீக் கடைந்து
[வைத்தேன்;
கோடுடை யேன முங்கள் குறிப்படி யுறுப்பை யெல்லாம்
மாடுற நோக்கிக் கொள்ளும்மறித்துநாம்போகைக் கின்று
நீடநீர் தாழ்த்த தென்னே' என்றலும் நின்ற நாணன்,

42. 'அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக்
[கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்

இங்குமத் தேவர் தின்ன விறைச்சிகொண் டேகப்
[போந்தான்
நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் றேவர்க்கு'
[என்றான்.

43. மருங்குநின் றவர்கள் பின்னும் 'மயன்மிக முதிர்ந்தான்
[என்னே
அரும்பெற லிறைச்சி காய்ச்சியதுக்கிவே றுமிழாநின்றான்;
பெரும்பசி யுடைய னேனும் பேச்சிலன் எமக்குப் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத் தசைபுறத் தெறியா
[நின்றான்'

[என்று,]

44. கானவர் போன தோரார் கடிதினிற் கல்லை யின்கண்
ஊனமு தமைத்துக் கொண்டு மஞ்சன மாட்ட உன்னி
மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு கொய்த
தூநறும் பள்ளித் தாமங் குஞ்சிமேல்துதையக்கொண்டார்;

45. தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் தாங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனக மொருகை யேந்தி
இனியவெம் பிரானார் சாலப் பசிப்பரென் றிரங்கி யேங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்
[தாம்.

46. இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென் றெய்தி,
[வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு, முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பான் மாற்றி, வாயின் மஞ்சனநீர்
[தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல்
[விட்டார்.

47. தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்,
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த
[கல்லை
இலைமிசைப் படைத்த வூனின் திருவமு தெதிரே வைத்து,

48. 'கொழுவிய தசைக ளெல்லாங் கோலினில் தெரிந்து
[கோத்தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப் பல்லினு லதுக்கி நாவாற்
பழகிய வினிமை பார்த்துப் படைத்தவிவ் விறைச்சி சால
அழகிது நாய னீரே யமுதுசெய் தருளும்' என்றார்.

49. அன்னவிம் மொழிகள் சொல்லி யமுதுசெய் வித்தவேடர்
மன்னனூர் திருக்காளத்தி மலையினர்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டு மென்னு மெழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையிற்
[ரூழ்ந்தான்.

50. அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி மெய்ம்மையின் வேறு
[கொள்ளாச்
செவ்விய வன்பு தாங்கித் திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரையென்ன வையர் மருங்குநின் றகலா நின்றூர்.

51. சார்வருந் தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமுங்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றூர் நீளிருள் நீங்க நின்றூர்.

52. செந்தழ லொளியிற் பொங்குந் தீபமா மரங்க ளாலு
மந்திகண் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதியாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினி லிரவொன் றில்லை.

53. வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட வறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கட லென்ன நின்று கண்டுயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானூர்க்கமுதுகொண் டணையவேண்டி,

54. ஏறுகாற் பன்றி யோடு மிருங்கலை புனமான் மற்றும்
வேறுவே றினங்கள் வேட்டைவினைத்தொழில் விரகினலே
ஊறுசெய் காலஞ் சிந்தித் துருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார்.

வேறு

55. மொய்காட்டு மிருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டு மன்புடைய வில்லியார் தனிவேட்டை
எய்காட்டின் மாவளைக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்பொழுதில்,

56 எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்.

57. வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தஇறைச் சியுமெலும்புங் கண்டகல மிதித்தோடி
'இந்தவனு சிதங்கெட்டேன் யார்செய்தா ரெ'ன் றழிவார்.

58. பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே முதலாக அரும்பூசை
முழுதுமுறைமையின் முடித்துமுதல்வனார்கழல்பணிந்தார்.

59. பணிந்தெழுந்து தனிமுதலாம்பரனென் றுபன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை அங்கணரை விடைகொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி'னிடைச்சார்ந்
[தார்.

60. திருமலையின் புறம்போன திண்ணனார் செறிதுறுகற்
பெருமலைக ளிடைச்சரியிற் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவுந் துணிபடுத்து மானினங்கள் கானிடைநின் (று)
ஒருவழிச்செ சென்றேறு துறை யொளிநின் றுகொன் றருளி,

61. இந்தனமு முறித்தடுக்கி யெரிகடையு மரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியயி லலகம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து,

62. நல்லபத முறவெந்து நாவின்க ணிடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோ லுடன்கொண்டுவந்தணைந்தார்.

63. ஊனமுது கல்லையுடன் வைத்து 'இதுமுன் னையினன்றால்
ஏனமொடு மான்கலைகண் மரைகடமை யிவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு தடியேனுஞ் சுவைகண்டேன்
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கு மெ'னமொழிந்தார்.

64. இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியி லொழுகுவார்
எப்பொழுது மேன்மேல்வந் தெழுமன்பாற் காளத்தி
அப்பரெதி ரல்லுறங்கார் பகல்வேட்டை யாடுவார்.

65. அங்கிலையி லன்பனா ரறிந்தநெறி பூசிப்ப—
மன்னியஆ கமப்படியான் மாமுனிவ ரருச்சித்திங்(கு)

'என்னுடைய நாயகனே யிதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளா லொழித்தருள வேண்டுமெ'ன,

66. அன்றிரவு கனவின்க ணருமுனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
'வன்திறல்வே டுவனென்று மற்றவனை நீநினையேல்
நன்றவன்றன் செயறன்னை நாமுரைப்பக் கேள்'என்று,

67. 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லாம் நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீ'என் றருள்செய்வார்.

68. 'உனக்கவன்றன் செயல்காட்டநாளைநீயொளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும்பரிசெல்லாங்காண்கின்றாய்;
மனக்கவலை யொழிகெ'ன்று மறைமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினார்.

69. கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்டுயிலார்;
மனமுறுமற் புதமாகி வரும்பயமு முடனாகித்
துணைபுரவித் தனித்தேர்மேற்றோன்றுவான்கதிர்தோன்ற,

70. முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து
மன்னுதிருக் காளத்தி மலையேறி முன்புபோற்
பின்னகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார்.

வேறு

71. கருமுகி லென்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாறு நாளில் வருமிர வொழிந்த காலை
அருமறை முனிவ னார்வந் தணைவதன் முன்பு போகித்
தருமறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி,

72. மாறிலா னமுது நல்ல மஞ்சனப் புனலுஞ் சென்னி
ஏறுநாண் மலரும் வெவ்வே றியல்பினி லமைத்துக் [கொண்டு
தேறுவார்க் கமுத மான செல்வனார் திருக்காளத்தி
யாறுசேர் சடையார் தம்மை யணுகவந் தணையா நின்றார்.

73. இத்தனைபொழுதுந்தாழ்த்தேனெனவிரைந்தேகுவார்முன்
மொய்த்தபல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய,

இத்தகு தீய் புட்க வீண்டமுன் னுதிரங் காட்டும்
'அத்தனுக் கென்கொல் கெட்டே னடுத்ததெ'ன் றணையும்
[போதில்,

74. அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவனூர்க்குத்
திண்ணனூர் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென உதிரம் பாய விருந்தனர். தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடிவந்தார்.

75. வந்தவர் குருதி கண்டார் மயங்கினூர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப்பதைத்து வீழ்ந்
[தார்.

76. விழுந்தவ ரெழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணூர் செய்வ தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி 'யாரிது செய்தா ரெ'ன்னு
எழுந்தனர் திசைக ளெங்கும் பார்த்தன ரெடுத்தார் வில்
[லும்.

77. வாளியுந் தெரிந்து கொண்'டிம் மலையிடை யெனக்குமாறு
மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ விலங்கின் சாதி
யாளிமுன் னுகியுள்ள விளைத்தவோ வறியேனெ'ன்று
நீளிருங் குன்றச் சார னெடிதிடை நேடிச் சென்றூர்.

78. வேடரைக் காணூர் தீய விலங்குகண் மருங்கு மெங்கு
நாடியுங் காணூர் மீள நாயனூர் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினூர் கண்ணீர் வார.

79. 'பாவியேன் கண்ட வண்ணம் பரமனூர்க் கடுத்த தென்னே
ஆவியி னினிய எங்க ளத்தனூர்க் கடுத்த தென்னே
மேவினூர் பிரிய மாட்டா விமலனூர்க் கடுத்த தென்னே
ஆவதொன் றறிகி லேன்யான் என்செய்கேன்' என்று
[பின்னும்,

80. 'என்செய்தால் தீருமோதா னெம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் மொய்கழல் வேட
[ரென்றும்
மின்செய்வார் பகழிப் புண்க டீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவன் நான்'
[என்று போனூர்.

81. நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வன்கங்க ளெங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்க ணேறெனவெருக்கொண் [டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் [வைத்த
மனத்தினுங் கடிது வந்து மருந்துகள் பிழிந்து வார்த்தார்.

82. மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினுல் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னே வினிச்செய லென்று [பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்பது ஊனுக் கூனெனும் உரைமுன் [கண்டார்.

83. 'இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னெந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடுக்கு மென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தங்
முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப, [கண்

84. நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந் [தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர் கூத்து மாடி
'நன்றுநான் செய்த இந்த மதி'யென நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னலே உன்மத்தர் போல மிக்கார்.

85. வலத்திருக் கண்ணில் தங்க ணப்பிய வள்ள லார்தம்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனர் மற்றைக் கண்ணில்
உலப்பில்செங் குருதி பாயக் கண்டனர் உலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்து கொள்கை யினும்பர்மேலார்.

86. கண்டபின் 'கெட்டே னெங்கள் காளத்தி யார்கண் ணொன் [று
புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக்கஞ்சேன் மருந்துகைக் கண்டேனின்னும்
உண்டொரு கண் இக் கண்ணை யிடந்தப்பி யொழிப்பேன்' [என்று,

87. கண்ணுதல் கண்ணில் தங்க ணிடந்தப்பிற் காணுநேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்தன் திருக்கண்ணி லிடக்கா [லூன்றி
உண்ணிறை விருப்பி னேடு மொருதனிப் பகழி கொண்டு
திண்ணனர் கண்ணிலூன் றத் தரித்திலர் தேவதேவர்.

88. செங்கண் வெள்விடையின் பாகர் திண்ணனர் தம்மை
[யாண்ட
அங்கணர் திருக்காளத்தி யற்புதர் திருக்கை, அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் கண்ணப்ப நிற்க, என்ற

89. பேறினி இதன்மே லுண்டோ பிரான்றிருக்கண்ணில்வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண்(டு)
['என் வலத்தின்
மாறிலாய் நிற்க' என்று மன்னுபே ரருள்புரிந்தார்.

7. கம்ப ராமாயணம்

சோழ சாம்ராச்சியத்தின் பயனாய்த், தமிழகத்திலே காவியமும் ஓவியமும் கற்சிலையும் பொற்சிலையும் ஆடலும் பாடலும் அழகும் அறிவும் அன்பும் வழிந்தோடிய காலத்திலே கம்பராமாயணம் எழுந்தது. இது உலக மகா காவியங்களிலே ஒன்று. இதன் மாண்பைக் கதையமைப்பிலே காணலாம்; கவிப் பண்பிலே காணலாம்; காவியக் கட்டுக் கோப்பிலே காணலாம். பாத்திரங்களின் படைப்பிலும் நாடக பாவத்திலும் கம்பர் அடைந்திருக்கும் வெற்றி, வேறு எந்தக் கவிஞருக்கும் கிட்டவில்லை. கம்பராமாயணம் பெருங்காப்பியமேனும், அதைக் கம்ப நாடகம் என்னும் மரபு நிலவி வருகிறது. களம் காட்சி போன்ற நாடகப் போர்வை அமையாததால் குறைவு ஒன்றும் இல்லை. நமக்குப் பாடமாயுள்ள கும்ப கருண வதைப் படலம் நல்ல நாடகமே.

கம்பராமாயணம் முழுவதும், 'பாத்திரங்களின் உரையாடல்களிலும் விசேஷமாக அவர்கள் விம்மும் உணர்ச்சியுடன் பேசும் பாகங்களிலும் கதை வளர்ந்து கொண்டு போவதில், ஆங்காங்கே நிகழும் நாடக பாவம் நிறைந்த சம்பவங்களையும் கட்டங்களையும் சித்திரிப்பதில்தான் கம்பரின் கவிதை ஈடும் எடுப்பும் இல்லாமலும் பூரண சக்தியுடனும் விளங்குகிறது?''* இந்த இடங்களிலே கவிதை பேச்சு மொழியிலே அமைந்திருக்கிறது. நேரான நடையில், எளிய இனிய, ஆனால் அரிய சக்திவாய்ந்த வார்த்தைகளில் கவிதை இயங்குகிறது. இத்தகைய கவிதை மலிந்த இடங்கள்தான் கம்ப ராமாயணத்தின் உன்னத கவித்துவ சிகரங்கள்.

கம்பர் கவிச்சக்கரவர்த்தி; சற்றேறக் குறைய சம காலத்திலே வாழ்ந்த சயங்கொண்டார் ஒட்டக்கூத்தர் இவர்களும் கவிச்சக்கரவர்த்திகளே. இவர்கள் அந்த விருதைச் சோழ வேந்தர் ஆதரவிலே பெற்றார்கள். ஆனால் கம்பருக்கோ இப் பட்டத்தைச் சூட்டியவர் பொதுமக்கள்; 750 ஆண்டுகளின்

---

* ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்.

—கல்வியிற் பெரியார் கம்பர்.

பின்னும் அது கம்பர் ஒருவரையே குறிக்கிறது. வள்ளுவர்க்குப் போலவே தெய்வப் புலவர் என்ற அடை மொழியும் கம்பருக்கும் வழங்குகிறது. படைப்பாற்றலிலே வரம்பிலாத சக்தி வாய்ந்த புலமைதான் தெய்வப் புலமை. இத்தகைய பெரும் புலமை கம்பருக்குக் கல்வி காரணமாக அமைந்தது, ஆதலின் அவரைக் 'கல்வியிற் பெரியவர்' என்றார்கள். 'கம்பனிடைப் பெருமையுள்ளது' என்றார்கள். இப்புகழ்ச்சி கம்பருக்கே உரிய தனிச் சிறப்பு அல்லவா?

ஆங்கிலப் புலவர் கார்லைல் என்பவர், சேக்ஸ்பியரா? இந்திய சாம்ராச்சியமா?—இரண்டில் ஒன்றை விட்டுவிட நேர்ந்தால், ஆங்கில மக்கள் இந்தியாவை இழப்பதற்கு மகிழ்ச்சியுடன் இணங்குவர் என்று ஒரு சமயம் கூறினர். ஆங்கிலரது செல்வச் செழிப்புக்குக் காரணம் இந்தியாதான். என்றாலும் சேக்ஸ்பியருடன் ஒப்பிடும் போது இந்தியா அவ்வளவு உயர்ந்ததில்லை என்பது அவர் கருத்து. கம்பரை வியந்த ஒரு புலவர், இவ்வுலக ஆட்சியும் தேவலோக இன்பமுமே கம்பருடைய கவிதையால் ஏற்படும் இன்பத்துக்கு ஒரு சிறிதும் இணையாகா என்று தமது அனுபவத்தை மிகுந்த ஆர்வத்துடன் தெரிவிக்கிறார்.*

கம்பராமாயணம் ஒரு பெருங்காப்பியம்; ஆதலின், அதன் கவி நடை விரிந்து உயர்ந்து கம்பீரமாய்க் கற்பனை வளத்துடன் கோதாவரி போலச் செல்கிறது. கதைப் போக்குப் பொருத்தமாகவும் பாத்திரங்களின் உணர்ச்சி வேகங்களுக்குத் தகுந்தவாறும் இயற்கை வருணனைகளுக்கு இசைந்தவாறும் நடையின் தன்மையிலும் பாணியிலும் விதவிதமான சந்தங்களையும் வண்ணங்களையும் காணலாம். விருத்தம் எனும் ஒண்பாவில் உயர்ந்தவர் அல்லவா கம்பர்?

---

*இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம் எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன்மேரு அனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே.

கும்ப கருணன் வதைப் படலம்

1. வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை
[புக்கான்.

2. மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடற்பெருஞ் சேனை
[நோக்கான்
தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தான்ஓர்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.

3. வான்நகும் மண்ணும் எல்லாம் நகும்நெடு வயிரத்தோளான்
தான்நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்(று) அதற்கு
[நாணன்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே நாணத்தாற்சாம்பு கின்றான்.

4. ஆங்கவன் தன்மு தாதை யாகிய மூப்பின் யாக்கை
வாங்கிய வரிவில் அன்ன மாலிய வான்என் றோதும்
பூங்கழல்அரக்கன் வந்து பொலங்கழல்இலங்கைவேந்தைத்
தாங்கிய அமளி மாடோர் தவிசிடைப் பீடஞ் சார்ந்தான்.

5. இருந்தவன் இலங்கை வேந்தன் இயற்கையை எய்த
[நோக்கிப்
'பொருந்தவந்துற்றபோரில் தோற்றனை போலும்' என்ன
'வருந்தினை மனமும் தோளும் வாடினை நாளும் வாடாப்
பெருந்தவம் உடைய ஐயா என்னுற்ற பெற்றி' என்றான்.

6. கவையுறு நெஞ்சன் காந்திக் கனல்கின்ற கண்ணன்
[பத்துச்
சிவையின் வாய் என்னச் செந்தீ உயிர்ப்புறத் திறந்த
[மூக்கன்
நவையறு பாகை அன்றி அமுதினை நக்கி னலும்
சுவையறப் புலர்ந்த நாவான் இனையன சொல்ல லுற்றான்.

7. 'போயினித் தெரிவ தென்னே! பொறையினல் உலகம்
[போலும்
வேயெனத் தகைய தோளி இராகவன் மேனி நோக்கித்

தீயெனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்.

8. 'வாசவன் மாயன் மற்றை மலருளோன் மழுவாள் அங்கை
ஈசன்என் றினைய தன்மை இளிவரும் இவரால் அன்றி
நாசம்வந் துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்
பூசல்வண் டுறையுந் தாராய் இது இங்குப் புகுந்தது'
[என்றான்.

(அதற்கு மாலியவான்)

9. 'உளைவன எனினும் மெய்ம்மை உற்றவர் முற்றும்ஓர்ந்தார்
விளைவன சொன்ன போதும் கொள்கிலாய், விடுதல்
[கண்டாய்;
கிளைதரு சுற்றம் வெற்றி கேண்மைநம் கல்வி செல்வம்
களைவரு தானை யோடும் கழிவது காண்டி' என்றான்.

10. ஆயவன் உரைத்தலோடும், அப்புறத் திருந்தான் ஆண்ட
மாயைகள் பலவும் வல்ல மகோதரன் கடிதின் வந்து
தீயெழ நோக்கி 'என் இச் சிறுமை நீ செப்பிற்(று')என்ன
ஓய்வுறு சிந்தையானுக்கு உறுதபேர் உறுதி சொன்னான்.

11. வென்றவர் தோற்பர் தோற்றோர் வெல்குவர் எவர்க்கும்
[மேலாய்
நின்றவர் தாழ்வர் தாழ்ந்தோர் உயர்குவர் நெறியும் அஃதே
என்றனர் அறிஞர் அன்றே; ஆற்றலுக்(கு) எல்லை
[உண்டோ
புன்தவர் இருவர் போரைப் புகழ்தியோ? புகழ்க்கு
[மேலோய்!

12. 'இனியிறை தாழ்த்தி யாயின் இலங்கையும் யாமும் எல்லாம்
கனியுடை மரங்களாகக் கவிக்குலங் கடக்குங் காண்டி;
பனியுடை வேலைச் சின்னீர் பருகினன் இரவி என்னத்
துனியுழந் தயர்வ தென்னோ? துறத்தியால் துன்பம் மன்னோ.

13. 'முன்உனக்(கு) இறைவரான மூவரும் தோற்றார்; தேவர்
பின்உனக்(கு) ஏவல் செய்ய உலகொரு மூன்றும்
[பெற்றாய்;
புல்நுனைப் பனிநீர் அன்ன மனிதரைப் பொருள்என்
[றுன்னி
என்உனக்(கு) இளைய கும்ப கருணனை இகழ்ந்த(து)
[எந்தாய்?'

14. 'நன்றிது கருமம்' என்னு, 'நம்பியை நணுக ஓடிச்
சென்றிவண் தருதிர்' என்றான்; என்றலும்நால்வர்
[சென்றார்,
தென்திசைக் கிழவன் தூதர் தேடினர் செல்வார் என்னக்
குன்றினும் உயர்ந்த தோளான் கொற்றமாக் கோயில்
[புக்கார்.

வேறு

15. 'உறங்குகின்ற கும்ப கன்ன ! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற(து)இன்று காண்; எழுந்தி ராய்எழுந்திராய்;
கறங்கு போல விற்பிடித்த கால தூதர் கையிலே
உறங்குவாய்உறங்குவாய்; இனிக்கிடந்து(து)உறங்குவாய்.'

16. என்று சொல்ல, அன்ன வன்எழுந்தி ராமைகண்டுபோய்;
'மன்றல் தங்கு மாலை மார்ப! வன்துயில் எழுப்பலம்'
என்று சொல்ல, நன்றிதென்று மாவொ டாளி ஏவினன்
'ஒன்றன் மேலொ ராயிரம் உழக்கி விட்டெழுப்புவீர்'.

வேறு

17. என்றலுமே, அடிவணங்கிஈரைஞ்ஞூற்(று)இராக்கதர்கள்
வன்தொழிலால் துயில்கின்ற மன்னவன்தன் மாடணுகி,
நின்றிரண்டு கதுப்புமுற நெடும் உசலங்கொண் டடிப்ப
பொன்றினவன் எழுந்தாற்போல் புடைபெயர்ந்தாங்(கு)
[எழுந்திருந்தான்.

வேறு

18. ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்களும் நுங்கினன்;
ஏறு கின்ற பசியை எழுப்பினன்;
சீறு கின்ற முகத்திரு செங்கணன்.

19. 'கூயினன் நும்முன்' என்றவர் கூறலும்,
போயி னன்நகர் பொம்என்(று) இரைத்தெழ—
வாயில் வல்லை நுழைந்து மதிதொடுங்
கோயில் எய்தினன் குன்றன கொள்கையான.

20. நிலைகி டந்த நெடுமதிள் கோபுரத்து
அலைகி டந்த இலங்கையர் அண்ணலைக்,
கொலைகி டந்தவேற் கும்ப கருணன்ஓர்
மலைகி டந்தது போல வணங்கினன்.

21. வந்து அணைப்பெருந் தம்பி வணங்கலும்
தன்தி ரண்டதோள் ஆரத் தழுவினன்,
நின்ற குன்(று) ஒன்று நீள்நெடுங் காலொடுஞ்
சென்ற குன்றைத் தழிஇஅன்ன செய்கையான்.

22. உடன் இருத்தி, உதிரத்தோ(டு) ஒண்ணறைக்
குடம்நி ரைத்தவை ஊட்டித், தசைக் கொளீஇக்,
கடல்நு ரைத்துகில் சுற்றிக், கதிர்க்குழாம்
புடைநி ரைத்(து)ஒளிர் பல்கலன் பூட்டினன்.

23. 'வானரப்பெருந் தானையர் மானிடர்
கோன கர்ப்புறஞ் சுற்றினர்; கொற்றமும்
ஏனை உற்றனர்; நீ அவர் இன்னுயிர்
போன கத்தொழில் முற்றுதி போய்'என்றான்.

வேறு

24 'ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?

25. கிட்டிய தோசெரு? கிளர்பொற் சீதையைச்
சுட்டிய தோ?முனம் சொன்ன சொற்களால்
திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோ?இது விதியின் வன்மையே'!

26. என்றுகொண்(டு) இனையன விளம்பி, 'யான் உனக்கு
ஒன்றுள(து) உணர்த்துவ(து), உணர்ந்து கோடியேல்
நன்(று) அது நாயக! நயக்கி லாய் எனிற்
பொன்றினை யாகவே கோடி; போக்கிலாய்.

27. தையலை விட்டவன் சரணந் தாழ்ந்து, நின்
ஐயறு தம்பியோ(டு) அளவளாவுதல்
உய்திறம்; அன்றெனின் உளது வேறுமோர்
செய்திறம்; அன்னது தெரியக் கேட்டியால்.

28. பந்தியிற் பந்தியிற் படையை விட்டவை
சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல்
மந்திரம் அன்று;நம்வலி எலாம் உடன்
உந்துதல் கருமம்'என்(று) உணரக் கூறினன்.

29. 'உறுவது தெரிய அன்(று) உன்னைக் கூயது;
சிறுதொழில் மனிசரைக் கோறி சென்(று); எனக்கு

அறிவுடை அமைச்சன்நீ அல்லை! அஞ்சினை;
வெறுவி(து)உன் வீரம்!' என்(று) இவைவி ளம்பினன்.

30. 'மறங்கிளர் செருவினுக்(கு) உரிமை மாண்டனை ;
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை ;
இறங்கிய கண்முகிழ்த்(து) இரவும் எல்லியும்
உறங்குதி போய்'என, உளையக் கூறினன்.

31. 'மானிடர் இருவரை வணங்கி, மற்றும்அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்(டு) உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யானது முடிக்கிலேன்; எழுக போகென்றான்.

32. 'தருகஎன் தேர்படை, சாற்றென் கூற்றையும்,
வருகமுன் வானமும் மண்ணும் மற்றவும்
இருகைவன் சிறுவரோ(டு) ஒன்றி, என்னொடும்
பொருகவெம் போர்' எனப் போதல் மேயினன்.

33. அன்னது கண்டவன் தம்பி யானவன்
பொன்னடி வணங்கி'நீ பொறுத்தி யால்'என,
வன்னெடுஞ் சூலத்தை வலத்து வாங்கினன்;
இன்னம்ஒன்(று) உரையுளது என்னக் கூறினன்,

34. 'வென்றிவண் வருவன் என்(று) உரைக்கி லேன்விதி
நின்றது பிடர் பிடித்(து) உந்த நின்றது;
பொன்றுவன்; பொன்றினல் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ.

35. என்னைவென் றுளர்எனில், இலங்கை காவல!
உன்னைவென் றுயருதல் உண்மை; ஆதலால்
பின்னைநின் றெண்ணுதல் பிழை. அப் பெய்வளை
தன்னைநன் களிப்பது தவத்தின் பாலதே.

36. இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனிற் பொறுத்தி, கொற்றவ!
அற்றதால் முகத்தினில் விழித்தல், ஆரிய!
பெற்றனன் விடை'எனப் பெயர்ந்து போயினன்.

37. பாந்தளின் நெடுந்தலை வழுவிப் பாரொடும்
வேந்தென விளங்கிய மேரு மால்வரை
போந்தது போல்,பொலந் தேரிற் பொங்கிய
ஏந்தலை ஏந்தெழில் இராமன் நோக்கினன்.

38. 'தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால் ; நடுவண் நின்றதோர்

தாளுடை மலைகொலாம்! சமரம் வேட்டதோர்
ஆளென உணர்கிலேன், ஆர்கொ லாம்இவன் ?"

வேறு

39. ஆரியன் அனைய கூற, அடியிணை இறைஞ்சி, 'ஐய
பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன் ; எனக்கு
[முன்னோன் ;
காரியல் காலன் அன்ன கழற்கும்ப கருணன் என்னும்
கூரிய சூலத் தான்' என்(று) அவன்நிலை கூறல் உற்றான்.

வேறு

40. 'உன்உ யர்ந்த உரத்தினால்
மேல்நி மிர்ந்த மிடுக்கினான்;
தான்உ யர்ந்த தவத்தினால்
வான்உ யர்ந்த வரத்தினன்.

41. நன்றி தன்று நமக்கென
ஒன்று நீதி உணர்த்தினான்;
இன்று காலன்முன் எய்தினான்;'
என்று சொல்லி இறைஞ்சினான்.

வேறு

42. என்றவன் உரைத்த லோடும் இரவிசேய் 'இவனை இன்று
கொன்(று) ஒரு பயனும் இல்லை; கூடுமேற் கூட்டிக்
[கொண்டு
நின்றது புரிதும். மற்றிந் நிருதர் கோன் இடரும் நீங்கும்.
நன்றென நினைந்தேன்' என்றான்; நாதனும் 'நயன்
[ஈதெ'ன்றான்.

43. 'ஏகுதற் குரியார் யாரே' என்னலும் இலங்கை வேந்தன் —
'ஆகின்மற் றடியனேசென்(று)அறிவினால்அவனைஉள்ளம்
சேகறத் தெருட்டி ஈண்டு சேருமேற் சேர்ப்பன்' என்றான்.
மேகம்ஒப் பானும், நன்று போகென்று விடையும் ஈந்தான்.

44. தந்திரக் கடலை நீந்தித் தன்பெரும் பலத்தைச் சார்ந்தான் ;
வெந்திற லவனுக்(கு) 'ஐய! வீடணன் விரைவின் நின்பால்
வந்தனன்,' என்னச் சொன்னார்; வரம்பிலாஉவகைகூரச்
சிந்தையாற் களிக்கின் றான்தன் செறிகழற் சென்னி
[சேர்த்தான்.

45\. முந்திவந் திறைஞ்சி ஞனை முகந்துயிர் மூழ்கப் புல்லி,
'உய்ந்தனை யொருவன் போனுய் உளேயென உவக்கின்
[றேன்றன்
சிந்தனை முழுதுஞ் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே?' என்ருன் மழையினீர் வழங்கு
[கண்ணன்.

46\. 'அபயம்நீ பெற்ற வாறும் அமரரும் பெறுத லாற்ரு
உபயலோ கத்தி னுள்ள சிறப்புங்கேட் டுவந்தே னுள்ளம்.
கவிஞரி லறிவின் மிக்காய்! காலன்வாய்க் களிக்கின்
[றேம்பால்
நவையினில்வந்ததென் நீ? அமுதுண்பாய்நஞ்சுண்பாயோ?

47\. நீதியும், தருமம் நின்ற நிலைமையும், புலமை தானும்
ஆதியங் கடவு ளாலே யருந்தவ மாற்றிப் பெற்ருய்;
வேதியர் தேவன் சொல்லால் வீவிலா ஆயுள் பெற்ருய்;
சாதியின் தருமம் இன்னுந் தவிர்ந்திலே போலுந் தக்கோய்

48\. ஐய!நீ அயோத்தி வேந்தற் கடைக்கல மாகி ஆங்கே
உய்கிலை யென்னின், மற்றிவ் வரக்கராய் உள்ளோ
[மெல்லாம்
எய்கணை மாரியாலே இறந்துபாழ் படுவேம் பட்டால்,
கையினு லெண்ணீர் நல்கிக் கடன்கழிப் பாலரைக்கட்டாய்.

49\. வருவதுன் னிலங்கை மூதூர்ப் புலையெலா மாண்டபின்னை;
திருவுறை மார்ப னேடும் புகுந்தனை; என்றுந் தீராப்
பொருவருஞ் செல்வந் துய்க்க விரைந்தவண்போதி'
[என்ருன்;
'கருமமுண் டுரைப்ப(து)' என்ருன்; 'உரை' எனக்
[கழறலுற்ருன்.

50\. 'இருளுறு சிந்தை யேற்கும் இன்னருள் சுரந்த வீரன்
அருளும்நீ சேரில் ஒன்ருே? அபயமு மளிக்கும்; அன்றி,
மருளுறு பிறவி நோய்க்கு மருந்துமாய், மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை ஒழித்துவீ டளிக்கு மன்றே.

51\. எனக்கவன் தந்த செல்வத் திலங்கையு மரசு மெல்லாம்
நினக்கியான் தந்து மற்றுன் னேவலின் றெடிது
[நிற்பேன்;
உனக்கிதி னுறுதி யில்லை; உத்தம! உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து, நம்தம் மரபையும்வளர்த்து
[வாழ்தி.

52. தீயவை செய்வ ராயிற் சிறந்தவர், பிறந்த வுற்றார்,
தாயவை தந்தை யாரென் றுணர்வரோ தருமம்
[பார்ப்பார்?
நீயவை அறிதி அன்றே; நினக்கியா னுரைப்ப தென்னை?
தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வ துண்டோ?

53. தீவினை யொருவன் செய்ய, அவனொடுந் தீங்கி லாதார்
வீவினை யுறுதல், ஐய! மேன்மையோ? கீழ்மை யோதான்?
ஆய்வினை யுடையை அன்றே; அறத்தினை நோக்கி, ஈன்ற
தாய்வினை செய்ய அன்றே கொன்றனன் தவத்தின்
[மிக்கான்

54. உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததி னுதிரம்
[ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரந் தீர்வார்;
கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது கரும மன்றால்,
மடலுடை யலங்கல் மார்ப! மதியுடை யவர்க்கு மன்னே.

55. காக்கலாம் நும்முன் தன்னை எனினது கண்ட தில்லை;
ஆக்கலாம் அறத்தை வேறே என்னினு மாவ தில்லை;
தீக்கலாங் கொண்ட தேவர் சிரிக்கலாம்; செருவி லாவி
போக்கலாம்; போன பின்னை, நரகன்றிப் பொருந்திற்
[றுண்டோ?

56. மறங்கிளர்உலகைவென் றுவாழ்ந்தில;மண்ணின்மேலால்
இறங்கினை இன்று காறும் இளமையும் வறிதே செல்ல
உறங்கினையென்பதல்லால்,உற்றதொன் றுளதே? என்னீ
அறங்கெடவுயிரைநீத்தல்மேற்கொள்வானமைந்ததுஐய?

57. தேவர்க்குந் தேவன் நல்க, இலங்கையிற் செல்வம்
[பெற்றாய்;
யாவர்க்குஞ் சிறியை அல்லை; யாருனை நலியும் ஈட்டார்?
மூவர்க்குந் தலைவரான மூர்த்தியார், அறத்தை முற்றும்
காவற்குப் பிறந்து நின்றார் காகுத்த வேடங் காட்டி.

58. முனிவருங் கருணை வைப்பர்; மூன்றுல கத்துந் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை; ஈறுண்டென் றிரங்கல்
[வேண்டா;
துனிவருஞ் செறுந ரான தேவரே துணைவ ராவார்;
கனிவருங் காலத்து,ஐய! பூக்கொய்யக் கருத லாமோ?

59. வேதநாயகனே யுன்னைக் கருணையால் வேண்டிவிட்டான்,
காதலா லென்மேல் வைத்த கருணையால் ; கரும மீதே ;
ஆதலா லவனைக் காண அறத்தொடுந் திறம்பாது ஐய!
போதுவாய் நீயே,' என்னுப் பொலன்கழ லிரண்டும்
[பூண்டான்.

60. தும்பியந் தொடையல் மாலைச் சுடர்முடி படியிற் றோயப்
பம்புபொற் கழல்கள் கையாற் பற்றினன் ; புலம்பும்
[பொற்றோள்
தம்பியை யெடுத்து மார்பிற் றழுவித், தன் தறுக ணூடு
வெம்புணீர் சொரியநின்றான்; இனையன விளம்பலுற்றான்.

61. 'நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிதுநாள் வளர்த்துப்
[பின்னைப்
போர்க்கோலஞ்செய்துவிட்டாற்குயிர்கொடாதங்குப்
[போகேன் ;
தார்க்கோல மேனி மைந்த! என துயிர் தருதி யாயின்,
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதின் ஏகி.

62. மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா வரத்தி னல்நீ
உலைவிலாத் தருமம் பூண்டாய்; உலகுள தனையு முள்ளாய்;
தலைவன்நீ உலகுக் கெல்லாம் ; உனக்கது தக்க தேயால் ;
புலையுறு மரண மேனும் எனக்கது புகழ தேயால்.

63. கருத்திலா இறைவன் தீமை கருதினல் (அ)தனைக் காத்துத்
திருத்தலா மாகி லன்றோ திருத்துதல்? தீரா தாயின்,
பொருத்துறு பொருளுண்டாமோ? பொருதொழிற்
குரிய ரான
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா!

64. தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்மூன் றுலக மாண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்?

65. செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வன் தங்கை
வம்பிட்ட தெரியல் எம்முன் னுயிர்கொண்ட பகையை
[வாழ்த்தி,
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ
[டைய!
கும்பிட்டு வாழ்கி லேன்நான் கூற்றையு மாடல்
[கொண்டேன்.

66. ஆகுவ தாகுங் காலத் தாவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்;
சேகுற நினைந்தோர் நின்னி லாருளர்? வருத்தஞ்
[செய்யா(து)
ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை, என்று முள்ளாய்!

67. என்றவன் தன்னை மீட்டும் எடுத்து, மார் பிறுகப் புல்லி,
நின்றுநின் றிரங்கி யேங்கி, நீர்பொழி கண்ணில் நோக்கி,
'இன்றொடுந் தவிர்ந்த தன்றே உடன்பிறப் பென்பது'
[என்ன
வென்றிவெந் திறலி னானும் அவனடித் தலத்தின்
[வீழ்ந்தான்.

68. வணங்கினன், வணங்கிக் கண்ணும் வதனமும் மனமும்
[வாயும்
உணங்கினன், வயிர யாக்கை யொடுங்கினன் 'உரைசெய்
[தின்னம்
பிணங்கினு லாவதில்லை பெயர்வன்' என் றெழுந்து
[போந்தான்,
குணங்களா லுயர்ந்தான் சேனைக் கடலெலாங் கரங்கள்
[கூப்ப.

69. எய்திய நிருதர் கோனும் இராமனை யிறைஞ்சி, எந்தாய்!
உய்திற னுடையார்க் கன்றே அறநெறி யொழுக்க
[முண்மை;
பெய்திற மெல்லாம் பெய்து பேசினேன்; பெயருந்தன்மை
செய்திலன்; குலத்து மானந் தீர்ந்திலன்; சிறிதும்,'
[என்றான்.

70. எனஇனி துரைக்கும் வேலை இராக்கதர் சேனை என்னும்
கனைகடல் கவியின் தானைக் கடலினை வளைந்துகட்டி
முனைதொழில் முயன்றதாக மூவகை உலகம் முற்றத்
தனிநெடுந் தூளி ஆர்க்க ஆர்த்தில பரவை தள்ளி.

இலக்குவன் போர்

71. 'இராமன் தம்பிநீ; இராவணன் தம்பிநான், இருவேம்
பொராநின் றேம்;இது காணிய வந்தனர் புலவோர்;
பராவும் தொல்செரு முறைவலிக் குரியன பகர்ந்து,
விராவும் நல்லமர் விளைக்குதும் யாம்'என விளம்பா.

72. 'பெய்த வத்தினோர் பெண்கொடி எம்உழைப் பிறந்தாள்
செய்த குற்றம்ஒன் றில்லவள் நாசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ! மற்றவள் கூந்தல்தொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவன் காக்குதி' என்றான்.

73. அல்லினுற் செய்த நிறத்தவன் அனையது பகர,
மல்லினுற் செய்த தோளினன் 'மாற்றங்கள் நும்பால்
வில்லினுற் சொல்லின் அல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னுற்சொலக் கற்றிலம் யாம்'எனச் சொன்னுன்.

74. கரியின் கைகளும் புரவியின் கால்களும் காலின்
திரியும் தேர்களின் சில்லியும் அரக்கர்தம் சிரமும்.
நெரியும்சோரியுள் துறைதொறும் துறைதொறும்சுழிப்
சொரியும் பல்பிணப் பெருங்கரை கடந்தில நீத்தம். [பச்

சுக்கிரீவன் போர்

75. பொறிந்தெழு கண்ணினன் புகையும் வாயினன்
செறிந்தெழு கதிரவன் சிறுவன் சீறினுன்
'முறிந்தன அரக்கன்மா முரண்திண் தோள்என
எறிந்தனன் விசும்பின்மா மலைநன் றேந்தியே.

76. ஏற்றொரு கையினுல், 'இதுகொல் நீ அடா
ஆற்றிய குன்றம்' என்(று) அளவில் ஆற்றலான்,
நீற்றியல் நுணுகுறப் பிசைந்து நீங்கெனத்
தூற்றினன்; இமையவர் துணுக்கம் எய்தினுர்.

77. செல்வன் ஓர் நெடுங்கிரி இன்னும் தேர்ந்தென
எல்லவன் கான்முளை உணரும் எல்வையின்,
கொல்லென எறிந்தனன், குறைவில் நோன்பினேர்
சொல்லெனப், பிழைப்பிலாச் சூலம் சோர்விலான்.

78. பட்டனன் பட்டனன் என்று பார்த்தவர்
விட்டுலம் பிடநெடு விசும்பிற் சேறலும்,
எட்டினன் அதுபிடித்(து) இறுத்து நீக்கினுன்;
ஒட்டுமோ மாருதி அறத்தை ஒம்புவான்.

79. அற்றது காலையின், அரக்கன் ஆயுதம்
பெற்றிலன் பெயர்ந்திலன்; அனைய பெற்றியின்
பற்றினன் பாய்ந்தெதிர் பருதி கான்முளை
எற்றினன் குத்தினன் எறும்வெங் கைகளால்,

80. உறுக்கினர் ஒருவரை யொருவர்; உற்றிகல்
முறுக்கினர் முறைமுறை: அரக்கன் மொய்ம்பினுல்
பொறுக்கிலா வகைநெடும் புயங்களால் பிடித்து
இறுக்கினன்; இவன்சிறி(து) உணர்வும் எஞ்சினுன்.

81. 'மண்டமர் இன்றொடும் அடங்கும்; மன் இலாத்
தண்டலில் பெரும்படை சிந்தும்; தக்கதோர்
எண்டரு கருமம்மற் றிதனின் இல்'எனக
கொண்டனன் போயினன் நிருதர் கோநகர்.

இராமன் போர்

82. தீயினும் முதிர்வுறச் சிவந்த கண்ணினன்
காய்கணை சிலையொடும் கவர்ந்த கையினன்
ஏய்எனும் அளவினின் இலங்கை மாநகர்,
வாயில்சென் றெய்தினன் மழையின்மேனியன்.

83. உடைப்பெருந் துணைவனை உயிரின் கொண்டுபோய்க்
கிடைப்பருங் கொடிநகர் அடையின் கேடெனத்
தொடைப்பரும் பகழியின் மாரி தூர்த்(து) உற
அடைப்பனென் றடைத்தனன் விசும்பின் ஆறெலாம்.

84. மீட்டவன் கரங்களால் விலங்கல் ஆரையை
மூட்டற நீக்குவான் முயலும் வேலையில்
வாட்டலைப் பிடர்த்தலை வயங்கு வாளிகள்
சேட்டகல் நெற்றியின் இரண்டு சேர்த்தினன்.

85. குன்றின்வீழ் அருவியின் குதித்துக் கோத்திழி
புன்தலைக் குருதிநீர் முகத்தைப் போர்த்தலும்
இன்துயில் எழுந்தென உணர்ச்சி எய்தினன்
வுன்திறல் தோற்றிலான் மயக்கம் எய்தினன்.

86. நெற்றியில் நின்(று)ஒளி நெடிதிமைப்பன
கொற்றவன் சரம்எனக் குறிப்பின் உன்னினன்
சுற்றுற நோக்கினன் தொழுது வாழ்த்தினன்
முற்றிய பொருட்கெலாம் முடிவு ளான்தனை.

87. கண்டனன் நாயகன் தன்னைக் கண்ணுறுத்
தண்டலின் மானமும் நாணும் தாங்கினன்
விண்டவன் நாசியும் செவியும் வேரொடும்
கொண்டனன் எழுந்துபோய்த் தமரைக் கூடினன்.

88. அக்கணத்(து) அறிவுவந் தணுக அங்கை நின்று
உக்கனன் கவியரசென்னும் உண்மையும்
மிக்குயர் நாசியும் செவியும் வேறிடம்
புக்கதும் உணர்ந்தனன் உதிரப் போர்வையான்.

89. ஏசியுற் றெழும்விசும் பினரைப் பார்க்கும்தன்
நாசியைப் பார்க்கும்முன் நடந்த நாளுடை
வாசியைப் பார்க்கும்இம் மண்ணைப் பார்க்குமால்
சீசிஉற் றதுஎனத் தீயும் நெஞ்சினன்.

(இராமன் எய்த அம்புகளால்)

90. கையி ரண்டொடு.கால்களும் துணிந்தன;
கருவரை பொருவுந்தன்
மெய்யி ரண்டுநா றுயிரம் பகழியால்
வெறிநுறத் தொளைபோன;
செய்ய கண்பொழி தீச்சிகை இருமடி
சிறந்தது; தெழிப் போடும்
பெய்யும் வானிடை இடியினும் பெருத்தது
வளர்ந்தது பெருஞ் சீற்றம்

91. 'ஐயன் வில்தொழிற்(கு) ஆயிரம் இராவணர்
அமைவிலர் அந்தோயான்
கையும் கால்களும் இழந்தனன் வேறினி
உதவலாம் துணைகாணேன்
மையல் நோய்கொடு மூடித்தவா தான்! என்றும்
வரம்பின்றி வாழ்வானுக்கு
உய்யுமாறறி(து)' என்றுதன் உள்ளத்தின்
உணர்ந்தொரு துயர் உற்றான்.

வேறு

வரம் வேண்டல்

92 'நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறிஅல்லால்
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி;
ஆதியாய்! உனைஅடைந்தான்; அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா! இன்னம்உனக்(கு)அடைக்கலம்யான்வேண்டினேன்.

93. தம்பிஎன நினைந்திரங்கித் தவிரான்அத் தகவில்லான்;
நம்பிஇவன் தனைக்காணிற் கொல்லும்,இறை நல்கானல்;
உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழு
எம்பிபிரி யானாக அருளுதியான் வேண்டினேன். [தும்

94. மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய்; நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுட்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருள்'என்றான்.

95. வரங்கொண்டான்; இனிமறுத்தல்
வழக்கன்(று) என்(று), ஒரு வாளி
உரங்கொண்ட தடஞ்சிலையின்
உயர்நெடுநாண் உட்கொளுவாச்
சிரங்கொண்டான்; கொண்டதனைத்
திண்காற்றின் கடும் படையால்
அரங்கொண்ட கருங்கடலுள்
அழுவத்துள் அழுத்தினன்.

8. காசிக் கலம்பகம்

இதன் ஆசிரியர் குமர குருபரர்; இவர் பழுத்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்; சிறந்த சிவநேசச் செல்வர்; உயர் குணம் ஒருங்கமைந்த பெருந்தகை. உலகியல் அறிந்த பேரறிஞர். தமிழ் மொழியின் பால் இவருக்கிருந்த பக்தி அளவிடற்கரியது. அதனைத் தீந்தமிழ், தெய்வத் தமிழ் என்பர். இவருடைய தமிழ் அன்பு எல்லை கடந்த நிலையிலே காசித் தெருவில் கொற்றியார் கொழுத்த தமிழால் பாடி ஆடுகிறார் என்பர். துறவியாகிய இவர் எதையும் விரும்பவில்லை. எனினும், சொல்விற்பனமும் கவி சொல்லவல்ல நல்வித்தையும் வேண்டும் என்ற வேட்கை மாத்திரம் இவரை விடவில்லை. பாவும் பாவினமும் ஆகிய செய்யுட்களைப் பாடுவதிலே இவருக்குமிகுந்த வல்லமையிருந்தது. இல் பொருள் உவமை உயர்வு நவிற்சி தற் குறிப்பேற்றம் முதலிய அணிகளை ஆடம்பரமாக இவர் கையாளுவர். இவருடைய கற்பனையிலே யதார்த்தத்தைக் காணல் அரிது. இவருடைய செய்யுட்களின் தனிச்சிறப்பு அவற்றின் பெருமித நடையும் ஓசை வளமுமே. சொற்களும் சொல் தொடர்களும் பொருளை நதியின் வெள்ளப் பெருக்குப் போல் இவர் வாக்கிலே பிரவகிக்கும். சைவத் துறவியாகிய இவருடைய சமயப் பற்றும் சித்தாந்த நூற் பயிற்சியும் மூர்த்தி தலம் தீர்த்தங்களின் பால் இவருக்குள்ள பக்தியும் அளவிடற் கரியவை. தருமபுரத்திலே ஸ்ரீ மாசிலா மணித்தேசிகர் பால் ஞானோபதேசம் பெற்றுத் துறவு பூண்டு தலயாத்திரை சென்று காசியிலே தங்கி மடாலயம் நிறுவினர்.

இவர் பாடிய மீனாட்சியம்மை குறத்திலே

சீர்வாழி கச்சிநகர்த் திருமலை பூ பதிவாழி
பேர்வாழி அவன் செல்வம் பெரிதூழி வாழியவே

என்றதால் இவருடைய காலம் 17-ம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்பர்.

கலம்பகம் என்பதற்குப் பலவகையாகப் பொருள் கூறப் படினும், பலவகை மலர்களும் கலந்தமைந்த கலம்பக மாலை போன்றது என்பது தான் பொருந்தும். கதம்பம் என்பது இவ் வாறு திரிந்தது போலும். இந்தப் பிரபந்தத்திலே அகப் புறத் துறைகள் பலவும் பலவகை யாப்புக்களும் பல்வேறு பொருள் களும் விரவிக் கலந்து கிடப்பதால் இதைக் கலம்பகம் என்றார்கள். மறம், குறம் சம்பிரதம் சித்து களி போன்ற உறுப்புக்கள் கற்பனை வளத்துடன் இதில் சாதுரியமாய்ப் பாடப் பெறும்; சிலேடை யமகம் திரிபு மடக்குப் போன்ற சொல்லணிகள் சுவை தோன்றப் பாடப் பெறும்.

காசிக் கலம்பகம்

புயவகுப்பு

ஆசிரியச் சந்தவிருத்தம்

1. இடமற மிடைதரு கடவுளர் மடவியர்
எறிதரு கவரிநி—ழற்கட்டுயின்றன
இனவளை கொடுமதன் இடுசய விருதென
இறையவ ளெழுதுசு—வட்டுக்கிசைந்தன
இருவரும் நிகரென வரிசிலை விசயனொ(டு)
எதிர்பொரு சமரின்இ—ளைப்புற்றிருந்தன
இணையடி பரவிய மலடிமுன் உதவிய
இடியலின் உணவொரு—தட்டைப்பரிந்தன
படவர வுமிழ்தரு மணிவெயில் விடவளர்
பரிதியொ டெழும்உத—யத்திற்பொலிந்தன
பருகுமின் அமிர்தென உருகிரு கவிஞர்கள்
பனுவலின் மதுரஇ—சைக்குக்குழைந்தன
படரொளி விடுசுடர் வலயம தெனவொரு
பருவரை நெடுவில்—எடுத்துச்சுமந்தன
பார்புரம் எரியொடு புகையெழ மலர்மகள்
பணைபுயந் தழுவுச—ரத்தைத்துரந்தன
மடலவிழ் தடமலர் இதழியின் இழிதரு
மதுமழை யருவிகு—ளித்துக்கிளர்ந்தன
வழிதர உதிரமும் நிணமொடு குடர்களும்
வருநர கரியின்ம—தத்தைத்தடிந்தன
மதகரி உரியதள் குலகிரி முதுகினின்
மழைமுகில் தவழ்வதெ—னப்பொற்பமைந்தன
மலியுமிழ் நிலவொடும் அடுதிறல் வெயிலெழ
மதிகதிர் வலம்வரு—வெற்பொத்துநின்றன
குடவளை துறைதொறும் உடுநிரை யெனவிரி
குளிர்நில வெழஉமிழ்—முத்தத்தடங்கரை
குலவிய படர்சிறை மடவன மொடுசில
குருகுகள் சினையொ(டு)அ—ணைத்துத்துயின்றன
குரைபுனல் வரநதி சுரர்தரு முருகவிழ்
கொழுமலர் சித(று)அவி—முத்தத்துவிண்டொடு
குல கிரி யுதவிய வளரிள மதிநுதல்
கொழுநர்தம் அழகிய—கொற்றப்புயங்களே.

பிச்சிரியார்

கட்டளைக்கலிப்பா

2. தண்ணு லாம்பொழிற் காசித் தெருவில்நீர்
தரித்தி டுந்தவக் கோலமுஞ் சூலமும்
பெண்ணெ டாடுமப் பிச்சனுக் கொத்தலால்,
பிச்சி யாரெனும் பேர்தரித் தாடுவீர்!
வெண்ணி லாமுகிழ்க் குங்குறு மூரலால்
வீணி லேயெம் புரத்தெரி யிட்டநீர்,
கண்ணி னுலுமிக் காமனைக் காய்ந்திடிற்
கடவுள் நீரென் றிறைஞ்சுதுங் காணுமே.

மடக்கு

3. சரியோ டொழுகுங் கரவளையே
சரக்கோ டொழுகுங் கரவளையே
தையற் கனமே தீவிடமே
தவழுங்கன மேதீவிடமே
சொரிவ தடங்காக் கண்ணீரே
துளிக்குந் தடங்காக் கண்ணீரே
துயரே வதித னந்தினமே
சூரற் கழுத்தி னந்தினமே
கருகிப் புலர்ந்த நாவாயே
கரைவந் திழியு நாவாயே
கண்க ளுறங்கா கழுநீரே
கடலே கழியே கழுநீரே
அரிவை யிவளுக் குருகீரே
அனத்தோ டுறங்குங் குருகீரே
அளியா ரிதழி வனத்தாரே
அருளா னந்த வனத்தாரே

சம்பிரதம்

4. உண்டகில கோடியும் உமிழ்ந்திடுவன்; முகிலேழும்
ஒக்கப் பிழிந்துகடலே
மூடன்வாய் மடுத்திடுவன்; வடமேரு மூலத்
தொடும்பிடுங் கிச்சுழற்றி
அண்டபகி ரண்டமும் அடித்துடைப் பன்; புவனம்
அவையேழு பிலமேழுமாய்

அடைவடை வடுக்கிய அடுக்கைக் குலைப்பன்;இவை
அத்தனையும் வித்தையலவால்;
கொண்டல்மணி வண்ணனும் முண்டகக் கண்ணனும்
குஞ்சித்ச் செஞ்சரணமும்
குடிலகோ டீரமுந் தேடியத லமும்அண்ட
கோளமுந் துருவியோடப்
பண்டைமறை யோலமிட வெளியில்நட மாடும்
பரஞ்சுடர் பொலிந்தகாசிப்
பதியிலடை யாமலிப் பல்லுயிர்த் தொகுதியும்
பரமபத மடைவிப்பனே.

மடக்கு

5. வண்ண மேனி யரும்பு வனங்களே
வாசம் வாச மரும்பு வனங்களே
நண்ணு மாலய மாதவ ரங்கமே
ஞால மேழ்தரு மாதவ ரங்கமே
தண்ணென் மாலை தருமருக் கொன்றையே
தருவ தையர் தருமருக் கொன்றையே
கண்ணி னிற்பர் மனத்திருக் கோயிலே
காசியே யவர்க் கோர்திருக் கோயிலே.

சித்து

6. ஏடவிழ்பொற் கொன்றைஅகி லேசரன்பர்க் கேயிரும்பை
ஆடகமாக் கிக்கொடுத்தோம் அவ்வளவோ—நீடுதிறல்
காட்டுமிமை யோர்க்கிருப்புக் கற்கனக மாக்கியண்ட
ஓட்டினையும் பொன்னாக்கி னோம்.

களி

7. சோதி யொன்றிலொரு பாதி சத்திஒரு
பாதியும் பரம சிவமெனத்
தொகுத்து வைத்தஅவி முத்த நாயகர்
துணைப்ப தம்பரவு களியரேம்;
ஓதி யோதியி ளைப்பர், வேதம்
உணர்த்து தத்துவ முணர்கிலார்,
உணரும் வண்ணமநு பவத்தில் வந்திடுமோர்
உண்மை வாசகம் உணர்த்துகேம்;

ஏதி லுலற மனைத்தி னும்பசு
விளைப்ப டுத்(து)அனல் வளர்த்திடும்
யாகமேஅதிக மென்ப தன்பர்தம்
இறைச்சி மிச்சிலதி லிச்சையார்;
ஆதி யாரறிவர் அதுகி டக்கமது
அருந்தில் அப்பொழுதி லேபெறற்(கு)
அரிய தோர்பரம சுகம்வி ளைந்திடுவ(து)
அதும றுத்தவிர வில்லையே.

மறம்

8. வையமுழு தொருங்கீன்ற விடப்பாகர் ஆனந்த
வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை வேட்டரசன்
விடுத்த தூதா!
கையிலவன் றிருமுகமோ காட்(டு;)இருகண் தொட்டு
கதையில் தாக்கிச் [முட்டைக்
செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோ நாசியொடு
செவியுந் தானே.

குறிப்புரை

1. முல்லைப்பாட்டு

1. நன் - அகலம், அகர ஈற்று உரிச்சொல். வளைஇ - வளைத்து. நேமி - சக்கரம்.

2-3. மா - பெருமை. மாவலி வார்த்த நீர் தன் கையிலே சென்ற தாக உயர்ந்த திருமால் - வாமனவதாரத்தை விடுத்து, திரிவிக்கிரமா வதாரம் எடுத்த திருமால். மால் - முல்லைக்குரிய தெய்வம்.

4. பாடு இமிழ் - மிக்கு ஒலிக்கின்ற. ஏர்பு - எழுந்து - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

5. கோடு - மலைச்சிகரம்.

6. கடி - காவல்.

8-10. நெல்லுடனே நாழியிலே கொண்ட அலரியைத் தூவி.

11. விரிச்சி நிற்ப - நற்சொல் கேட்டு நிற்க. (அப்போது அரு கிருந்த மாட்டுக் கொட்டிலில்.)

விரிச்சி - வேண்டிய பொருளின் விளைவு நன்கு அறிதற்கு ஈண்டு இருள்மாலைச் சொல் ஓர்த்தன்று - புற. வெண். பா.

12. பசலைக் கன்று - இளங்கன்று.

13. சுவல் - தோள். கை(யிடத்தனவாகி)ய.

15. உய்த்தர - செலுத்த.

18. வாய்ப்புள் - நற்சொல்.

19. தெவ்வர்முனை - பகைப்புலம். திறையர் - கப்பப்பொருளை உடையராய்.

20. வாய்வது - உண்மை.

21. பருவரல் எவ்வம் - மனத்தடுமாற்றத்தால் உளதான வருத் தம். களை (-போக்கு) வாய். மாயோய் - மாமைநிறம் வாய்ந்தவளே.

22-23 — தலைவனுடைய புகழையும் மானத்தையும் எடுத்துக் காட்டி, பகைவர் பெருமையைக் கூறிக் காட்டிப் பலபடியாக வற்புறுத் தவும், அன்பின் மிகுதியால் கலக்கம் மிகுந்து உணராதவளாய், பூப் போலும் மையுண்ட கண்கள் தனித்து வீழ்கிற முத்துப்போலும் துளியை (- கண்ணீரை)த் துளிப்ப.

24. புறவு - முல்லைநிலம்.

25. சேண் நாறு பிடவம் - நெடுந்தூரம் வாசனை வீசுகிற பிடவு. புதல் - புதர். எருக்கி - வெட்டி.

26. வேடு புழை அருப்பம் மாட்டி - வேட்டுவரது வாயில்களமைந்த அரண்களை அழித்து. காட்ட - அந்தக் காட்டிலே உள்ள.

27. முள்புரிசை - முள்ளாலாகிய மதில். ஏமுற வளை இ - பாதுகாவலாக வளைத்து.

28. புணரியின் பரந்த - கடல்போலப் பரந்த.

29. உவலைக்கூரை-தழையாலே வேய்ந்த கூரை. ஒழுகிய-ஒழுங்காய் அமைந்த.

30. கவலைமுற்றம் - நாற்சந்தியான முற்றம்.

31. தேம் படுகவுள - மதம் பாய்கின்ற கன்னத்தினை உடைய.

33. குளகு - அதிமதுரத் தழை.

34. (யானைகள்) கொம்புகளிடையே தமது துதிக்கைகளை வைத்துக் கொண்டு நின்றன.

35. கவைமுள் கருவி - கவர்த்த முள்ளையுடைய பரிக்கோல். வடமொழி - யானைப்பேச்சான வட சொற்கள் - 'அப்புது அப்புது; ஆது ஆது; ஐ ஐ' என்பன.

36. கவளங் கைப்ப - கவளத்தைத் தின்னும்படி வற்புறுத்த.

37-38. துகிலைக் காவிக்கல்லிலே தோய்த்துடுத்த விரதங்களையுடைய அந்தணன் தனது முக்கோலிலே அத்துகிலைக் காயவைத்த தன்மைபோல. நற்போர் - அறப்போர்.

39. வில்லில் அம்பறாத் தூணிகளைத் தூக்கி.

40. கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டின கூடாரங்களிலே.

41-44. குந்தங்களை ஊன்றிக் கிடுகுகளைக் குத்தி வில்லாலாகிய இவ் அரணை பாதுகாவலாக அதனுள் தங்கும் படையின் நடுவே நெடிய குத்துக் கோலுடனே சித்தரிக்கப்பெற்ற மதிள்திரையை வளைத்துக் கோயில் அமைத்து. கண்டம் - மதிள் திரை - பல்வண்ணத் திரை.

45-49. சிறு புறத்தினை (- முதுகு) உடைய மங்கையர். வாளை அரைக்கச்சிலே தரித்த மங்கையர், நெய்யைக் காலுகிற திரிக் குழாயைக் கையில் உடையராய்த் தமது குழாயிலே உள்ள திரியைக் கொளுத்திக் கொண்டுபோய் அவிகிற விளக்குகளைக் கொளுத்த. கையமை விளக்கம் - வேலைப்பாடமைந்த விளக்கு,

50. மணியொலி அடங்கிய நள்ளிரவில். யானை குதிரைகள் துயில்வதால் அவற்றின் மணியோசை அடங்கின. அல்லது, கோயில் பணி ஒடுங்கவேண்டிய நிலைமையை மணியொலியை அவித்து அறிவித்தல் அக்கால இயல்பு.

51. அதிரல் - புனலி - மோசி மல்லிகை. படாஅர் - புதர்.

52. சிதர்வரல் - சிறு துளிகளோடு வருகிற,

53-54. துகில் முடித்துப் போர்த்த - தலைப்பாகை கட்டி, சட்டையிட்ட. தூங்கல் ஓங்கு நடை - அனந்தரினையும் கடமையிற் கருத்தும் உடைய (மெய் காப்பாளர்.)

58. கன்னல் - நாழிகை வட்டில்.

59. மத்திகை - குதிரைச் சம்மட்டி. மத்திகை வளைந்து கிடக்கிற உடை; மடிந்து தாழ்ந்து இழை செறிந்த உடை.

60. மெய்ப்பை - சட்டை.

62. புலிச்சங்கிலி விடப்பட்ட அலங்கரிக்கப்பெற்ற மாட்சிமை வாய்ந்த கோயில்.

63. திண்ஞாண் எழினி - வலிய கயிற்றால் கட்டப்பெற்ற திரை.

64. யவனர் எழினி வாங்கிய (- விலக்கிய) பள்ளி.

66. படம் - சட்டை; ஊமைகள். **67.** அமர்நசை - போர் விருப்பு.

68. எஃகம் - வாள்.

69. வேழத்தை நினைத்தும். வேழத்து - பகைவர் யானையினுடைய. அத்து - சாரியை.

70. துமிய - அற்று விழும்படி.

71. கண்ணி - வஞ்சிமாலை. நல்வலம் திருத்தி - நல்ல வெற்றியை உண்டாக்கி.

72. செஞ்சோற்றுக் கடன் இறுத்து இறந்த வீரரை நினைத்தும். தோல் துமிபு - கவசத்தைத் துளைத்து.

75-76. கையிலே தலையை வைத்து, நெடிது நினைந்து - நொந்து போன இந்தப் படை நாளை எவ்வாறு போர் புரியும் என்று ஆலோசித்து.

77-78. பகைவரைக் கருதிவைத்த வாளைப் பிடித்த வலிய விரல். கண்ணி (-வஞ்சி)க்கு வெற்றியை நிலைபெறுத்தி; அதாவது, முன்னேறிச் சென்று, பகைவரை அவரிடத்திலே வெல்ல நினைந்து. வஞ்சி, பகைமீது செல்வோர்க்கு உரிய அடையாள மாலை.

79. பிகையரசர் நடுங்குதற்குக் காரணமான பாசறை.

81. தபு - கெடுத்த. புலம்பு - தனிமை.

84. ஏ உறு மஞ்ஞை - அம்பு தைத்த மயில். இழை - அணி.

85 பாவை விளக்கு - பொற்பாவை எந்திய அகல்.

87. முடங்கு இறை - கூடுவாய், மூட்டுவாய்.

88. ஓர்ப்பனள் - ஓர்ந்து. அருவி இசை ஓர்ந்து, தலைவன் வருகையை ஓர்ந்து.

89. செவி நிரம்பும்படி ஆரவாரித்தன. (மறுநாள்) வென்று, (வினை முடித்து விரைந்து மீள்கின்றான் ஆதலின்,)

91. வெல்கொடி உயர்த்தி. வலன் ஏர்பு - வெற்றி தோன்ற.

92. கொம்பும் சங்கும் முழங்க. அயிர - நுண்மணலிடத்தன வாகிய.

95. கோடல் - காந்தள். 96. குருதி - உதிரம்.

97. கானம் நந்திய - காடு தழைத்த. பெருவழியிலே.

99. புல்வாய்க் கலையோடு மான் துள்ள. (அவற்றைக் கண்ட தலைவனுக்கு வேட்கை பிறந்தது.)

100. (முன் பனி தொடங்கும்) திங்கள்.

101. பிறக்கு ஒழிய - பின்னுக 102. துனைபரி - விரைந்து செல்லும் பரி.

103. மா - குதிரை. மா ஆலின (- 89.)

வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுரம் மருங்கின் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமை யான - தொல். கற்பியல்.

2. புறநானூறு

கோவூர்கிழார் :

இவர் சோழ வேந்தரால் ஆதரிக்கப் பெற்ருர். உபகாரிகளே இவர் நன்றியுணர்ச்சியுடன் போற்றுகிருர். அறந்திறம்பா வீரப் பண்பைப் பாராட்டுவதிலே ஆற்றல் மிகுந்த இவர், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உண்மையை வலியுறுத்திப் போர் வெறியைத் தவிர்ப்பதற்கும் முயன்றுள்ளார். சோழன் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கிள்ளிவளவன் - இவர்களே இவர் பாடியிருக்கிருர்.

நலங்கிள்ளி :

சோழ வேந்தனுகிய இவன் ஒரு புலவனும் ஆவான். பாண்டி நாட்டிலிருந்த ஏழரண்களே அழித்துத் தன் புலிக்கொடியை நாட்டினுன். தாயத்தாரோடு பகைத்து ஆவூரையும் உறையூரையும் முற்றுகையிட்டான். புலவர் அறிவுரைகளால் போர் வெறியைத் தவிர்த்து அறநெறியை மேற்கொண்டான்.

கிள்ளிவளவன் :

இவனேக் குளமுற்றத்துத் துஞ்சிய -(இறந்த) கிள்ளிவளவன் என்பர். கொடையும் வீரமும் புலமையும் உடையவன்.

நெடுங்கிள்ளி :

இவனேக் காரியாற்றுத் துஞ்சியவன் என்பர். நலங்கிள்ளியின் பகைவன்.

வஞ்சித் திணை — வஞ்சிப் பூவைச்சூடிப் பகை நாட்டைக் கைப்பற்றல்.

1. கொற்றவள்ளே - அசன் புகழ்பாடிப் பகை நாடு அழிதற்கு [வருந்தல்.
2. துணேவஞ்சி - சமாதானம் செய்வித்தல்.

வாகைத் திணை — வாகைப் பூவைச் சூடிப் பகைவென்று ஆரவாரித்தல்,

1. அரசவாகை-அரசனது இயல்பு வெற்றி இவைகளேக் கூறல்.
2. மழபுல வஞ்சி - பகை நாட்டைக் கொள்ளே இடல், எரி ஊட்டல்.
3. மூதின் முல்லே - மறக்குடியிலே பிறந்த மகளிரது வீரப் பண்பை மிகுத்துப் பேசல்.

பாடாண் திணை — ஒருவனது கீர்த்தி வலி கொடை அளி முதலிய பண்புகளேப் பாடல்.

1. இயன்மொழி - இயல்பைக் கூறல்.
2. கடை நிலே - வாயிலின் கண் நிற்றல்.
3. பாணுற்றுப்படை - பாணனே வழிப்படுத்தல்.
4. வாழ்த்தியல் - தலேவனே வாழ்த்தல்.

(1) 1. மரபில் - முறைமையால்.

1-2, அறத்தின் உயர்வைப்பற்றி, "பொருளு மின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை விடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றினும் வலியுடைத்து" என்பர் பரிமேலழகர். (குறள் 4-ஆம் அதிகார அவதாரிகை.)

3. இருகுடை - சேர பாண்டியருடைய இருகுடைகள்.

4. உரு கெழு மதி - நிறம் பொருந்திய திங்கள். நிவந்து-ஓங்கி.

5. வேட்டம் - வேட்கை. 6. ஒல்லாய் - உடன் படாய்.

7. நுதிமுகம் மழுங்க - (கோட்டினது) நுனைமுகம் தேய.

12. வேற்றுப் புலம் - பகைப்புலம்.

14. மான் - குதிரை.

17. வடபுலத்து அரசு துஞ்சாக்கண்ண என்று மாற்றுக.

(2) 1. கடும்பின் - சுற்றத்தினுடைய. நிறையாக - நிறைக்கும் பொருட்டு விலையாக.

2. பூவா வஞ்சி - கருவூர். ஒன்றே, எண்ணிடைச் சொல்.

3. வண்ணம் - நிறமுடைய் கலவை. நீவிய - பூசப்பட்ட. இறை - முன்கை. பணை - மூங்கில்.

4. பூ விலை - பூவிற்கு விலை.

7. பழைய நிலவுரிமையைக் குறிப்பின். மதி - அறிவு.

8. வேட்கோ - குயக்குலத்தோர். தேர்க்கால் - தேர்க்கால் போன்ற திகிரி. 9. குரூஉத்திரள் - கனத்த திரள்.

10. குடுமித்து - முடியையுடையது. பணை - மருதம்.

அவன்கொண்ட குடுமித்து, இந்நாடு; ஆதலால் வஞ்சியையும் தருகுவன் மதுரையையும் தருகுவன்; ஆதலால், பரிசின் மாக்காள்! நாம் எல்லாம் அவனைப் பாடுகம் வம்மினோ எனக் கூட்டுக.

(3) 1. கதநாய் - சினம் பொருந்திய நாய்.

2. வட்டி - கடகப்பெட்டி. ஆய்மகள் - இடைமகள்.

3. தசும்பு - மிடா.

4. ஏரின் வாழ்நர் - உழவர். பேர் இல் அரிவையர் - பெரிய இல்லின்கண் மகளிர். முகந்தனர் கொடுப்ப : பலர் பாற் படர்க்கை வினைமுற்று வினையெச்சமாயிற்று.

7. தென்னம் பொருப்பு - தென்றிசைக் கண்ணுள்ள பொதியின் மலை.

8. ஏழெயிற் கதவம் - ஏழு மதிலின் கணுள்ள கதவுகள்; ஏழு பொன் கோட்டை என்று இக்காலத்தில் வழங்கும் ஊராதல் கூடும். எறிந்து - அழித்து. உழுவை - புலி. 10. வஞ்சி - மேற் செலவு.

11. தா தெரு மறுகு - தாதாகிய எருப்பொருந்திய மறுகு.

14. ஊன் சோற்று அமலை - தசையோடு கூடிய பெருஞ் சோற்றுத் திரளை. பாண் கடும்பு அருத்தும் – பாணர் சுற்றத்தை ஊட்டும்.

16. தைஇய - புனைந்து செய்யப்பட்ட. அல்லிப்பாவை ஆடுவனப் பென்றது, ஆண் கோலமும் பெண் கோலமுமாகிய அவ்விருவரும் ஆடும் கூத்தை.

17. காம இருவர் - அன்பினையுடைய துணைவனும் துணைவியுமாகிய இருவர்.

22. விழவு - சிறு சோற்று விழவு. சோற்றைத் தயிர் முதலியவற்றினோடு கலந்து உருண்டைகளாக்கி அவற்றை வருவோர் ஒவ்வொருவருக்கும் கொடுத்து மகிழ்தல். வெம்முனையிருக்கை நீ கொண்ட விழவினும் பல என்று கூட்டுக.

(4) 1. கொண்டி - பொருளின் மிகுதி.

3. பொருநன் : உவமிக்கப்படுபவன். பிறர்ப்பாடி - பிறரைப் பாடி. 9. சோற்றுன் - சோற்றோடு.

12. ஏழ்மணி - எழுச்சியையுடைய மணி. உத்தி - படப்பொறி.

13. கட்கேள்வி - கண்ணுற் கேட்டல். கவை நா - பிளவுபட்ட நாக்கு. 15. வறன் - வறுமை. வழங்கு வாய்ப்ப - பிறர்க்கு யாம் கொடுத்தல் கைகூடும்படி. 14-15 வறுமைக்கு அரவின் விடம் உவமம்.

16. மதி, அத்தை - அசை நிலைகள். 18. கிடைக்காழ் - நெட்டியின் காம்பு. 19. சிறு கோல் - கிணையடிக்கும் சிறு கோல்.

22. வென்ற தேர் - ஏனையோரை வென்ற தேரையுடைய. பிறர் - அயலரசர். வேத்தவையான் - அரசவைக்கண்.

(5) 1. இரும்பிடி - கரியபிடி. தொழுதி - ஈட்டம். படியா (வாய்).

2. நெய்ம்மிதி கவளம் - நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளம்.

3. திருந்து அரைநோன் வெளில் - திருந்திய மருங்கையுடைய வலிய கம்பம்.

4. கைய - கையை உடையவாய். பலவின்பாற் படர்க்கை வினைக் குறிப்புமுற்று வினையெச்சக் குறிப்பாயிற்று.

7-8. நீரில்லாத தொழில் புனைந்த நல்ல மனையிடத்துள்ளார் வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக் கேட்கவும்.

9. அம்ம - கேட்பித்தற்கண் வந்தது.

10. துன்னரும் துப்பு - நெருங்குதற்கு அரிய வலிமை. மான் - [குதிரை.

11. அறவை - அறத்தையுடையை யாயின்.

(6) 1. பனைத்தோடு மலைந்தோன் - சேரன்,

2. வேம்பின் தெரியலோன் - பாண்டியன். 3. நின என்பது நின்ன என்று விகாரமாயிற்று.

10. மெய்ம் மலி உவகை - உடம்பு பூரிக்கும் உவகை. இது சந்து செய்தலால் துணைவஞ்சியாயிற்று.

(7) 1. வள்ளியோர் - வண்மையுடையோர். படர்ந்து - நினைத்து.
3. வடியா நாவின் - திருந்தாத நாவால். 6. வரிசை - சிறப்பு.
7. அண்ணாந்து ஏகி - தலையெடுத்து நடந்து.

பரிசில் வாழ்க்கை, நும் மோரன்ன செம்மலுமுடைத்து; ஆதலால், நண்ணார் நாண இனிதொழுகினல்லது, பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்று; 'கோவூர் கிழார் தாமும் பரிசில் வாழ்நருள் ஒருவராதலின் 'வடியா நாவின் வல்லாங்குப் பாடி' என்று பணிந்து கூறினர்.

(8) 1. காலன் - கூற்றுவன். 2. விழுமியோர் - பெரியோர்.
4. உற்கம் உற்கவும் - எரிகொள்ளி எரிந்து விழவும்.
5. கோடாகிய வற்றல். 6. கனலி - ஞாயிறு. துற்றவும் - செறிந்து தோன்றவும்.
9. களிறு - பன்றி. காழகம் நீப்பவும் - ஆடையைக் களையவும்.
10. படை - படைக்கலம். 11. காணா - கண்டு. உற்கம் முதலிய நான்கும் உற்பாதமாய் நனவிற் காணப்பட்டன; எயிறு நிலத்தில் வீழ்தல் முதலியன கனவிற் காணப்பட்டன.
12-15. மனைவியர்க்குத் தமது வருத்தந் தோன்றாமல் கணவர் மறைக்கும் திறன் கூறப்பட்டது.

வேந்தே, முன்ப, வளவ, நீ இத்தன்மையை யாதலால் நிற் சினைஇயோர் நாடு, பைதன் மாக்களொடு, பெருங்கலக்குற்றதெனக் கூட்டுக. மன்னன் புகழும் ஒன்னார் நாடழி பிரங்கியதும் கூறுதலால் கொற்ற வள்ளையாயிற்று.

(9) 1. தொடை - நரம்பு. சீறியாழ்ப்பாண - சிறிய யாழையுடைய பாண. 2. காழ் - நாராசம். ஆமையை நாராசத்திலே கோத்தாற் போலக் கோலால் பிணிக்கப்பட்ட உடுக்கை.

3. கிணை - உடுக்கை. 4. இவன் தணிக - இவ்விடத்தே ஆறிப் போவீராக. 6. தைஇத் திங்கள் - தை மாதத்தில். 7. கூழ் - சோறு. வியன் நகர் - அகன்ற வீடு. 9. இரு மருந்து - சோறும் தண்ணீரும்.
11. நாற்றம் நாட்டத்து அறுகால் பறவை-மணத்தை ஆராயும் ஆராய்ச்சியை யுடைய வண்டு.
14. ஞாங்கர் - மீது. ஊதும் - நுகரும். 14. ஓதி - கூந்தல்.
16. செல்வை யாயின் செல்வை ஆகுவை - செல்வாயானால் செல்வத்தை யுடையையாவை.

(10) 1. கயம் - பள்ள மான நீர் நிலை. 3. வறை - வறையல்.
4. சூடு - சுடப்பட்ட இறைச்சி. 6. ஆன் பயம் - பசுப்பால்.
7. உண்ட் வியர்ப்பு - உண்டமையாலுண்டான வேர்வை.
12. புறவு - முல்லை நிலம், 13. குறும்பு - சிற்றரண்கள்.

15. சினை - கிளை. நிலக்குந்து - நிலக்கும். பழைய வினைவடிவம்.
17. உமண் - உப்பு விற்குஞ் சாதி. 19. பொரா - ஒப்பில்லாத.
24. வெள்ளி - சுக்கிரன். 25. வேண்டியது-யாம் வேண்டியதை.

(11) 1-2. புறவின் அல்லல் தீர்த்தோன் - சிபி. மருகனை - மரபில் உள்ளாய். 3. வறுமைக்கு அஞ்சி அறிவால் உழுதுண்ணும் புலவரது.

5. அழூஉஅல் - அழுகை. அழால் களிறு கண்டு மறந்த.

7. விருந்திற் புன்கண் - முன்பு அறியாத புதிய வருத்தம்.

8. வேட்டது செய்ம்மே - விரும்பியதைச் செய்வாயாக.

நீ 'புரு முதலாயினவற்றின் துயர் தீர்த்தற்கு உயிர்க்கொடை பூண்டோன் மருகனுதலானும், இவர் கற்றோர் வறுமை யஞ்சிப் பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர் மரபினுள்ளாராதலானும், இவர், நின்னால் அருளத்தகின் அல்லது முனியத்தகார் என்பதாம்.'

இவரைக் கொல்லாமற் சந்து செய்வித்தலின் துணைவஞ்சியாயிற்று.

(12) 1-3. 'பொற் கம்பியினை ஒத்த முறுக்கு அடங்கின நரம்பினையும் மின்னலை யொத்த தோலினையும், மிஞிறென்னும் வண்டுச் சாதியின் குரல் போன்ற ஓசையையுமுடைய சிறிய யாழ்க்கல்வியின் நன்மை நிறைந்த விருப்பம் வந்த பாண.'

பச்சை - தோல். நயம் - நன்மை.

4. எஃகம் - வேல். சீறூர் மன்னன் - குறுநில மன்னன்.

6-7. அரசன் கோபித்தெறிந்த வேல் என் தலைவனது சந்தனம் பூசிய மார்பின் உள்ளே சென்றது. அகலம் - மார்பு.

8-9. நம் பெருவிறல், தன் மார்பின் உட்சென்ற அவ்வொளி பொருந்திய வேற்படையைப் பறித்து எடுத்துச் செலுத்தி ஓட்டிய காலத்து.

10-11. பிடி - பெண் யானை; வேந்தனூர்தி. அவ்விடத்துப் புல்லிய நடையையுடைய பிடி நாணக் களிறுக ளெல்லாம் புறங்கொடுத்தோடின.

3. திருக்குறள்

தமிழ்ப் பெரு நீதி நூலை அருளிச் செய்த தெய்வப் புலவரைப் பற்றி நாம் ஒன்றும் அறியோம். இவரை நான் முகன் அமிச மாக நம் முன்னோர் கருதி வந்தனர். வள்ளுவர் என்ற பெயர் பிறந்த குலம்பற்றி இவர்க்கு வழங்குவது என்பர். அரசர்க்குக் கருமத் தலைவராய் உயர் பதவி வகித்தவர்க்கு வள்ளுவர் என்ற சிறப்புப் பெயர் முன் வழங்கியதைக் கருதும் போது, நமது தெய்வப் புலவர் அரசியலிலே உயர்பதவி வகித்தவர் ஆதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. மயிலாப் பூரிலே இவர் வாழ்ந்தார். மாதானு பங்கியை இவரது தேவியர் என்பர்.

திருக்குறள் உரைகளிலே பரிமேல்அழகர்உரை சிறந்தது. இவ்வுரையிலே அரசியல் அங்கவியல் ஒழிபியல் என்று மூன்றாகப் பொருட்பால் பிரிக்கப் பெற்றுள்ளது. திருவள்ளுவமாலையிலே போக்கியாரும், உரையாசிரியர் பரிப் பெருமாளும், ஒழிபியலைக் குடியியல் என்றே கொள்வர்.

திட்பமும் நுட்பமும் செறிந்த பரிமேலழகர் உரையும் திருக் குறள் போலவே மதிக்கத்தக்கது என்பது ஒரு சிவநேசர் கருத்து.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தஉரை—ஒள்ளிய சீர்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

ஒழிபியல்

1. குடிமை: உயர்குடிப் பிறந்தாரது இயல்பு.

1-3: உயர்குடிப் பிறந்தார நியல்பு.

1. இல், குடி, குலம் என்பன ஒரு பொருள். செம்மை - கருத்தும் சொல்லும் தம் முள் மாறுகாமை. ‘சொற்கோட்டம் இல்லது செப்பம்’ (- குறள் 119) இதற்கு நடுவு நிலைமை என்றும் பொருள் கூறுதல் உண்டு. நாண் - பழி பாவங்களின் மடங்குதல்.

2. இழுக்கார் - வழுவார்.

3. நான்கின் வகை - பாடபேதம்.

4–6: வறுமையிலும் தம் இயல்பின் வேறுபடார்.

4. குன்றுவ - ஒழுக்கம் குன்றுதற்கு ஏதுவாகிய தொழில்கள்.

5. பழங்குடி - சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருங்குடி. தலைப் பிரிதல் - நீங்குதல்.

உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார் - நாலடியார்.

6. குலம் பற்றி - குடிப்பண்பினேடு ஒத்து. சலம் - வஞ்சனை.

7-8: தம் இயல்பின் வேறுபட்டால் விளையும் இழுக்கு.

8. நாரின்மை - ஈரம் (அன்பு) இன்மை கொடாமை கடுஞ்சொல் முதலிய. நலம் - குல நலம் உடையனுய் வருகிறவன் - ஆகு பெயர். குலம் - குலப் பிறப்பு - ஆகு பெயர்.

9,10. குடிமைக்கு வேண்டுவன.

9. நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும்; அதுபோலக் குலத்தின் இயல்பை அதன் கண் பிறந்தாரது வார்த்தை காட்டும்.

10. நலம் - புகழ் புண்ணியங்கள். பணிவு - இருக்கை எழலும் எதிர் செலவும் முதலியன.

---

2. மானம்; தம் நிலையில் தாழாமை; தாழ்வு வந்துழி உயிர் வாழாமை.

1–3: தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமைச் சிறப்பு.

1. குன்ற வருப விடல் - குடிப்பிறப்புத் தாழவரும் செயல்களை ஒழிக. 'இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க' என்னும் வட நூல் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி, அவை செய்யற்க - பரிமேலழகர்.

2. சீரினும் - புகழுக்கான செயல்கள் செய்யும்போதும். சீர் அல்ல - குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகள். பேராண்மை - மானம், எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையால் மானம் பேராண்மை எனப் பட்டது.

3. 'செல்வக் காலை அஃதுயர்ச்சி செய்யத் தாம் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்வு செய்யத் தாம் உயர்தலும் வேண்டும்.'

4-6: தாழ்தற்கு ஏதுவாயின செய்தற் குற்றம்.

4. 'அந்நிலையை விடாது நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும்' உவமையால் பெறப்படும்.

5. சொற்பின் வருநிலையணி. மலைபோல உயர்ந்தோரும் தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு சிறு குன்றியளவேனும் செய்வாராயின் தாழ்வர்.

6. என் மற்று - மற்று என் - இனி அவனுக்கு அது செய்வது யாது?

7-10: மானத்தின் நிமித்தம் மரணம் எய்துவதன் மாண்பு.

7. 'புகழும் புத்தேள் நாடும் பயவாதேனும் பொருள் பெற்று உயிர்வாழ்வாம் என்பாரை நோக்கிக் கூறியது.'

8. பீடு - மானம். ஊன் - உடம்பு.

TAMIL NADU ARCHIVES EGMORE, MADRAS
111057

9. 'உயிரும் மானமும் உடன் நில்லாமைக் கண், பின்னும் போவதாய உயிரை நீத்து, எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை எய்துவர்.' 'மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்' - கம்பர்.

10. தமக்கோர் இழிவு வந்துழி, உயிர் வாழாது அதனை நீத்த மானமுடையாரது புகழ்வடிவினை உலகத்தார் எப்போதும் தொழுது துதிப்பர். ஒளி - புகழ் வடிவு - தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை.

---

3. பெருமை: நற்குணங்களால் பெரியாரது தன்மை.

1. பெருமையின் சிறப்பு.

ஒளி - தான் இருக்கும்போது மேம்பட்டுத் தோன்றுதல். உள்ள வெறுக்கை - (செயற்கரிய செய்வோம் என்று கருதும்) ஊக்க மிகுதி.

2-3: குடிமை செல்வங்களால் மாத்திரம் பெருமை உண்டாகாது.

2. 'வினை வயத்தான் பஞ்ச பூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று, அதன் பயன் அனுபவித்தல் எல்லார்க்கும் ஒத்தலின் பிறப்பு ஒக்கும் என்றும், பெருமை சிறுமைகளுக்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா என்றும் கூறினர்.'

3. 'மனையும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றான் மேலாயினும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமும் முதலியவற்றான் மேம்பாடு உடையர் அல்லாதார் யாவர் அவர் எஞ்ஞான்றும் சாலச் சிறியரே!' - காளிங்கர்.

4. பெருமை உண்டாம் விதம்.

கவர்படாத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு போல.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழ்இடு வானும் - நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிற்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் - நாலடியார்.

5. பெருமை உடையார் செய்தி.

ஆற்றின் ஆற்றுவார் - செய்யும் நெறியால் கடைபோகச் செய்தலில் வல்லராவர். செயற்கரிய செய்வார் பெரியர்.

6-7: பெருமையிலார் செய்தி.

6. பெரியாரை வழிபட்டு அவர் இயல்பினை யாம் கொள்வோம் என்னும் கருத்து.

7. சிறப்பு - குடிமை செல்வம் கல்விகளினாய மிகுதி.

8-10: பெரியார் சிறியார் செயல்.

8. ஆம், இரண்டிடத்தும் அசை,

9. பெருமிதம் - செருக்கு.

10. 'பெருமை உடையார் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறையா நிற்பர். சிறுமை யுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர்.'

---

4. சான்றாண்மை: நற்குணங்களால் நிறைந்து அவற்றை ஆளுந் தன்மை.

1-2: சால்பிற்கு இயைந்த குணங்கள்.

1. கடன் என்ப - இயல்பாயிருக்கும் என்பர் நூலோர். கடன் அறிந்து - கடவது இது என்று அறிந்து.

2. பிறநலம் - உறுப்புக்களான் ஆகிய நலம்.

3-7: சான்றாண்மையின் சிறப்பு.

3. சால்பு ஊன்றிய தூண் - சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்; ஏகதேச உருவகம்.

4. தவத்திற்குக் கொல்லா அறம் சிறந்தாற்போலச், சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாக் குணம் சிறந்தது. நலம், முன்னது அறம், பின்னது குணம்.

5. ஆற்றுவார் ஆற்றல் - ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றல். பணிதல் - துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல். மாற்றார் - பகைவர். மாற்றும் - பகைமை ஒழிக்கும்.

6. கட்டளை - உரைகல்(லாகிய செயல்). துலை - ஒப்பு

7. நாய் கவ்வின், பேர்த்துநாய் கவ்வினார் இல். - பழமொழி நானூறு. வினா எதிர்மறைப் பொருட்டு.

8-10: சான்றோர் சிறப்பு.

8. சால்புடையார் நல்கூர்ந்த வழியும் பெருமைபடுதல் உடையார்.

9. சான்றாண்மைக்கு ஆழி - சால்புடைமையாகிய கடலுக்குக் கரை; ஏகதேச உருவகம்.

10. சான்றவர்க்குச் சான்றாண்மை குன்றாமை இயல்பு; நிலத்துக்குப் பொறை தாங்கல் இயல்பு. 'ஊழி பெயரினும் சான்றோர் நிலை குலையார்; சான்றோர் நிலை குலையின் ஊழி பெயரும்' - பரிப்பெருமாள்.

எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை வாழிய நிலனே - புறம்.

---

5. பண்புடைமை: எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகல் - 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகல்'

1-2 : பண்புடையர் ஆதற்காரணம்.

1. எண் பதத்தால் - எளிய செவ்வியராதலால், - காட்சிக்கு எளியராய் இருத்தல். நற்குணங்களால்நிறைந்து காட்சிக்கு எளியரும் ஆயக்கால் பண்புடைமை தானே உளதாம்.

2. தனித்தவழி ஆகாது, இரண்டும் கூடிய வழியே ஆவது.

3-6 : பண்புடையாரது உயர்வு.

3. பண்பில்லாதார் மக்கள் அல்லர். வெறுதக்க - செறியத்தக்க.

4. நயன் - நீதி. நன்றி - அறம்.

5. கோதாட்டொழி - ஆத்திசூடி. இகழ்தல் விளையாட்டிலும் துன்பந்தருவது ;. ஆதலின், பிறர் பெருமை அறிவாரிடத்துப் பகையுள்ளும் பண்பாடே உளவாம்.

6. பட்டு - பட. உலகம் - உலகியல், ஆகுபெயர்.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவ தஞ்சி.
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் - உண்மை யானே—புறம்.

7-10 : பண்பிலார திழிபு.

7. அரம் - அரத்தின் கூர்மை, ஆகுபெயர்.

8. பண்பு ஆற்றார் ஆதல் - பண்புடையராய் ஒழுகாமை.

9. பகலும் இருட்பால் பட்டன்று - பகற் பொழுதிலும் இருளின்கண் கிடந்ததாம்.

10. தொழில் உவமம்.

---

6. நன்றியில் செல்வம்: சம்பாதித்தவனுக்கும் பிறருக்கும் பயன்படுதல் இல்லாத செல்வத்தின் இயல்பு.

1. தனக்குப் பயன் படாத செல்வம்.

வைத்தான் - வைத்து, முற்றெச்சம்.

2-4: பிறருக்குப் பயன்படாத செல்வம்.

2. ஈயாது இவறும் மருளான் - ஈயாது பற்றுள்ளம் செய்யும் மயக்கத்தால். மாணப்பிறப்பு - பேய்ப் பிறப்பு.

3. இவர் பிறப்பதினும் பிறவாமை நன்று.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு - குறள்.

4. எச்சம் - இறந்த பிறகும் நிற்பதாய புகழ்.

5-6 : தனக்கும் பிறருக்கும் பயன் படாத செல்வம்.

5. இல்லார்க்கு - (அவை இரண்டும் இல்லாத அரும்) பாவிக்கு.

6. ஏதம் பெருஞ் செல்வம் - செல்வத்துக்கு ஒரு நோய். தனக்கும் பிறருக்கும் பயன்படக்கூடிய செல்வத்தைப் பயன் படுத்தாமை அதற்கு நோய். ஈதல் இயல்பு இலர்தானது பெருஞ் செல்வம், அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்ருல் துன்பமே யாம் என்று இதற்கு உரை கூறுதலும் உண்டு.

ஈட்டலும் துன்பம் மற்(று) ஈட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் — காத்தல்.
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்பக்(கு)
உறைபதி மற்றைப் பொருள் — நாலடியார்.

7-10 : பயன்படாத செல்வத்தின் குற்றம்.

7. அற்ருர்க்கு - வறியோர்க்கு. கொடுப்பார் இலாமையால் கொழுநன் இன்றித் தமியளாய்ப் பேரழகி ஒருத்தி முதுமை எய்திய தன்மைத்து.

8. நடுவூர் - ஊர் நடுவே.

9. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் - கொன்றைவேய்ந்தான்.

10. சிறு துனி - சிறிதாகிய வறுமை. யாவர்க்கும் பயன் பட்டார் அதனல் வறுமைப்பட்டபோதும் அவ்வறுமை விரைவிலே நீங்கு தலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவர் என்பது உவமையால் பெறப்படும்.

---

7. நாணுடைமை : உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல்.

1. நாணத்தின் இலக்கணம்.

திருநுதல் நல்லவர் - அழகிய நெற்றியினையுடைய குலமகளிர்- புகழ்ச்சிக் குறிப்பு. ஆடவர் நாணத்திற்கும் குலமகளிர் நாணத்திற்கும் வேற்றுமை காட்டியவாறு.

2-4 : நாணத்தின் சிறப்பு.

2. உணவு உடை உறக்கம் அச்சம் முதலியு.

3. ஊன் - உடம்பு. உயிர் உடம்போடு கூடியல்லது பயன் எய்தாவாறு போலச் சால்பு நாணோடு கூடி அல்லது பயன் எய்தாது.

4. சான்ருேர்க்கு அழகு நாணுடைமை. ஒ இரண்டிடத்தும் எதிர்மறை.

5 நாணமுடையார் சிறப்பு

பிறருக்கு வரும் பழியையும் தமக்கு வந்ததாகவே கருதி நாணு கிறவரை.

6-7 : நாணமுடையார் செயல்.

6. நாணும் ஞாலமும் தம்முள் மாறுபடயபோது நாணினைக் கொள்வதல்லது ஞாலத்தினைக் கொள்ள விரும்பார் உயர்ந்தவர்.

7. உயிரினும் நாணம் சிறந்தது.

8-10 : நாணமிலார் இழிவு.

8. நாணம் இலாதானை அறஞ்சாராது.

9. கொள்கை-ஒழுக்கம். 'நல்லார், நலந்தீது, நாணற்று நிற்பின்; குலந்தீது கொள்கை அழிந்தக் கடை' - நான்மணிக்கடிகை.

10. நாண் (- வெட்கம்) இல்லாத மக்கள் இயக்கம். நாணுடைய (- கயிறுடைய) பாவை இயக்கம் போல்வது.

---

8. குடி செயல்வகை : தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம்.

1-2 : குடி செயற்குக் காரணம்.

1. கை தூவாமை - கையொழியாமை. பெருமை - முயற்சியின் பெருமை.

2. ஆள் வினை (- முயற்சி) வறுமை புகுதாமற் பொருட்டு. ஆன்ற - நிறைந்த அறிவு. குடி உயர்தற்கு ஏற்ற செயல்களையும் அவை முடிக்கும் திறத்தையும் பிழையாமல் ஆராய்தற் பொருட்டு. நீள்வினை யான் - இடையறுது கருமஞ் செய்தலால்.

3-4 : குடி செயலுக்குத் தெய்வம் துணையாம்.

3. தற்றுதல் - இறுக உடுத்தல்.

4. குடியை - குடிக்காம் வினையை ; ஆகுபெயர். தாழாது - தாமதியாது.

5-7 : குடி செய்வார் எய்தும் சிறப்பு.

5. குற்றம் - அறத்துக்கும் நீதிக்கும் மறுதலையான செயல்கள்.

இல்லாண்மை - குடியினை ஆளுந்தன்மை; குடியில் உள்ளாரை உயரச் செய்து தன் வழிப் படுத்தல்.

7. வன்கண்ணர் - சேனுபதி. குடியின்கண்பிறந்தார் பலரா யினும் அதன் பாரம் பொறுத்தல் அது வல்லார் மேலது.

8-9 : குடி செய்யும் இயல்பு.

8. 'தமது குடியினை உயரச் செய்வார் அச்செயலை நோக்காது, காலத்தைக் கருதி சோம்பியிருந்து மானத்தையும் கருதுவாரானல் குடி

கெடும். மானங் கருதல் - குடியில் உள்ளார் யாவரும் இன்பம் உறத் துன்பும் உறுவேன் நானே என்று உட்கோடல்.'

9. தன் குடியைத் துன்பம் உறாமல் காக்க முயல்வானது உடம்பு, துன்பத்திற்கே இருப்பு ஆவதோ இன்பத்திற்கு இல்லையோ? குறிப்பு மொழி.

10. குடி செய்வார் இல்லாத குடிக்கு உளதாம் குற்றம்.

குறிப்புருவகம் : துன்பமாகிய கோடரி தன் அடியை வெட்டிச் சாய்க்க ஒரு பற்றின்றி வீழும்; பற்றுக் கொடுத்துத் தாங்க வல்ல நல்ல ஆண் மகன் பிறவாத குடியாகிய மரம்.

தூங்கு சிறை வாவல் உறை தொன் மரங்கள் என்ன
ஓங்கு உலகு நைய அதன் உட் பிறந்த வீரர்
தாங்கல் கடன் — சிந்தாமணி.

---

9. உழவு : உழுதல் தொழில்.

1. உழவின் சிறப்பு.

சுழன்றும் - உழுதலால் வரும் மெய் வருத்தம் கருதிப் பிற தொழில்களைச் செய்து திரிந்தும்

2-6 : உழவர் சிறப்பு.

2. உலகம் தேர், உழவர் அச்சாணி : ஏகதேச உருவகம். பொறுத்து - பொறுத்தலால் - தாங்குதலால்.

3 தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது - கொன்றை வேய்ந்தான். குடை நிழல். பூமி, ஆகு பெயர்.

4. அலகு - கதிர். ஆகு பெயராய் நெல்லை உணர்த்தியது. நெல்லின் உடையராய தண்ணளி உடையோர். 'இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்' - சிலப்பதிகாரம்.

5. தமது கையால் உழுது உண்டலை இயல்பாக உடையார்.

6. கை மடங்கின் - கை உழவு செய்யாது மடங்குமானால். விழைவதூஉம் விட்டேம் - யாவரும் விரும்பும் உணவையும் யாம் துறந்தோம்.

7-9 : உழவு செய்யுமாறு.

7. தொடி - ஒரு பலம். கஃசு - கால் பலம்.

8. உழுதல், எருப் பெய்தல், களை கட்டல், நீர் கால் யாத்தல், காத்தல்.

9. பிறரை ஏவி இராது தானே செல்லல் வேண்டும்.

10. உழவு செய்யாதபோது உண்டாம் இழுக்கு.

அசைஇ - சோம்பி. நாம் வறியோம் என்று சோம்பியிருப்பாரைக் காணில்.

10. நல்குரவு : வறுமை.

1-5 : நல்குரவின் கொடுமை.

1. வறுமையைப் போல இன்னாதது வறுமையே.

2. ' அழுக்காறு என ஒரு பாவி ' - குறள் 168.

3. தொல் வரவு - பழைய குடி வரவு. தோல் - மெல்லென்ற நற்சொல் - இழும் என் மொழியால் விழுமியது நுவறல். நசை - ஆசை ; நல்குரவு ஆசையைப் பண்ணுதலின் நசை எனப்பட்டது.

4. இளி வருதற்கு ஏதுவாகிய சொல்.

5. குரை - இசை நிறை.

6-9 : நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம்.

6. சொல்(லானது) பொருள் (இன்மையை). சோர்வுபடும் - தலைப்படும் ; பயனில் சொல்லாய் முடியும்.

எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சேர்ப்பா டிலவாம் - நீதிநெறிவிளக்கம்.

7. ' இல்லானை, இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்றெடுத்த
தாய் வேண்டாள், செல்லா தவன் வாயிற் சொல்.'

8,9. நெருநல் மிகவருந்தித் தன் வயிறு நிறைத்தான் ஒருவன் கூற்று.

10. நல்குரவு உளதாயபோது செயற்பாலது.

துவர - முற்ற. மானம் அழியாமையின் செயற்பாலது முற்றத் துறத்தலே. அதாவது, தம் உடம்பையும் துறத்தல் - அகப்பற்றை விடுதல்.

---

11. இரவு : யாசித்தல் : மானம் தீரா இரவு இரவாமையோடு ஒப்பது.

1-2 : இளிவில்லா இரவு விலக்கப்படாது.

1. இரத்தக்கார் - இரத்தற்கு ஏற்புடையார்.

2. துன்பம் - ஈவார்கண் காலம் இடம் அறிந்துசெல்லல், அவர் குறிப்பறிதல், முதலியவைகளால் வருவன. இரந்தவர் - பாடபேதம்.

3-7 : இரத்தக்காரது இயல்பு.

3. ஏர் - அழகு. சொல்லுதலால் வரும் சிறுமை இல்லை.

5. சொல்லுதல் மாட்டாது முன்நிற்றல் மாத்திரத்தால் இரப்பார் உயிர் ஓம்பற் பொருட்டு இரவை மேற்கொள்வது, கரப்பிலார் சிலர் இருத்தலால்; இல்லையாயின் மானம் நீக்கமாட்டாமையால் இரப்பவர் உயிர் நீப்பர்.

6. கரப்பிடும்பை - கரத்தலாகிய நோய்; மறைத்தலும் துன்பமும் ஆம்.

8-9. உலகிற்கு இரப்பார் வேண்டும்.

8. இரப்பாரை - ஐ : அசை நிலை. 'ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்.'

9. தோற்றம் - புகழ். மேவுவார் - மேவார் : விகாரம்.

10. இரப்பார்க்கு இன்றியமையாதோர் இயல்பு.

பிச்சைபுக் குண்பான் பிளிறுமை முன்னினிதே - இனியவை 40. பொருளருமையை வறியவன் அறிவான் ஆதலின் வெகுளற்க என்றார்.

---

12. இரவச்சம்: மானங்கெட வரும் இரத்தலுக்கு அஞ்சுதல்.

1-2: இரவின் கொடுமை.

1. கண் அன்னார் - கண் போலச் சிறந்தார்.

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை. நாலடியார்.
தோழனுயினும் ஏழைமை பேசேல் - ஔவை.

2. உலகு இயற்றியான் - உலகைப் படைத்தவன். சிலர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தான் ஆயின், அத்தீவினையால் தானும் அத் துன்பம் உறல் வேண்டும்.

3. வறுமை தீர்தற்கு வழி இரவன்று.

வன்பாடு - முருட்டுத்தன்மை - ஆராயாது செய்து நிற்றல்.

4. இரத்தலுக்குச் சால்புடையார் இசையார்.

உரவோர் என்கை இரவா திருத்தல் - கொன்றை. 85.

5. தாள் தந்த கூழ், அமிழ்தத்தொடு ஒக்கும்

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச் சோறார்வர் கயவர் - கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். நாலடியார்.

6. அறனும் முயன்று செய்க; இரந்து செய்யற்க.

ஏற்பதிகழ்ச்சி - ஆத்திசூடி.

7. மானந்தீர வரும் இரவு கூடாது.

8-10. இரவின் குற்றம் - கரவின் குற்றம்.

8. அவயவ உருவகம்: இரவு தோணி, கரவு பார் என்று உருவகம் செய்தவர் வறுமையைக் கடல் என்று உருவகம் செய்யவில்லை.

9. இரவினும் கரவு கொடிது.

இரவினை, உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு ; நாலடியார்.

10. கரப்பவர் பிணம் போல்வர்.

13. கயமை : கீழோரது தன்மை.

1. கயவரது குற்றம் மிகுதி.

ஒப்பாரி—ஒப்பு. மக்கட் சாதிக்கும் கய்ச்சாதிக்கும் வடிவு ஒத்தலின் குணங்களான் அன்றி வேற்றுமை அறியப்படாது.

2. அவர் பழிக்கு அஞ்சார்.

கயவர் திருவுடையார் என்றது, குறிப்பால் இகழ்ந்ததாம். நன்று - உறுதி : இம்மை மறுமை வீடுகட்கு உரிய புகழ் அறம் ஞானம்.

3. அவர் வேண்டிய செய்வர்.

புகழ்தல் போன்று பழித்தல்.

4. அகமாகிய பட்டி —

தன்னின் சுருங்கிய பட்டியாய் ஒழுகுவார். பட்டி - மன அடக்கம் இல்லாதவர். செம்மாக்கும் - இறுமாக்கும்.

5. பூரியோர்க்கில்லை சீரிய ஒழுக்கம். கொன்றை வேய்ந்தான்.

கயவர் ஆசாரமுடையராதற்குக் காரணம் அச்சமே ; பொருளாசை காரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாதல் கூடும். ஆசாரம்-ஒழுக்கம்.

6. அவர் அடக்கமிலர்.

அறைபறை அனைய நீரார் அருமறைக் காவரோ தான் - கம்பன்.

7. அவர் மெலியவர்க்குக் கொடார்.

ஈர்ங்கை - கழுவினகை. 'எச்சிற்கையால் காக்கை ஓட்டார்' உலக வழக்குரை. 'பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையிலே போடுவார்க் கீவர் பொருள்',

8. அவர் ஒப்பார்க்குக் கொடுப்பர்.

தறித்தும் நெரித்தும் அடர்த்தும் சாறு கொள்ளும் கரும்புபோல, 'கொல்லச் சுரப்பதாங் கீழ்' - நாலடியார், 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் போடுமா? என்பது உலகவழக்குரை.

9. அவர் பிறர் செல்வம் பொறார்.

வடு இல்லையாகவும் அதனை உண்டாக்க வல்லன் ஆவான்.

10 அவர் அடிமையாய் நிற்பர்.

ஒரு தொழிற்கும் உரியர் அல்லர் என்பது குறிப்பெச்சம்,

---

4. சிலப்பதிகாரம்

சேர நாட்டை வஞ்சி மாநகரிலிருந்து ஆட்சி புரிந்த சேரலாதனுக்கு மைந்தரும் செங்குட்டுவனுக்குத் தம்பியும் ஆகிய இளங்கோ அடிகள் தாம் துறவு பூண நேர்ந்ததை வரந்தரு காதையிலே சொல்லுகிறார். அது நமக்குப் பாடமாயுள்ளது. கற்புக்கரசியாய்த் தன் நாடடைந்து விண்ணுலகு சேர்ந்த கண்ணகியைப் பத்தினித் தெய்வமாகக் கொண்டு கோயில் சமைத்து வழிபட்டவனும், அவ்வழிபாடு தமிழகத்தும் பிற நாடுகளிலும் பரவுதற்குக் காரணமாயிருந்தவனும் செங்குட்டுவன் அல்லவா?

சிவனருளால் செங்குட்டுவன் பிறந்தான்; ஆதலின் சிவபிரானை அன்றிப் பிற தெய்வத்தைத் தலையால் வணங்காத தன்மையன். ஆனால், இளங்கோ சமயப் பொது நிலை வாய்ந்தவர். அருகதேவன் கொற்றவை திருமால் செவ்வேள் என்னும் தெய்வங்களை அவ்வச் சமயவாதிகளின் உணர்ச்சியோடு கலந்து நின்று பாடுவதால் இளங்கோவின் சமரச நோக்குப் புலனாகிறது. இவரது மனத்தூய்மையையும் நடு நிலையையும் இவர், சேர வேந்தர் போலவே சோழ பாண்டிய மன்னர்களையும் சிறப்பித்துப் படுவது நன்கு புலப்படுத்தும்.

செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் சமைத்துக் கண்ணகிக்கு விழாக் கொண்டாடிய போது இலங்கை வேந்தன் கயவாகு வந்திருந்த செய்தி அறியப்படுவதால், அவன் காலமாகிய கி. பி. 2-ம் நூற்றாண்டின் முற்பகுதியே இளங்கோவின் காலம் ஆகும்.

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தோன்றியிராவிட்டால், சிலப்பதிகாரத்துக்குத் தற்போது ஏற்பட்டுள்ள மதிப்புத் தோன்றியிராது என்பது திண்ணம். உரை எழுதத் தூண்டிய உபகாரியை, அவர்,—'பொப்பண்ண காங்கெயர் கோன் அளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொல்வித்ததே' என்று போற்றுகிறார்.

1. வாழ்த்துக் காதை

1. கடுவரல்-விரைந்து வருதல். தொடிவளை-வளைந்த வளையல். இமயத்துப் பிறந்து புனலாடிப்போந்த தோளி என்றது கண்ணகியின் தெய்வ வடிவத்தை. கண்டீர் - முன்னிலையசை,

2. மாதவியை வெகுளாதவளாய். கடம் பட்டாள் - வெகுளும் கடன் இல்லாதவளாய். தாயர் - செவிலித்தாய் - ஒருமை.

3. தற்பயந்தாள் - நற்ருய். இல்லை; சொல் இல்லை என்றது கண்ணகி ஒன்றும் கூருமற் சென்றதைக் குறித்தது. புறங்காத்தல் - பாதுகாத்து வளர்த்தல். செவிலித் தாயின் மகளே தோழியாதல் முறைமை.

4. கனைக் கேட்ட நாள் - கனத்திறம் உரைத்த காந்தையிலே கண்ணகி தான் கண்ட கனவினைத் தேவந்திக்குக் கூறிய நாளிலே. முலைப் பூசல்-மதுரையை எரித்தமை. அவ்வை - கண்ணகியின் தாய். அம்மாமி - கோவலன் தாய்.

5. குறுமகன் - பொற் கொல்லன். காவலன் - பாண்டியன். அன்னை என்றது கண்ணகியை.

6. ஏச்சு:-கோவலன் சாவுக்கும் கண்ணகியின் துயருக்கும் இவளே (- மாதவியே) காரணம் என்ற பழிப்பு. மாதவர் என்றது அறவண அடிகளை.

7. காட்சி (- அறிவினையுடைய) கவுந்தியடிகள் (அளித்த) மயல் - பித்து. அவ்வை என்றது மாதிரியை. மணம் பட்டிலா - மணம் செய்யப் பெருத. மாமி என்றது மாதிரியை; ஐயையைக் கண்ணகிக்கு நாத்தூண் நங்கை (- கணவனெடு பிறந்தாள்) என்ற தால் மாதிரி மாமி எனப்பட்டாள்.

8. அடுக்கு வியப் புணர்த்தியது. மின்னுக்கொடி - கண்ணகி.

9. தேவர் கோன் - இந்திரன். வென் வேலான் - முருகன். வம் - வம்மின்.

10. எங்கோ முறை நா இயம்ப-எமது மன்னவனுகிய சேரனது முறைமை (யினையுடைய) நாவானது கூற. 'செங்கோல் வளைய உயிர் வாழாமை தென்புலங் காவல் மன்னவற்கு அளித்து' — சில. 28.

11. சேரனுகிய எமது அரசனுடைய புதல்வி என்று கூறினேம் நாம்; அவள் தானும் பாண்டியன் பெற்ற மகள் என்ருள்.

13. நிலவரசர் - கனகன், விசயன். 14. கூந்தல்-கூந்தலையுடை யாய்! அம்மானை - மகளிர் விளையாட்டு. வினுவும் விடையுமாக அம்மானையை முன்னிலைப் படுத்திப் பாடுதல் மரபு.

15. பாடேலோர் - பாடு - பாடுவோமாக - வியங்கோள்; ஏல், ஓர் - அசைகள்.

17. கடவரை - மதமலை - யானை. கண் இமைக்கப் பெருதன [வாய்.

18. தகை - இயல்பு.

கந்துகவரி: கந்துகம் - பந்து.

19. பூங்கொடி - பூங்கொடிபோல்வாய் - விளி. கோதை-மாலை. வில் - ஒளி. தேவர் ஆர மார்பன் - இந்திரன், வஞ்சத்தால் இட்ட ஆரம்; 'தேவர் கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே'-சில. 17.

20. கொடி இழிந்தென உலாய். 21. இல்லை எனச் சென்று பந்தடித்தும் என்க.

22. ஐய - மெல்ல. உடங்கு - உடன். ஒற்றை - ஏகதாளம் ஊக்க - தள்ள. உடன் நின்றாரில் ஒருவர் கையை நிமிர்த்து ஒற்றைத் தாளத்துடன் தள்ள. குடங்கை - அகங்கை. ஆடுவோம் என்பது ஆடாம் என்று மருவியது.

23. ஐவர் - பாண்டவர். ஈரைம்பதின்மர் - கௌரவர்.

25. வள்ளைப் பாட்டு - உலக்கைப் பாட்டு. செம்பியன் - சோழன் பாழி - வலிமை, பெருமை. 27. சந்துரல் - சந்தன மரத்தாலாகிய உரல்

28. மடந்தை - பத்தினிக் கடவுள்.

2. வரந் தரு காதை

1. பெருந்தகை - செங்குட்டுவன்.

6. இன்றி என்பது இன்று எனத் திரிந்தது.

6-37. தேவந்திகை கூற்று.

10. ஓதி - கூந்தல். 11. கூந்தலை ஐந்து வகையாக முடிக்குங்கால் அழகு வேறுபட்டுத் தோன்றல்.

13. வஞ்சம் உணர்ந்தன. எனினும், அதனைத் தான் அறியாள்.

18. கோலம் - பஞ்சியூட்டல். 20. தலைக்கோலுடைய நட்டுவன் பயிற்றுவித்தல் இன்மையால் இவள் தலைக்கோல் பெறும் தன்மை இல்லை.

25. நற்றாய் - சித்திராபதி. 25. உருவிலாளன் - மன்மதன்.

23. புத்தசமயத்திலே துறவு பூணும் மகளிர் கூந்தல் களைதல் மரபு போலும்.

28. போதித் தானம் - புண்ணிய தானம். அறம் - துறவறம்.

30. மாணிக்கத்தைக் கடலிலே போட்டார் போன்று.

32. மாதவர் - அறவண அடிகள்.

36. திருமகளும் விரும்பும் அழகு.

தனது துறவின் செய்தியை மணிமேகலை எமக்கு அறிவித்தாள் என்று அறவண அடிகள் கூறினர் எனவும், அவள் பருவம் அன்றியும் கோலம் நீங்கினள் ஆதலின் நான் அரற்றினேன் எனவும் தேவந்திகை செங்குட்டுவனுக்குக் கூறினாள்.

38. குரல் - பூங்கொத்து.

38-45. தேவந்திகை தெய்வமுறல்.

43. பலரும் அறிய ஒண்ணாத தெளிந்த உணர்வுடையவள்; [மயக்கமுடையவள்,

46-70. தேவந்திகை கூற்று.

46. கோமான்-செங்குட்டுவன். 47. கடவுள் மங்கலம் - கண்ணகி பிரதிட்டை.

49. ஆயிழை, இங்கே மனைவி. 51. ஆடகமாடம்-திருவனந்தபுரம். சேடக்குடும்பி - தொண்டு செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தோன்.

53. மங்கலாதேவி கோயில்.

55. முருகக் கடவுளின் யானை போலும் நெடிய கல்லின் பிடர் போலும் இடத்தில்.

57-58. வெண் சிறுகடுகு போன்ற கற்களையும் முருக்கம்பூப் போன்ற கற்களையும். மாவைக் கரைத்தாற் போலச் சொரிகின்ற நீர்.

61-62. கண்ணகி கோயில் வாசல்.

63. குறிக்கோள் தகையது - குறித்துக் கொள்ளும் இயல்பினை யுடையது.

65. சந்திர சூரியர் உள்ள அளவும் அந்நீரின் தெய்வத் தன்மை ஒழியாது.

78. பாசாண்டன் - சாத்தனாராகிய ஐயன். பாடு கிடத்தல் - வரங்கிடத்தல்.

81. செந்திறம் - அருள். 82. பண்டைத் தாய் - மாலதியின் மாற்றாள்.

83. காப்பியக்குடி - சீர்காழி அருகே ஓரூர்.

84. தீ வலம் செய்து - மணந்து. 86. மூவா இள நலம் - தெய்வ வடிவு.

87-91. நீங்கிய சாத்தன் மறையோனாகத் தோன்றித் தந்து போயினன். 93. மறையோள் - தேவந்தி. 94. அறிந்தோன்-சாத்தன்.

97. உற்றதை - உற்றது - வினைத்திரி சொல்.

98. ஒழுக்கினை. 98-103. கண்ணகி தாயின் கூற்று.

104-107. கோவலன் தாய் கூற்று. 108-111. மாதிரி கூற்று.

113. போர் வெய்யோன் - செங்குட்டுவன்.

122. பெற்றவன் - கோவலன். 123. காதலி - கண்ணகி.

126. அஞ்செஞ் சாயல் - கண்ணகி. 130. நல்லாள் - அரட்டன் மனைவி.

131. இரட்டையராய்த் தோன்றினர், கோவலன் கண்ணகி - இருவர் தாயரும்.

132. ஆயர் முதுமகள் - மாதிரி. ஆயிழை - கண்ணகி.

136. நல்திறம் - நல்ல அறத்தின் வகைகளை.
பொற்படி-பொன்னுலகம். 137. அன்பு அற்பு என்றாயிற்று.

140. வாழ்க்கை - வழக்கு.

149. கலி-ஒலி. 151. படிப்புறம்-அர்ச்சனாபோகத்தின் பொருட்டு. இறையிலியாக நிலம் விடல் - நிபந்தம்.

158. சிறைநீங்கிய வேந்தர். 160. கயவாகு-இலங்கை வேந்தன்; கி. பி. 2-ம் நூற்றுண்டு. 161. இமயவரம்பன் - செங்குட்டுவன்.

162. நன்னுள்-பிறந்த நாள். நாள் வேள்வி-ஒரே நாள் செய்யப் படும் வேள்வி.

167. மெய்ந்நெறி - முத்திநெறி.

170. பத்தினிக் கோட்டத்தினின்றும் வேந்தன் வேள்விச் சாலைக்குப் போன பிறகு.

175. பொறி - இலக்கணம்; ஊழ்.

179. குணவாயிலிலே முனிவர்கள் எதிரே.

183. இமையோர் இளங்கொடி - தெய்வ மகள்.

185-202. நல்லீர் என்று உலகோரை விளித்து, செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவுமாகக் காப்பியத்தில் அமைந்த பாவிகங்களைத் தொகுத்து அறிவுறுத்தி 'வாழ்வீர்! உறுதுணை தேடுமின்' என்று முடிக்கிறுர்.

5. சீவக சிந்தாமணி.

'சோழ குலமாகிய கடலிலே பிறந்த வலம்புர்' என்று இவரை உரையாசிரியர் அறிமுகம் செய்விக்கிருர். இவர் ஒரு சமண முனிவர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் சங்கச் சான்ருேரது இலக்கியங்களையும் சமண சமய் சாத்திரங்களையும் ஆராய்ந்து கற்ற இவர், புலவர்களால் போற்றப் படுவதிலே வியப்பில்லை. இவர் குருபக்தியுள்ளவர். எதிரே வந்த நரியை நோக்கி, அதனைப் பொருளாகக் கொண்டு சிறு நூல் ஒன்று செய்க என்று தமது குரவர் கூறிய போது, இதோபதேசத்திலே வரும் ஒரு கதையை அடிப்படையாக வைத்து, இளமையும் செல்வமும் யாக்கையும் நில்லா எனவும், கொலையும் களவும் கோபமும் பொய்யும் புலையும் தவிர்க எனவும், தானமும் தருமமும் செய்க எனவும் நன்னெறிகளை நவின்று, தேவர் நரிவிருத்தம் செய்தார். இச்சிறு நூலால் தேவரது மனத்தூய்மையையும் துணிவையும் தெரிந்த பின்னரே மண நூலாகிய சிந்தாமணியைப் பாடுதற்கு அவரை ஆசிரியர் அனுமதித்தார் என்ப.

சிந்தாமணியைத் தொடங்கு முன் அருக சரணம் பாடியருளுமாறு தேவர் தமது ஆசிரியரை வேண்டினர். ஆசிரியர் அதைப் பாடினர்; தேவர் சித்த சரணம் பாடினர். தாம் பாடிய அருக சரணத்தைவிடச் சித்த சரணம் சிறந்திருந்ததால், மீரபன்றேனும் சித்தசரணத்தை முன் வைத்துத் தமது பாடலாகிய அருக சரணத்தைப் பின் வைக்குமாறு ஆசிரியர் சொன்னராம்.

1. முசு - ஆண் குரங்கு. கரிய மையை மெழுகிவைத்தாற் போலும் முகம். இரிய - ஓடுதலால். துனிவு - அச்சம். நோக்கி - அருளொடு பார்த்து. தோன்றல் - சீவகன். பழுவம் - காடு.

2. மனத்தின் - மனத்தைப்போல. திருவில் மாந்தர் - வறியவர். எல்லை - பகற்காலத்தில். எல்லே, ஐ, சாரியை. மயங்கி - வழியிடம் மறைந்து. கீழ்மக்கள் கொண்ட நட்பைப் போலப், போகப் போகக் குறைகின்ற வழி. சிலம்பு - மலை.

3. சுனைக்குக் கண் உவமை. விழியா - கரு விழிகளாக. வனைய லாகா - எழுத முடியாத. மைந்தன் - சீவகன். இனைவ - வருந்தி யழுவன. ஆடி - நீராடி. நனை - தேன். போது வேய்ந்து : மலரால் அருகனுடைய பாதத்தை மறைத்து. நாதன் - அருகன்.

4. இருவினை - நல்வினை தீவினை என்ற இரண்டும். பயம் - பயன். என்றி - என்று கூறினாய். எய்தான் - ஒரு பிறப்பிலே வினையைச் செய்து அப் பிறப்பிலே பயனை யடையாதவன். பயத்தை - பயனை. பிறனே - மறு பிறப்பில் பிறனாய்ப் பிறந்தவனே. கொய் தாமம் - கத்தரித்துச் செய்த மாலை. தாழ்ந்து - தங்கி. பிண்டிக் கோமான் - அருகன்.

5. உயிர் தனதியல்பால் உண்டு ; உண்டாய அந்த உயிர்தானே பிறிதொன்றின் இயல்பான் இல்லை. ஒரு பொருளிலே 'உண்டும் இல்லையும்' கூறிய முரண் ஆராயத் தக்கது.

6. சித்திரகூடம் - பள்ளியின் பெயர். முனது என - முன்னே உள்ளதென்று சுதஞ்சணன் என்ற தேவன் கூற. தாபதர் - முனிவர்.

7. புல் - புல்லரிசி. அல்லி - அல்லிக்காயிலுள்ள அரிசி. போகுயர் - மிக உயர்ந்த. கழை நெல் - மூங்கிலரிசி. கேழலும் தோரையும் நெல்லின் வகைகள். நல்லவே - மாமிசமல்லாத நல்லனவற்றை. பள்ளி - சித்திர கூடத்தை.

8. கொள்கை-தாபதப்பாக்கம் ; நீர் மூழ்கல், நிலத்திருத்தல் முதலிய. அழல் ஐந்து - பஞ்சாக்கினி. விரிய - விரிவாக. தீத் தொழில் - காமவேட்கை. மேயினர் - பொருந்தினவர்கள்.

9. வள்ளி - வள்ளிக்கிழங்கு. வரை வாழை - மலை வாழை. மாரியன் - சீவகன் ; பலர்க்கும் பயன்படுதலால். ஆர்க - உண்பாயாக. உள்ள மாட்சி - நெஞ்சழகு. ஓம்பினர் - உபசரித்தார்கள்.

10. பாங்கின் - நல்ல இடமாகிய சித்திர கூடத்தில். பான்மதி - பால் போன்ற சந்திரன். இவன் - சீவகன். அளக்குவம் - அளந்து அறிவோம். ஓங்குதல் - உயர்தல்.

11. சையம் பூண்டு - கல்லைக் கட்டிக்கொண்டு. உய்யுமேல் - பிழைப்பானானால். தொடர்ப்பாடு - காம நுகர்ச்சி.

12. கூறை - சீவரம். ஓடு - கபாலம். உடுத்தல் - ஏகாங்கியாதல்.

13. ஏமம் - பாதுகாப்பு. அல்நெறி - இஃதல்லாத வழிகள். துணிகுவம் - தெளிந்துள்ளோம். காமன் தாதை - திருமால். காளை - சீவகன்.

15. வரகதி - மேலான நிலையை. கயம் - குளம். வெளிற்றுரை - பயனில்லாத சொற்களை.

16. நோய் - காம நோய். ஊழ்த்து - முதிர்ச்சியையடைந்து. வேய் - மூங்கில். துறக்கம் - சுவர்க்கம். பருகுவ புரிமின் - நுகர்தலை விரும்புங்கள்.

17. நன் ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம், என்ற இரத்தினத் திரயங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. இருவினை கழிதற்குப் போதும் கூறப்பட்டது.

18. பாகத்தார் - நல்வினை வந்தடையும் பருவத்தார். கண் விடுக்கப்பட்டோம் - அறிவிக்கப்பட்டோம். வென்றவன் - அருகனுடைய. வட்டம் பருதி - மேருவை வட்டமாய்ச் சுற்றி வருகிற சூரியன் மறைந்தான். செம்மல் - சீவகன். அசைவு - இளைப்பு.

19. ஆண்டகை - ஆடவரிற் சிறந்தவன். கண்ணார் - மகளிர். மருட்ட - மயக்க. இப்பாடலிற் கூறப்பட்டவன் சுபத்திரன் என்னும் வணிகன்.

20. வடிப்ப-பயிற்றுதலாலே. சோர்புயல் தொலைத்த வண்கை - சொரிகின்ற மேகத்தைத் தன் கொடைத் தொழிலால் கெடச்செய்த வள்ளன்மையை யுடைய கை. சுபத்திரன் மனைவி நிப்புதி என்பாள்; இது நிஸ்ப்ருதி என்பதன் விகாரம். அவள் பெண்ணின் பெயர் கேமசரி. பேர் நலம் பொறித்த - பெயரையும் அழகையும் எழுதிய.

21. மாசிலாள் - கேமசரி. மதிவலான் - சோதிடன். விதி - சோதிட நூல். கதுமென - விரைய. துணைவனும் - கணவனுவான்.

22. தாழ்தரு - தங்கிய. தாமம் - வரிசை; ஒளியுமாம். வீழ்தரு - விரும்புகின்ற. ஊழ்படு காதலானை - தொன்று தொட்டு வருகின்ற காதலை யுடைய கணவனை.

23. திருமகன் திறத்து - திருமகன் தோன்றுதற் பொருட்டு. ஏயின - பொருந்தின. ஆறிரண்டு - பன்னிரண்டு.

24. மாவினை அடுகின்ற நோக்கு, மருட்டுகின்ற நோக்கு என்க. மா - மான். மருட்டும் - மயங்கச் செய்கிற. தனித்து - தனியிருந்து. ஏ அடு பிணை - அம்பினால் எய்யப்பட்ட பெண் மான். இறை வளை - கையில் வளைந்த வளை.

25. ஊதுமே, ஏகாரம் வினா. ஒன்றே, ஏகாரம் தேற்றம். போது - பூ. பொறி-புள்ளி. சேர்ந்து - பூவைச் சேர்ந்து (அதிலுள்ள தாதுக்களையும் தேனையும்.) கண்ணுறும் - எதிர்ப்படுவான்.

26. பொன்னிலத் தெழுந்த என்றமையால் காமவல்லிக்கொடி என்பது பெறப்பட்டது. பேதை-கேமசரி. ஊர் - கேமமாபுரம். என்ப ஏ - அசைகள்.

27. சுடர் - சூரியன். ஒன்றி - நிலத்திலே வந்து பொருந்தி. உத்தரம் - வடதிசையில். மார்பினன் - சீவகன். நாதன் - அருகன்.

28. முடி குடை கவித்தனையது என மாற்றுக. புறவடிகள் ஆமையின் வடிவை ஒத்திருந்தன. புடை திரள் விலா-பக்கம் திரண்ட விலா. விலாவின் வளைவுக்கு வில் உவமை. கடி - வாசனை. கண்களுக்குத் தாமரை உவமை. வண்ணம் - தன்மை.

29. இலங்கு - விளங்குகின்ற. வார்ந்து - நீண்டு. ஆர்ந்த-அழகு பொருந்திய. திருமகள் கணவன் - திருமால். சொல் அளைஇ-கலந்து பேசி.

30. இவர் - சீவகனும் சுபத்திரனும். இல்தலை-வீட்டினிடத்தே. கடவுள் - அருகனை.

31. ஓதம் - கடல். ஓதவண்ணன் - நேமிஸ்வாமிகள். விரை - தேன். தேவர் பெருமான் - அருகன்.

32. முந்நீர்-கடல். அரம்பையன்னாள்-விப்புதி. மணிவண்ணன்-அருகன்.

33. நகர் - மனை. உலம் கொள் உறு வலி-உருண்டைக் கல்லின் தன்மையைக்கொண்ட தோளையுடைய மிக்க வலிமையுடைய சீவகன்.

34. விளைத்தாள் - விளைவித்துக் கொண்டாள். உருக்குற்றாள் - காமத்தியால் மனமுருகினாள்.

36. நாணிய - நாணுவதற்குக் காரணமான. கொல் - கொலைத் தொழில்.குழைந்தாள்-வருந்தினாள். சொல் வளர்த்தார் - அச்சொல்லை எங்கும் பிரப்பினார்கள். மல் - மல்லுத் தொழிலிலே.

37. காதன்மை - ஆசை. துணி பொருள் - வேட்கையாகிற துணிந்த பொருளை. நோக்கம் அமுதத்தையும் உலகையும் விலையாகக் கொள்ளும் என்க.

38. திரு - இலக்குமி. ஒருவன் - சிவபெருமான். அழகையும், வேலையும், வில்லையும், அறிவையும், பிறையையும் வாங்குதலிற் பகை யென்றான். பூங்கொடி யொருத்தி திருவிற்கும், முருகற்கும், அநங் கனுக்கும், இறைவற்கும் வடிவே பகையாயிருந்தாள்; எனக்கு உயிர்க்கே பகையாயிருந்தாள் என்றுமாம்.

39. நாய்கன் - சுபத்திரன். நிலத்தவர் - அரசன் சுற்றத்தாரை.

40. கடவுள் நாள் - நல்ல நாள்.

41. நனை - தேன். கா - சோலை. வாவி-தடாகம். ஆடி - நீராடி. குற்று - பறித்து. கண்ணி- மாலை. வினைநலம் - நல்வினையின் பயனை.

42. நாளால் - நாளில்; உருபு மயக்கம். கொள்வனைய - கொண் டாற் போலும். அழிந்து வீழ் அருவி - பெருகி வீழ்கின்ற அருவி நீரையுடைய. அழிதல் - பெருகுதல்.

43. மாதர் - கேமசரி. கிள்ளை - கிளி. குரிசில் - சீவகன். கவர் கிளி - விருப்பத்தையுடைய கிளி.

44. வண்டைக் கண்டு கங்குல் தான் நீங்கலுற்றுச் சொன்னான் என மாறியியைக்க. கங்குல் - இரவில். நீங்கலுற்று-பிரியக்கருதி.

45. மணி வண்டு - அண்மை விளி. இணை வண்டு - பேடை வண்டு. இரங்கலின்றாய்-நின் பிரிவிற்கு வருந்துதலில்லாமல்.துஞ்சின் - இறந்தால். பணி யென்றது, மகளிரிருந்து இல்லறத்தை நிகழ்த்து தற்கு வேண்டுவன தேடி வருதல் ஆடவர்க்குப் பணியாதலை. இப் பாடல் சீவகன் கூற்று.

46. கதிரவன் குழவியாய், குமரனாய், கிழவனாகும் தன்மை இங்குக் கூறப்பெற்றது. விழைவுதீர் கிழவன்-ஆசை நீங்கிய கிழவன். கதிர் உலந்து வீழ - கிரணங்கள் கெட்டு அத்தமலையில் வீழ்தலால். உழல நக்க - உழலும்படி அலர்ந்த. குழல் - புல்லாங்குழல்.

48. அல்லியுட் பாவை-தாமரை மலரிலுள்ள திருமகள். அல்லி-அகவிதழ் தாமரைக் காயிற்று. ஏற்றி - கதவினை நிலையோடு தள்ளி. மின்னுவிட்டு - ஒளிவிட்டு. நீந்தி - கடந்து.

49. கரந்துழி காண்டல் செல்லாள்-மறைந்த இடத்தைக் காண முடியாதவளாய். இருள்அறு காறும்-இருட்டில்லாத இடம் வரையில்.

50. யாண்டையாய்-எங்குள்ளாய். உயிர்-எனது உயிர்,வலிக்கும்-துணிகின்றது. நிறையிலேன்-மனமழிந்தேன்.

51. கனி கொள் காமம் - அன்பு கனிதல் கொண்ட வேட்கை. கூறுவாய் - முன்பு கூறுகின்ற நீ. பசப்பூர-பசப்படையும்படி.

53. நுன - உன்னுடைய.

54. புனம் - தினைப்புனம். வழை - சுரபுன்னை. திரை-கடல், ஆகு பெயர். து(ன்)னப்பெறுகோ - அடையப் பெறுவனோ?

55. நடை மாண் - நடையினால் மாட்சிமையுற்ற. உடன் ஆடும் என்னுடன் விளையாடும். தொடை - நரம்பு. யாழ் போலும் மழலை மொழியை யுடையாள், மயில் முதலியனவற்றை விளித்து'என்னுடன் விளையாடும் என் ஐயனை' என்ற அளவிலே உருகி, அவற்றிற்குக் கூறுகின்ற காரியத்தை (அவனைத் தேடுமின் என்றதை) மறந்தா ளென்க. ஐயனை என்ற இரண்டாம் உருபிற்குத் 'தேடுமின்' என்ற வினை வருவிக்க. (நச்)

56 கடம் - காடு. துற்ற - உண்ணும்படி. புல்லும் - தழுவு கின்ற. உய்தலுண்டோ - பிழைத்திருக்கும் தன்மையுண்டோ? அடியிலே குஞ்சி சூட்டுதல் ஊடல் காலத்து.

57. எரி நுதி - நெருப்பின் நுனியை. மா - மாமரம். மாழ்கி - மயங்கி. அரிகுரல் கொண்ட பூசல் - அரித்து எழும் குரலால் கொண்ட அழுகை.

58. விழுத்திணை - சிறந்த குடியில். விண்ணோன், வச்சிர நுதியினிட்ட எழுத்தனன் - அயன் வச்சிரத்தாலிட்ட எழுத்துப் போலே தப்பாதவன். இப்பாடல் நிப்புதியின் கூற்று.

59. பிறங்கினகள் யாவும்-மிக்க அழகுகளெல்லாம். கள்-அசை. பிரிந்தவர் புணர்வர் என மாறுக. இறங்கின - தாழ்ந்தனவாய்.

60. இன்பம் நீர்ப்புள்ளி அற்று;துன்பம் கடல் அனையது ஒன்று. இருதலைப் பயன் - இம்மைப் பயன், மறுமைப்பயன்.

61. இளமை, நீர் மொக்குள். யாழ் இளியினும் - வீணையினது இளி யென்னும் நரம்பினொலியைக் காட்டிலும். ஆக்கம் - செயல். அழுங்குவது - வருந்துவது.

62. விதிர் விதிர்த்து - நடுநடுங்கி. மைந்தன் - கணவன். காளை-சீவகன்.

63. விடியற் காலத்தெழுந்த நிலவின் தோற்றம் இங்கே வருணிக்கப் பெற்றது.

64. ஏந்தியாங்கு - எடுத்ததைப்போல. மாறிலா - நிகரில்லாத. பருதி வட்டம் - சூரியனது வட்டம். முளைத்த ஆங்கண் - தோன்றிய அப்பொழுது.

65. எனைவர் - எத்துணைவர்? : ஒவ்வாதார்-நல்லொழுக்கமில்லாதவர். ஒப்பார் - நல்லொழுக்க முடையவர்.

66. நம்பி என்றது சீவகனை. பெருஞ் சான்றோன்-அறிவில்லாதவன்.

67. அறிவர் சிறப்பு - இறைவர் பூசனை. உற்றான் - பயன் தருவான். தன்னை - அம்மகனை. அல்லாதார் பிறர் - அவ்வுரவோனைப் பெறாதார் மகப்பெற்றாரல்லர். மக்கள் பிறரே - அவர் பெற்ற மக்களும் அவர் மக்கள் அல்லர்.

68. நாகம் தோலுரிக்கும்போது நஞ்சும் காலும். பனிப்ப - நடுங்கும்படி. உடனுகை - தம் வயத்தனுகை. திடனுகை-மனத்தில் நிச்சயமுற. தெண்மட்டு - தெளிந்த கள். மிக்கார் - அறிவால் மிக்கவர்,

69. ஓவாது - ஒழியாமல். உவவு - அமாவாசை, பௌர்ணமி; சதுர்த்தசி என்பாரும் உண்டு. தாதை - அருகன். புனைதல் - அலங்கரித்தல். ஈண்டிய - தருமம் சேர்ந்த.

70. நால்வர் - தானம், சீலம், தவம், அறிவர் சிறப்பு என்ற நான்கும். மகன் - நல்வினை.

71. மட்டு - தேன். மால் - அருகன். முட்டாத-குறைவில்லாத. இன்பப்புதா - இன்பக் கதிக்குச் செல்லும் கதவு. எட்டானும் பத்தானும் இல்லாதார் - பத்தெட்டுக்கூட இல்லாதார்க்கு. அவனை - அருகனை.

72. வேற்றுவர் - அயலார். நுமர்-உறவினர். ஆற்றுணா - கட்டுச்சோறு. தமியே - தனியே.

73. இழுது-நெய். தடி-தசை. ஏட்டைப்பட்டு-இளைத்துப்போய். கோட்டக்கு - உடம்பிற்கு. புறம் செய்தல் -காத்தல். புள் - கழுகு.

74. பொதித்துணை-பொதித்திரளின் அளவை. கயற்கண்ணாள் - மனைவி. அதனைக் காட்டாள்-அப்பொதித்திரளைக் காட்டாதவளாய். அதற்குப் பருவமன்று - அவ்விளாம்பழம் உண்ணனும் உடல் நிலை பருவமன்று. கட்டுரையால் - அம்மனைவியது பேச்சாலே. பொய்யே-பொருள் - பொய்ப்பொருள்.

75. ஆர்ந்த - பொருந்திய. புகன்று நீட்டி-விரும்பிக் கொடுத்து. கடம் - காட்டை. நீந்தல்-கடத்தல்.

6. பெரிய புராணம்

இவர் தொண்டை மண்டலம் புலியூர்க் கோட்டம் குன்றை வள நாட்டுக் குன்றத் தூரிலே பிறந்தார். வேளாண் குலத்திலே சேக்கிழார் மரபிலே பிறந்தார். பிறந்த மரபை விளக்கியதால் சேக்கிழார் எனப்பட்டார். அருண்மொழித் தேவர் என்பது இவரது இயற்பெயர். அநபாயன் என்ற இரண்டாங் குலோத் துங்கனுக்கு மந்திரியாய் இருந்து அவனுடைய வேண்டுகோளின் படித் திருத்தொண்டர் புராணம் பாடினர். பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி இவருடைய காலம், சுந்தர மூர்த்தி நாயனர் அருளிய திருத் தொண்டத் தொகையையும் நம்பி யாண்டார் நம்பிகள் அருளிய திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு, தேவராம் முதலியதிருமுறைகளை ஆராய்ந்து சேக்கிழார் இதனை இயற்றினர். பழைய சைவநூல்களைத் திருமுறை எனல் மரபு. இது பன்னிரண்டாம் திருமுறை.

1. மேவலர் - பகைவர். புரங்கள் - திரிபுரம். விடையவர்-இருஷபவாகனத்தையுடைய சிவபெருமான். பூ அலர் வாவி-பூக்கள் விரிகின்ற பொய்கைகளையுடைய.

கண்ணப்பர் திருநாடு, பொத்தப்பிநாடு என்பர் என்க.

2. இவர், கண்ணப்பர். நித்திலம்-முத்து. சாரல் - மலைப்பக்கம். பாங்கர் - இடம். மத்தம் - மதமுடைய. கோடு - தந்தம். கோலி - வளைத்து. அரணம் - மதில். முதுபதி - பழைய ஊர். இவர் பதியா தென்னின், உடுப்பூராகும் என்க. ஊரைச்சுற்றிலும் யானைத் தந்தங் களாலிட்ட வேலி, மதில்போல் விளங்கும் என்பதாம்.

3. மை செறிந்து அனைய-மை திரண்டிருந்தாலொத்த.அடைவு இலர் - சேர்தல் இல்லாதவர். உடைவன் தோலார் - வலிய தோலை உடையாகக் கொண்டவர். பொச்சையின்-மலைகளிலிருந்து எடுக்கும். நறவு - கள்; தேன். ஊனின் புழுக்கல்-மாமிசத்தோடு கூடிய சாதம். நஞ்சு அழல் பகழி - நஞ்சைப்போல வெப்பத்தினையுடைய அம்பு. எரிசரம் என்பது வழக்காதலின், 'அழற் பகழி' என்ருர்.

நாகன் என்பான், வேடர்க்கு அதிபதி என்க.

4. குணம் ஆ-குணமாகக் கொண்டு. விறல்-வெற்றி. மடங்கல்-சிங்கம்.குறிச்சி-மலை நிலத்தூரில். வாழ்க்கை-வாழ்க்கைத் துணையாகிய.

5. பொருவு அரும்-ஒப்பு இல்லாத. அதற்படு காதலால்-அந்தப் பிள்ளைப் பேற்றில் உண்டான ஆசையால். முருகு-வாசனை. அலங்கல்-மாலை. முன்றிலே - (கோயில்) முன்னிடம். பராய்-வழிபட்டு.

நாகனும் தத்தையும் பிள்ளைப் பேற்றை விரும்பி, முருகன் முன்றிலிற் பரவி நின்ருர்கள் என்க.

6. கானவர் - குறவர். ஊனம் - குறைவு. ஆன - (கருப்பம் நிறைதற்கு)ஆகிய. அத்திங்கள்-பத்துமாதம். பான்மதி-வெண்மையான திங்களை. உவரி - கடல்; ஈண்டு, பாற்கடல். மகப் பயந்த போது - குழந்தையைப் பெற்ற சமயத்தில்.

7. அருமையால்-அரிதாயிருந்த தன்மையினால். என்ன - என்று (நாகன்) சொல்ல. கலன் - ஆபரணம்.

திண்ணன் - வலிமையுள்ளவன்.

8. புரைஇல் - குற்றம்இல்லாத. தொன் முறைமை - பழைய முறை. விரை - வாசனையுடைய. கவடி - பலகறை.

9. அலங்கல் - மாலையினையுடைய. கங்கை நீரின் - கங்கை நீரைக் காட்டிலும். புனிதம் - பரிசுத்தம், அமுதம், வாயூறல். மழலைத் தீம் சொல்-பொருள் நிரம்பாததும் இனியதுமான சொல். குதட்டி - வாயை மென்று கொண்டு.

10. அலர் - விளங்குகின்ற. அந்தி - மாலைப்பொழுதில். ஐயவி-வெண்சிறு கடுகு. துயிற்றி-துயில்வித்து. கங்குல் புலர - இருள் நீங்க; விடிய. சிலைபயில் பருவம்-விற்றொழிலில் பழகத்தக்க வயசு.

11. வெங்கதிர், - சூரியன். பல் இயங்கள்-பல வாத்தியங்கள். தனு தொழில் வல்லவர் - வில் வித்தையில் தேர்ந்தவர்கள். கரும் போரேறு, திண்ணனார்.

12. புனம்-கொல்லை நிலம். ஏனம்-பன்றி. கடமை-பெண்ணாடு; ஒரு வகை மரையுமாம். ஆமா-காட்டுப் பசு. மரை - மானில் ஒரு வகை. கலை-ஒரு வகைமான். மீதூர்காலை-மேலே நெருங்கி வருகின்ற போது. திங்கள் - மாதம். வேட்டை வினை-வேட்டைத் தொழில். தாழ்ந்தது - தாமதித்தது. தெரியல்-மாலை. மாதந்தோறும் வேட்டை யாடு முறைப்படி வேட்டையாடுதல் தாழ்ந்ததனால், பலவகை மிரு கங்கள் மிகுதியாயின என்று கூறினர்.

13. தொடர்வு-சம்பந்தம். முயலகில்லேன்-முயல்வதற்குத் தக்க வலிமையில்லேன். நாதன் - தலைவன். மாற்றம் - மறுமொழி.

14. அத்த - தலைவனே. ஈண்டு - இங்கு.

15. மலையர் - மலையில் வாழ்பவர்; குறவர். மாறு எறிந்து - பகை வரை யழித்து. மா - மிருகங்கள். சுரிகை - உடைவாள்;

16. தோல் - கேடகம். வாளி - அம்பு. சாபம்-வில். அண்ண லார், திண்ணனார். மீளி - வலிமை.

17. கோடு-ஊது கொம்பு. குறுங்கண் ஆகுளி-குறிய கண்ணை யுடைய சிறுபறை. மாடு - பக்கங்களில். பம்பை-முல்லைப்பாறை சேடு - பெருமை, திரட்சி. கைவிளி - கைதட்டுதல். வேடு - வேடர்.

18. வெற்பர் - மலையில் வாழ்பவர்; வேடர். ஆயம் - கூட்டம். சிலைத்து - ஒலித்து, கை விளித்து - கை கொட்டி. அதிர்த்து-வாயால் உரப்பி.

19. எண்கு - கரடி. கானம் மேதி-காட்டெருமை. மருண்டு - மருட்சி கொண்டு. அம்பின்-அம்புகளால். நூறினர் - அழித்தார்கள்.

20. வயவர் - வீரர். பகழி-அம்பு. ஞமலி - நாய். சரி - சரிவு - அடிவாரம். தரு-மரங்களின். விரை-விரைந்து செல்கின்ற. கேழல்; பன்றி,

21. குன்றி - குன்றி மணியை. அடல் - போர்க்கு. சுலவிய - சூழ்ந்த. தெருமர - சுழன்று திரிய; வருந்த. மர நிரையில் - மரச் செறிவில்

குன்றியை நிகர் விழி என இயைக்க. பன்றி ஓடிச் சூழச் சென்று மரநிரையில் நின்றது என்க.

22. சுழல் இடை-சூழலில். அடை-அடைந்த. கணையினில்-அம்பினால். அடுவது-கொல்வது.

திண்ணனார், பன்றியை அம்பால் எய்து கொல்லக் கருதாமல் சுரிகையால் குத்திக் கொன்றார் என்க. சூழல், சுழல் - விகாரம்.

23. வழிவந்து-வழியில் நடந்து வந்ததனால். ஆற்ற-மிகவும். அருந்து-உண்ணு. குறுகுவோம்-அடைவோம்.

பசி, எம்மை உற்றது; இதனைக் காய்ச்சி நீ சற்று அருந்து; யாமும் தின்று தண்ணீர் குடித்துக் குறுகுவோம் என்றார் என்க.

24. போதி-போவாய். சேண்உயர்-மிகவும் உயர்ந்த; ஆகாயத்தில் உயர்ந்த எனவுமாம்.

25. விரையா நிற்கும்-விரைகின்ற.

26. அவர்கள், நாணனும் காடனும். கரை-ஆற்றங்கரையில். கழை-மூங்கில். கார் அகில்-கரிய அகிலினது. குறடும்-கட்டையும். புளினம்-மணல் மேடு.

புளினந்தோறும் முத்துங் குறடுஞ் சந்தும் மணியும் பொன்னும் வயிரமும் திரட்டி வைத்த முகலியினைச் சார்ந்தார்.

27. நிழல்-நிழலில். காண்பாய்-உண்டாக்குவாய்.

28. அளி-வண்டுகள். மிடை-நெருங்கிய. இழிந்து-இறங்கி. நதி, பொன்முகலி.

29. நெக்கு-நெகிழ்ந்து. என்பு-எலும்பு. ஆர்வம்-விருப்பம், கூட்டம் தொகுதிகள். இது-குளகம்; அடுத்த செய்யுளில், வரையேற என்பதனோடு தொடரும்.

30. முன்பு-முதலில். சோபானம்-படி. சார-அடைய. ஐயர்-காளத்தி நாதரின்.

இனி, ஐயர், திண்ணனார் எனவுமாம்.

31. சென்றவர் திண்ணனார். இனி, சென்று, அவர்காணுமுன் எனப் பிரித்தலுமமையும். பவம்-பிறப்பு. பொருவு இல்-நிகரில்லாத அங்கணர் திருநோக்கம் எய்தி, நீங்கி, அன்புருவமானார் என்க.

32. மாகம்-ஆகாயம். மோகம்-காதல், பேரன்பு.

33. புளகம் பொங்க-மயிர்க்குச்செறிய. படி இலா-நிகர் அற்ற. பரிவு-அன்பு. படிவம் ஆம் பரிசு-உருவமாகிய தன்மை.

34. கைம்மலை-யானை; கை என்னும் விசேடணத்தினால், மலை என்பது பெரிய வடிவத்தை யுடையதாகிய யானையை உணர்த்திற்று.

வேங்கை-புலி. அரி-சிங்கம். திரி-திரிகின்ற. வேட்டுவர், கொடிய விலங்குகள் திரிகின்ற காட்டில் தனியே யிருப்பார் என்பது அறியப்படுகின்றது.

35. விழுந்தது-கீழே விழுந்தது. மச்சிது - அநுசிதமான செயல். இனி, மஞ்சு இது என்பது, மச்சிது என்று வந்ததாகக் கொண்டு, அழகான இச்செயலை என்பாருமுளர்.

என்பான், பண்டு மா வேட்டையாடி. வந்தோம் என அடுத்த செய்யுளில் தொடரும்.

36. உந்தை-உமது தகப்பனர். இலைப்பூ இலையோடு கூடிய பூக்களை. ஊட்டி-நிவேதனம் செய்து. பறைந்து-சிலசொற்களைச் சொல்லி.

37. இவை கொல் ஆம் என்றது, நீராட்டி, பூச்சூட்டி, நிவேதனம் செய்தலை. கடைப்பிடித்து-பின்பற்றி. ஆதரவு-அன்பு. இதுவும் குளகம்.

38. சால இறைச்சி கொண்டு என்க.

39. புல்லுவர்-தழுவுவர். புனிறு ஆ-ஈன்றணிமையுடைய பசு.

40. தமர்-தம்மவர்; சுற்றத்தார். நிற்கவும் இல்லேன்-நிற்கவும் வலிமையில்லேன். வார-ஒழுக.

41. மறித்து-மீண்டு. நீட-அதிகமாக. தாழ்த்தது-தாமதம் செய்தது. இது குளகம்.

42. இவன் என்றது, திண்ணனுரை. வங்கு (மரப்) பொந்து. 'தனக்கிறப் பறித்த போதும் தானனை விடுத்தல் சொல்லா, உடும்பு' என்பதை ஒப்பிடுக.

43. மயல்-மயக்கம். என்னே-என்ன ஆச்சரியம். பேறு-பெறுதல்; பங்கு. பரிசு - தன்மை. மற்றைத்தசை - சுவையில்லாத தசை.

44. ஊன் அமுது - மாமிச உணவு. மஞ்சனம் ஆட்டல்-நீராட்டல். தூநறும் பள்ளித்தாமம் - பரிசுத்தமாகியதும் வாசனையுடையதுமான திருப்பள்ளித் தாமத்தை; திருப்பள்ளித்தாமம் - பூ. குஞ்சி - தலைமுடி. துதைய - நெருங்க.

45. தனு - வில். சரம் - அம்பு. போனகம் - உணவு. நனி - மிகவும்.

46. ஈண்ட -விரைய. முடிமிசை - தலைமுடியில் வைத்திருந்த. விளைத்த - செய்த. விமலன் - மலமில்லாதவன்; பரிசுத்தமுடையவன்.

47. பொலிந்த - விளங்கிய.

48. கொழுவிய - கொழுப்பான. நாயனீர், நாயனர் என்பதன் விளி; நாயனுகிய நீர் எனவும் கொள்ளலாம்.

49. கரங்கள் - கிரணங்கள்; கைகூப்பி எனவும் பொருள் படுதல் காண்க. பகலவன் - சூரியன்.

50. மைவரை - கரியமலை. அகலா - அகலாமல்.

51. சார்வு அரும் - அடைய முடியாத. அடவி - காடு. அன்பினில் - அன்பினால். இருள் - இரவு.

52. ஒளியின் - ஒளிபோல. மந்தி - குரங்கு. மணிவிளக்கு - மணிகளாகிய விளக்கு. ஐந்தும் - ஐந்து புலன்களையும். ஆறு அடக்கி - முறையால் அடக்கி. ஆறு என்பதை ஆறு பகை எனக் கொண்டால், உம்மை தொக்கது என்க. ஐந்து மாறடக்கியுள்ளார், இருடிகள்.

53. கறைப்பொழுது - இருட்டு நேரம்; இரவு. நீங்கி - நீங்க. சுருங்கிட - குறைய. அறிந்த - (விடியற்காலத்தைத்) தெரிந்த. இது குளகம். கடல் இரவு முழுதும் ஒலித்துக்கொண்டிருப்பதனால் தூங்காதிருக்கின்றது என்பது மரபு.

54. விரகு - உபாயம். ஊறு - துன்பம். உறு - வடிவம். மாறு அடு - பகைவரைக் கொல்கின்ற.

55. இருள் வாங்கி - இருளை நீக்க. கருந்திரை - கரியதிரைச் சீலை.

56. மலைமருந்து - மலையில் அமிர்தம் போல இருக்கும் குடுமித் தேவரை. இதுவும் குளகம்.

57. இந்த அநுசிதம் யார் செய்தார் என்று அழிவர் என்க. அநுசிதம் - உசிதமல்லாதது; தகுதியில்லாதது.

58. வரவு அஞ்சா - வருதலுக்கு அஞ்சாத. அலமந்தார் - சுழன்று திரிந்தார், வருந்தினர்.

59. பவித்திரம் - பரிசுத்தம்.

60. அங்கணர் - அழகிய கண்ணையுடையவர்; சிவபிரான் அருட்கண் உடையவர் என்பது கருத்து.

62. செறி - நெருங்கின. துணிபடுத்து - துண்டுகளாகச் செய்து. ஒளி நின்று - மறைந்து நின்று.

இந்தனம் - விறகு. அரணி - தீக்கடை கோல். தழல் - தீ. அயில் - கூர்மை பொருந்திய. அலகு அம்பால் - இலைவடிவமுள்ள அம்புகளால். குட்டம் இட்டு - வளைவாகத்தோண்டி. தழலில் - தீயிலிட்டு. வதக்குதல் என்பது, வக்குதல் என நின்றது.

வல் விரைந்து - மிகவும் விரைந்து. தூய் - தூவி.

64. அல் - இரவில்.

65. பூசிப்ப - பூசனை செய்ய. ஒழித்தருளல் - நீக்கி விடுதல். இது, குளகம்.

66. மவுலி - முடி.

68. பரிவு - அன்பு. முனிவர், சிவகோசரியார். சடிலம் - சடை. புனற் சடிலம் - கங்கா நதியையுடைய சடை.

69. புலர்வு அளவும் - விடியும் வரையும். துனை - விரைதலையுடைய. தோன்றுவான், சூரியன். கதிர் - ஒளி.

70. பின்னுசன் - பின்னல் இட்ட சடையுடையவர்; பின்னகம் - பின்னின மயிர்; முறுக்கி முடித்த கொண்டை (அகம் 9 உரை.)

71. கண்படா - உறங்காத.

72. மஞ்சனப்புனல் - திருமஞ்சனத்துக்குரிய தீர்த்தம். நாள் மலர் - புதிய மலர்.

73. புட்கள் - நிமித்தங்கள். ஈண்ட - விரைய.

74. உதிரம் - இரத்தம். வண்ண வெஞ்சிலையார், திண்ணனார்.

75. குருதி - இரத்தம். கொந்து-கொத்து. சோர - கீழே விழ. பைந்தழை அலங்கல் - பசிய இலைகளோடு கட்டிய மாலையையுடைய.

77. வாளி - அம்பு. மாறு ஆ-பகையாக. மீளி வலிமையுடையரான. ஆளி - சிங்கம். உள்ள - உள்ளவைகள். விளைத்தவோ - செய்தனவோ. நேடி - தேடி.

78. நாடியும் - தேடியும், ஆராய்ந்தும்.

79. மேவினார் - சேர்ந்தவர்.

80. மின்செய்வார் பகழிப் புண்கள் - ஒளி செய்கின்ற நீண்ட அம்புகளால் உண்டாகும் புண்களை. பொன் செய்-அழகு செய்கின்ற.

81. ஏறு - இடபம். வெருக்கொண்டு - அச்சங் கொண்டு. பூத நாயகன் - பூதங்களுக்குத் தலைவன்; இனி, பஞ்ச பூதங்களுக்கும் தலைவன் எனவுமாம். மனத்தினும் - மனவேகத்தைக் காட்டிலும்.

82. பார்ப்பார் - பார்ப்பவர்; ஆராயும் திண்ணனார்.

83. இடந்து - தோண்டி. அப்பின் - அப்பினால். மதர்த்து - களிப்புக்கொண்டு. சரம் - அம்பை. வாங்கி - எடுத்து.

தம் கண் வாங்கி, முதல்வர் தம் கண்ணில் அப்ப என்க.

84. உன்மத்தர் - பித்தர்.

85. வள்ளலார் - திண்ணனாருடைய. உலப்பு இல் - கெடுதலில்லாத-தவிர்தலில்லாத என்க. உம்பர்-தேவர்கள். உம்பர் மேலார்- திண்ணனார்.

எல்லா உறுப்பினும் சிறந்த கண்ணினை யிடந்து அப்பினாராகலின் 'வள்ளலார்' என்றார்.

86. மண்டும்-மிகுந்து செல்லும்; அதிகமாகின்றது. ஒழிப்பேன்- (இந்தக் கண்ணில் வரும் குருதியையும்) தீர்ப்பேன். குளகம்.

87. காணும் நேர்பாடு-காணத்தக்க முறையை. எண்ணுவார்- ஆராய்பவராகிய திண்ணனார்.

88. வெள்விடையின் பாகர் - வெளிய இருஷப வாகனம் செலுத்துபவர்; 'ஊர்தி வால் வெள்ளேறே' என்பது காண்க.

நாக கங்கணர் - பாம்புகளை காப்புக்களாகக் கட்டியிருப்பவர். காளத்தியற் புதர் திருக்கை, அன்பர் கையைத் தடுக்க, அவர் வாக்கு மூன்று தடவை, 'நிற்க' என்றது என்க. மூன்று அடுக்காவது, 'நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப' என்பது.

89. ஊறு - துன்பம். ஏறு உயர்த்தவர் - இடபக் கொடியை எடுத்தவர். வலத்தில் - வலப்பக்கத்தில்.

7. கம்ப ராமாயணம்

கம்பரைக் குறித்து நாம் அறிந்தது சொற்பமே. அவருடைய தந்தையார் பெயர் ஆதித்தன். சோழநாட்டுத் திருவழுந்தூரிலே வாழ்ந்தார்; உவச்சர் குலத்திலே பிறந்தார்; அரசவையை அணுகாது சடையப்ப வள்ளலோடு வாழ்ந்திருந்தார்; திருவெண்ணெய் நல்லூரிலே இராமாவதாரத்தை எழுதினார். இவருடைய காலம் பற்றிய விவாதம் தீர்ந்த பாடில்லை. 12-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பதுதான் கம்பரைச் செய்திகளுக்கும் சரித முடிவுகளுக்கும் இலக்கிய சரிதத்துக்கும் பொருந்தியதாக உள்ளது. இவர் சேக்கிழாருக்கு ஒரு தலைமுறை பிந்தியவர்

கும்பகருணன் வதைப்படலம்

1. வரை - மலை. மௌலி - கிரீடம்.

2. காதலர் - மக்கள். தலை கவிழ்ந்து சென்றான் என்றபடி.

4. மூதாதை - பாட்டன். அமளி - படுக்கை. தவிசு-மெத்தை.

6. க(வ்)வை - துன்பம். சிவை - துருத்தி; நாக்கிலே புனலூறினால் அன்றிச் சுவை தோன்றாது.

7. மேனி விஷயத்தில் காமன் நாய்; சேவகச் செய்கையில் தான் நாய்.

8. வாசவன் முதலியோர் தன்னால் வெல்லப்பட்டவர் ஆதலின் இளிவரும் இவர் என்றான்.

9. உளைவன - வருத்தம் விளைப்பன.

12. இறை - நொடிப் பொழுது. துனி - வெறுப்பு.

14. தூதர் சென்றது அவன் மரணத்தின் பொருட்டு என்க.

15 மாயம் - பொய். கறங்கு - காற்றாடி. 16. உழக்கிவிட்டு-மிதிப்பித்து.

17. உசலம் - உலக்கை. வன்தொழிலால் என்றது மிகவும் பலமாக என்றபடி.

20. அலை - கடல். 21. இருவரும் குன்று போன்றிருத்தலின் இந்த உவமை கூறினார்.

22. குடன் குடம் என்பதன் போலி. கடல் நுரைத்துகில் - கடல் நுரை போன்ற வெண்பட்டு.

23. நீ அவரது உயிரை உண்கின்ற செயலை முற்றுவிப்பாய். இத்தொடரிலே, உன்னுயிரைக் கொண்டு அவர்க்குப் போனகத் தொழிலை முற்றுவிப்பாய் - உன்னுயிரை அவர் கவருமாறு ஈவாய் - என்ற அமங்கலப் பொருள் தொனிப்பதாகக் கூறுதல் உண்டு.

24. அழிவு காலம் வந்து விட்டதோ.

25. மு(ன்)னம் சொன்ன சொற்கள் - நந்தி சாபம் வேதவதி சாபம் முதலிய.

26. கொண்டு, அசை, பொன்றினை - இறந்தாய்.

27. உய்திறம் - பிழைத்தற் குரிய வழி.

28. பந்தி - வரிசை. மந்திரம் - ஆலோசனை.

உந்துதல் - செலுத்தல்.

30. மறம் - வீரம். உரிமை - உரிய வல்லமை. மாண்டனை - இழந்தாய். உளைய - மனம் வருந்த.

31. ஊன் உடை உம்பி - ஊன், உணவையே விரும்புகிற - புகழை விரும்பாத உன் தம்பி.

32. சாற்று என் கூற்றை - என் கட்டளையை யாவர்க்கும் தெரிவி.

34. விடுதல் நலம் என்றபடி.

35. சீதையை இராமன்பாற் சேர்ப்பதே சிறந்த தவம்.

37. ஆதிசேடனுடைய பெரிய தலையிலிருந்து தவறி. தேர்த் தட்டு, பூமி; அதன் மேற்பகுதி மேருமலை போலும் என்க.

38. மலை கொல் - பூமி நடுவே நிற்பதாகிய கால் முளைத்த மேரு மலையோ.

39. கரிய யமன் போன்ற கும்பகருணன்.

40. ஊன் இங்கே உடம்பு. மிகவும் மேம்பட்ட மனஉறுதி வாய்ந்தவன்.

41. இது - பிறர் மனைவியைச் சிறை வைத்திருக்கும் இது.

42. இரவி சேய் - சுக்கிரீவன். நிருதர்கோன் - வீடணன்.

43. ஆகில் - அப்படியனுல். தெருட்டி - தெளிவித்து.

44. தந்திரக்கடலை நீந்தி - சேனு சமுத்திரத்தைக் கடந்து; தன் பெரும்பலத்தை - தனக்குச் சிறந்த துணைவனை கும்பகருணனிடம்; உடன்பிறந்தானைத் தோள் வலியாகச் சொல்லுவது வழக்கு. வெந் திறலவனுக்கு - மிக்க பலமுடைய கும்பகருணனுக்கு.

45. மழையின் நீர்-மழைத் தாரைபோன்ற நீர். இறைஞ்சினனை - வணங்கிய வீடணனை; வினையாலணையும் பெயர்.

46. நீ அபயம் பெற்றவாறும் - நீ (இராமனை யடைந்து) அபயம் பெற்ற விதத்தையும். அமரரும் பெறுத லாற்ருச் சிறப்பு - தேவர் களும் பெறமுடியாதசிரஞ்சீவியாயிருக்கும் பெருமை. உபய லோகத்தி லுள்ள சிறப்பு - இவ்வுலக மறு வுலகங்களில் உள்ள ஐசுவரியாதி களின் பெருமை. கவிஞரில் அறிவின் மிக்காய் - புலவரைப் போலச் சிறந்த அறிவுள்ளவனே!

47. தருமம் நின்ற நிலைமையும் - தர்ம நிலையான நல்ல செயலும். புலமை தானும் - உண்மை யறிவும். அருந்தவம் ஆற்றி - செயற்கு அரிய தவத்தைச் செய்து. ஆதியங் கடவுளாலே பெற்ருய் - பிரமன் கொடுக்கப் பெற்றுக் கொண்டாய். வீடணன் பிரமனிடம் நீதியும்,

தருமநின்ற நிலைமையும், புலமையும் பெற்ருன்; இதை, "ஆதியம் பரமனுக்கன்பு நல்லறம், நீதியின் வழாமையு முயிர்க்கு நேயமும், வேதியரருளு நான் விரும்பிப் பெற்றனென், போதுறு கிழவனைத் தவமுன் பூண்ட நாள்". "அற நிலை வ்ாழாமையு மாதி மூர்த்தியால், நிறைவரு நேயமு நின்ற வாய்மையும், மறையவர்க் கன்புமென் றினைய மாமலர், இறையவன்றர நெடுந் தவத்தினேயினுன்" என்பவற்ருல் அறிக.

48. ஐய என்றது அன்பின் மிகுதியால் வந்த வழுவமைதி. வேந்தற்கு-இராமனுக்கு. உய்கிலை என்னில்-பிழைக்கவில்லை என்ருல். இவ்வரக்கராயுள்ளோ மெல்லாம் - அரக்கராயுள்ள நாங்கள் எல்லோரும். எய் கணை மாரியாலே - விடும் அம்பு மழையாலே. எண்ணீர் (எள் + நீர்)-எள்ளோடு கூடிய நீரை. கடன் கழிப்பாரை - பிதிர்க்கடனைச் செய்வோரை.

49. வருவது புலையெலாம் - வளர்ந்து வருவதாகிய இழிந்த குணமுடைய அரக்கரெல்லோரும். மாண்டபின்னை - இறந்த பின்பு; (மாள், பகுதி). புலை, ஆகுபெயர். திருவுறை மார்பன் - இராமன். உன் இலங்கை மூதூர் புகுந்தனை எனக் கூட்டுக. புகுந்தனை-புகுந்து. என்றும் தீரா - எக்காலத்திலும் அழியாமலிருக்கும். பொரு அரும் - ஒப்பற்ற. துய்க்க - அநுபவிக்க. அவண்போதி - அவ்விடம் செல்.

50. இருள் உறு சிந்தையேற்கும் - அஞ்ஞானம் நிரம்பிய மனமுடைய எனக்கும். இன்னருள் சுரந்த வீரன் - இனிய கருணை செய்த இராமன். அருளும் ஒன்றோ - கருணை காட்டுவதொன்று மட்டுமோ? அபயமும்-பயமற்ற நிலையையும். அன்றி - அல்லாமலும்; உம்மை தொக்கது. மருள் உறு - மயக்கமுற்ற. பிறவி நோய்க்கு மருந்தும். ஆய் - பல ரோகத்தை மாற்றும் மருந்துமாய்; "பெருந் தவ மியற்றினேர்க்கும் பேர்வரும் பிறவி நோய்க்கு, மருந்தென நின்ருன்" இராமன் ஆதலின் இங்ஙனம் கூறினுன். மாறிச் செல்லும் - நின்ற நிலையில் நில்லாத. சகட உருள் உறு வாழ்க்கை - வண்டிச் சக்கரத்தைப் போன்ற (மாய) வாழ்வையும்.

51. அவன், நெஞ்சறி சுட்டு. செல்வத் திலங்கையும் அரசும் - (கல்வி, பொருளாகிய) செல்வங்கள் நிரம்பிய இலங்கா நகரையும் அரசுரிமையையும். எல்லாம் - பிற உரிமைகளையும். யான் நினக்கு தந்து-நான் உனக்குக் கொடுத்து. இதில் உறுதி- இதனினும் நன்மை (உனக்கு இல்லை எனக் கூட்டுக.) உன்பின் வந்தேன் - உன் தம்பியாகிய எனது. மனக்கு நோய் துடைத்து-மனத்தில் உற்ற துன்பத்தை நீக்கி. நம் தம் மரபையும் வளர்த்து - நமது புலத்திய வம்சத்தையும் வளர்த்து.

52. பிறந்த உற்ருர் - உறவினராகப் பிறந்தோர் (ஆனுலும்). தாயவை - தாய். தருமம் பார்ப்பார் - அறத்தைக் கருதுவோர்.

உண்பவரோ - (பொருளாக) மதிப்பரோ? அவை - அந்த உண்மைகளை. நீ அறிதியன்றே - நீ நன்கு அறிவா யன்றோ?

53. ஒருவன் தீவினை செய்ய - ஒருவன் பாவச் செயலைச் செய்ய. தீங்கிலாதார் - பாவமற்ற பிறர். அவனொடும் வீவினையுறுதல்-அந்தப் பாவியோடு மரணமடைதல். மேன்மையோ-சிறந்ததோ? கீழ்மையோ-இழிந்ததோ? ஆய்வினையுடைய - நன்மை தீமைகளை ஆராயும் தொழிலுடையவன் நீ. தவத்தின் மிக்கான் - தவத்தாற் சிறந்த பரசுராமன். ஈன்ற தாய்-பெற்ற தாயாகிய ரேணுகை. வினை செய்ய-(பாவத்) தொழிலைச் செய்ய.

54. உதிரம் ஊற்றி - கெட்ட ரத்தத்தை நீக்கி. சுடல் உறகாரம் வைத்து. வேறூர் மருந்தினால் - மலை காடு முதலிய வேறிடங்களில் தோன்றிய மருந்தால். துயரம் தீர்வார்-துன்பம் நீங்குவார்கள். கோட்டம் - (உடலிற் பூசிப் பரிமளிக்கச் செய்ய வேண்டிய) வாசனைப் பொருளை. கழிவது கருமம் அன்று - வீணுக்குவது காரியமாகாது. மடல் உடை அலங்கல் மார்ப - இதழ்களையுடைய மலர்களாகிய மாலையை யணிந்த மார்பினையுடைய கும்ப கன்னனே!

"உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி — உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு"

என்ற செய்யுளை இச்செய்யுளின் முதலிரண்டடிகளுடன் ஒப்பிடுக.

55. நும்முன் தன்னை காக்கலாம் என்னின் - உமது தமையனை இராவணனைக் காப்பாற்றலா மென்றால். அது கண்டதில்லை-அதைச் செய்ய முடியாது; காப்பதற்கேற்ற ஒரு நற்குணமாவது ராவணனிடம் காணப்படவில்லையே. வேறே - வேறொரு வழியில். அறத்தை - தருமத்தை.

56. மண்ணின் மேலால் இறங்கினை - இந்தப் பூமியில் வந்து இறங்கி. இன்று காறும் - இன்றைய வரையில். ஒன்று உற்றது உளதே - ஏதேனும் பயனுண்டோ? என் - என்ன பயன் கருதி. அறங்கெட - தருமம் அழிய. உயிரை நீத்தல் மேற்கொள்வான் அமைந்தது - உயிரைப் போக்கிக் கொள்ள உடன்படுவது.

57. யாவர்க்கும் - எப்படிப்பட்ட திறமை உள்ளவர்களுக்கும். உனை நலியும் ஈட்டார் யார்-உன்னை வருத்தப்படுத்தும் வன்மையுள்ளவர் எவருளர்? மூவர்க்கும் தலைவரான மூர்த்தியார்-(பிரமன் திருமால் உருத்திரன் என்ற) திரிமூர்த்திகளுக்குத் தலைவரான திருமால். காகுத்த வேடங்காட்டி - ககுஸ்த வம்சத்திற் பிறந்தவர்போல் தோற்றி.

58. துனி வரும் - கோபங் கொண்ட. செறுநரான தேவரே - பகைவரான தேவர்களெல்லோரும், கனிவரும் காலத்து - பழம் பறித்

துத் தின்னத்தக்க காலத்தில். பூக்கொய்ய - (மரத்தை வெட்டி அது தளிர்த்து மலர்ந்தபின்) மலரைப் பறிக்க.

59. வேத நாயகனே - வேத முதல்வனான இராமனே. அவனே - இராமனை; நெஞ்சறி சுட்டு, உலகறிசுட்டுமாம். காண - தரிசிக்க. அறத்தொடும் திறம்பாது போதுவாய் - தருமத்திற்கும் மாறுபாடின்றி வருவாயாக. பொலன் கழல் இரண்டும் - அழகிய இரண்டு பாதங்களையும்; கழல், ஆகு பெயர்.

60. தும்பி - வண்டுகள் (மொய்க்கின்ற). அம் - அழகிய. தொடையல் மாலை - மலர் மாலைகளும் மணி மாலைகளும் (அணிந்து). தொடையல் மாலை, உம்மைத் தொகை. (தொடையல் அம், சாரியை). படியில் தோய - பூமியிற் படியும் படி. பொன் பம்பு கழல்கள் - பொன் பரவிய வீரக் கழலை யணிந்த திருவடிகள்.

61. தார்க் கோல மேனி மைந்த - மாலைகளணிந்து அழகுடன் விளங்கும் மேனியையுடைய வீடணனே! மைந்த என்றது, வலியுள்ளவனே என்ற பொருளில் வந்தது. தருதியாயின்-காக்கக் கருதினால். கார்க்கோல மேனியானை - நீர் கொண்ட மேகம் போன்ற அழகிய வடிவமுள்ள இராமனை.

62. மலரின் மேல் இருந்த வள்ளல் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன். வழுவிலா - பொய்யா. உலைவிலாத்தருமம் - அழியா அறத்தை. பூண்டாய் - மேற் கொண்டாய். உலகு உள தனையும் - இவ்வுலகம் உள்ள அளவும். உள்ளாய் - சிரஞ்சீவியாக இருக்கப் போகின்றாய். உலகுக்கு எல்லாந் தலைவன் நீ என்க. அது உனக்கு தக்கதே - அடைக்கலம் புகுந்தது உனக்குத் தகுதியே யாகும். மரணம் உறு புலையேனும் - (அதருமத்திற்காக) இறப்பது மிக்க இழிவைத் தருமேனும்.

63. கருத்து இலா இறைவன் - அறிவில்லாத தலைவன். தீமை கருதினால் - தீய காரியஞ் செய்ய எண்ணினால். காத்து - தடுத்து. திருத்தலா மாகிலன்றே - திருத்தக் கூடுமானாலன்றோ (மேன்மை). தீராதாயின் - முடியாவிடில். ஒருத்தரின் முன்னம் - (அறிவற்ற) தலைவர் மடிவதற்கு முன்னமே. அவர்க்கு உரியது சாதலுன்டு - அவ்வீரர்களுக்கு உரிய அறம் இறத்தலேயாம். அம்மா - அசை.

64. வீரன் - இராமன். சுடுகணை - நெருப்பைக் கக்கும் அம்பு. துரப்ப - விட. சுற்றும் - சூழ்ந்துள்ள. வெம்பு வெஞ்சேனையோடும்- கோபத்தை யுடைய கொடிய படைஞருடன். கிளைஞர் - உறவினர்.

65. செம்பிட்டுச் செய்த இஞ்சி - செம்பினாற் கட்டப்பட்டிருக்கின்ற மதில். தெரியல் ஏம் முன் உயிர் கொண்ட - மாலையை அணிந்த எனது தமையன்மாரான கரதூடணர் உயிரைப் போக்கிய. அம்பிட்டு - (நாண மென்னும்) அம்பால். துன்னங் கொண்ட - தைக்கப்பட்ட. புண்ணுடை நெஞ்சோடு - புண்பட்ட மன முடையவனாய்.

66. சிந்திப் போகுவது - சிதறிப் போகத் தக்க காலத்தில். அயலே நின்று போற்றினும் - பக்கத்தில் இருந்து பல உபாயங்களைச் செய்து காத்தாலும். சேகு உற - உறுதியாக; இரங்கலை - வருந்தாதே. என்றும் உள்ளாய் - சிரஞ்சீவியே! இச் செய்யுளுடன், "ஆம் பொருள்களாகு மவை பொறியின் வகை வண்ணம்" (சீவக. 842) என்பதை ஒப்பிடுக.

67. அவன் தன்னை - வீடணனை. புல்லி - தழுவி. நீர் பொழி கண்ணின் - நீரொழுகும் கண்ணால். உடன் பிறப்பு என்பது இன்றுடுந் தவிர்ந்தது அன்றே எனக் கூட்டுக. வென்றி வெம் திறலினும் - வெற்றியுடைய மிக்க பலமுள்ள வீடணனும். அவன் - கும்பகன்னனுடைய.

68. ஒடுங்கினன் - வாட்ட முற்று - முற்றெச்சம். பிணங்கினல் ஆவது இல்லை - கோபம் கொண்டால் செய்யத்தக்க காரியமில்லை. பெயர்வன் - இவ்விடம் விட்டுப் புறப்படுவேன். குணங்களாலுயர்ந்தான் - நற்குணங்களாற் சிறந்த வீடணன்.

69. உய்திறனுடையார்க்கு அன்றே - கடைத்தேறக் கருதுவார்க்கு அன்றோ? அறநெறி - தருமவழியும். ஒழுக்கம் - நல்லொழுக்கமும். உண்மை - உள்ளன. பெய்திறமெல்லாம் பெய்து - (முடிந்த அளவு) சொல்லக் கூடிய புத்திமதிகளெல்லாம் சொல்லி. குலத்து மானம் சிறிதும் தீர்ந்திலன் - குலாபிமானம் சிறிதும் அவனை விட்டு நீங்கவில்லை.

70. கனைகடல் - ஒலிக்கின்ற கடல். தூளியைத் தள்ளிப் பரவை ஆர்த்தில.

71. பொரா நின்றேம் - பொருவதாக நின்றுள்ளோம். பாராட்டத் தகுந்த பழமையான போர் முறையில். விராவு - பொருந்திய.

72. கொற்றவ என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

73. 'வாளினாற் பேசின் அல்லால் வாயினாற் பேசல் ஒட்டேன்'.

74. பிணக் குவியல்களிடையே இரத்த வெள்ளம் தேங்கி நின்றது.

75. தீப் பொறி கிளம்பி எழுகின்ற கண்கள். முரண் - வலி.

76. அளவில் ஆற்றலான் - கும்பகருணன். நீற்றின் தன்மையதாய் நுண்ணியதாகப் பிசைந்து.

77. இன்னொரு மலையைக் கொண்டுவரச் செல்வேன் என்று சொல்லிப்போய்த் தேடுகையில். நோன்பினோர்-தவத்தையுடையவர். சொல் - சாபச் சொல்.

78. பார்த்தவர் வாய்விட்டுக் கதறுமாறு. மாருதி ஓட்டுமோ - அனுமன் பார்த்திருப்பானோ.

79. அற்றது காலையின் - சூலாயுதம் இல்லாத போது, அனைய பெற்றியின் - அவ்வேளையில். எறுழ் - வலி.

80. ஒருவரை யொருவர் அதட்டினார்கள். இவன் சுக்கிரீவன்.

81. மன் - அரசன். தண்டல் - கெடுதல்.

82. ஏய் எனும் அளவினில் - ஒரு நொடிப் பொழுதில்.

83. என்உயிரைக் கொண்டுபோவது போல சரக்கூடங் கட்டி வழியைத் தடுத்தான்.

84. மீண்டு தன் கைகளால் அம்பு மதிலை நீக்கும் பொருட்டு.

85. உணர்ச்சி எய்தியவன் சுக்கிரீவன். தோற்றிலான் - கும்பகருணன்.

86. உன்னினவன் சுக்கிரீவன். உகத்திலே நிரப்பிய பொருட்கெல்லாம் முடிவாக அடைதற்கு உரியபரம் பொருளின் அமிசமான இராமனை.

88. உக்கனன் - நழுவினன்.

89. விசும்பினரை - வானவரை.

90. தீச்சிகை - அக்கினிச்சுவாலை. இருமடங்கு மிகுந்தது. தெழிப்பு - ஆரவாரம்.

91. மையல் நோய் - ஆசையாகிய நோயானது. இராவணனைக் கொண்டு முடித்த விதம் என்னேதான்!

92. ஆதியாய் - முதற் கடவுளே. என் தம்பி ஏற்கனவே உன்னை அடைக்கலமாக அடைந்துள்ளான். மீண்டும் அவனை அடைக்கலப் பொருளாகக் காத்தலை வேண்டினேன்.

93. நம்பியாகிய இவனை.

94. உட்கொளுவா - பூட்டி.

8. காசிக் கலம்பகம்

1. கடவுளர் மடவியர் - தெய்வமகளிர். எறிதரு - வீசுகின்ற. வளை - வளையல். சயவிருது - வெற்றிக் கொடி. மலடி, பிட்டு வாணிச்சி. இடியல் - மா. பரிந்தன - விரும்பிச் சுமந்தன. வளர்பரிதி - பாதி சூரியன். உதயத்தின்-உதயகிரியைப்போல. இருகவிஞர், தும்புரு நாரதர். வலயம் - தோள்வளை. பருவரை, மேருமலை. மலர்மகள் புயந் தழுவு சரம், விஷ்ணு வாகிய அம்பு.

சுடர்வலயம தென என்பதற்கு, சூரிய மண்டலம் போல என் பாரும் உளர்.

கிளர்ந்தன - விளங்கின. நிணம்-கொழுப்பு. நரகரி-நரசிங்கம். உரி அதள் - உரித்ததோல். பொற்பு - பொலிவு. மலி - மிகுதியாக. அடு திறல் - காயும் வன்மையுடைய. மதி கதிர் – சந்திர சூரியர். மதி கதிர் வலம் வருவெற்பு - மேருமலை.

குடவளை - குடம்போன்ற சங்குகள். உடுநிரை - நக்ஷத்திரங் களின் கூட்டம். தடம் கரை - பெரிய கரைகளில். சினை - முட்டை. குரை புனல் - ஒலிக்கின்ற வெள்ளம். முருகு அவிழ் - வாசனை வீசு கின்ற. அவிமுத்தத்து - காசியில். விண் தொடு-ஆகாயத்தைத் தொடு கின்ற. மதிநுதல், பார்வதி. புயவகுப்பாவது, பிரபந்தத் தலைவனின் தோள்களை வருணித்து அவன் பெருமையை எடுத்து கூறுவது.

2. தண் உலாம் - குளிர்ச்சி பொருந்திய. பிச்சன், சிவபெருமான். முகிழ்க்கும் - அரும்புகின்ற. குறு மூரல் - புன் சிரிப்பு. எம புரத்தில் - எம உடலில். காய்ந்திடில் - எரித்து விட்டால்.

புன் சிரிப்பால் எம் உடம்பிற் காம நோயாகிய தீயையிட்டீர் என்பது கருத்து.

பிச்சியார் என்பது, சிவ சின்னம் தரித்துப் பிச்சைக்குச் செல்லும் மகளிரை நோக்கி ஒருவன் கூறுவதாகச் செய்யுள் செய்வது.

3. கரவளை சரியோடு ஒழுகும் என மாறுக. கரவளை - கையி லணிந்துள்ள வளையல். சரி - முழங்கைக்கு மேலணியும் ஓர் வகை ஆபரணம். சரக்கு - பண்டம். கரவளையே - தோணியே. அனம் தீ விடமே - சோறு கொடிய விஷமாயிருக்கிறது. கனமே-மேகமே. தீவு இடம் - தீவாகிய இடம். தடங்கா-பெரிய சோலைகள். கண்ணீர்-கள் நீர்; மதுவாகிய நீர். துயரே வதிதல் நந்தினம் - துன்பத் திடத்துத் தங்குதல் பொருந்தினேம். சூரல்-அழித்தலையுடைய. நந்து இனமே- சங்கின் கூட்டமே. நா வாய் - நாவும் வாயும். நாவாய் - ஓடமே.

4. புவனம் அவை ஏழு - மேலுலகங்கள் ஏழும். பிலம் ஏழும் ஆய் - கீழுலகங்களேழுமாக. அடைவு அடைவு - முறை முறையாக. முண்டகக் கண்ணன் - தாமரையினிடத்திலிருப்பவனாகிய பிரமன். குஞ்சிதம் - வளைந்த. கோடீரம் - கிரீடம். அதலம் - பாதாள லோகத் திலும். துருவி - ஆராய்ந்து தேடி. வெளியில் - மன்றில். காசி

யிலடைந்தோர்க்கு முத்தி என்பது வழக்காறுதலால், அங்கு அடையாமலே பரமபதம் அடைவிப்பேன் என்றது சம்பிரதம்.

சம்பிரதம் ஆவது, இந்திர ஜாலம் முதலிய வித்தையில் வல்லவர் தம் பெருமையைத் தாமே கூறுவதாகச் செய்யுள் செய்வது.

5. அரும்புவனங்கள் - அரிய உலகங்கள். வாசம் - இருப்பிடம். வாசம் அரும்பு - மணம் உண்டாகின்ற. வனங்கள்-காடுகள். மாதவர் அங்கம் - பெரிய தவத்தோர்களின் மனம். ஞாலம் ஏழ்தரும் மாது, உமாதேவி. அவர் அங்கம் - அவருடலின் ஒரு பாகம். மரு - வாசனையுடைய. தருமருக்கு - அறமுடையவருக்கு. ஒன்றை - முத்தியை. மனத்திருக்கு - மனத்திலுள்ள மாறுபாடான எண்ணங்கள். ஒயில் - ஒழிந்தால்.

'தருவதையர்......கொன்றையே' என்பதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர்.

6. ஏடு - இதழ். அன்பர்க்கு - திருமாலுக்கு. இரும்பை ஆடகம் ஆக்கிக்கொடுத்தோம்-இரும்பென்னும் உலோகத்தைப் பொன்னாக்கிக் கொடுத்தோம், இரும்பை ஆடு அகம் ஆக்கிக் கொடுத்தோம் - பெரிய (காளிங்கன் என்னும் பாம்பின்) படத்தைக் கூத்தாடுமிடமாக ஆக்கிக் கொடுத்தோம். இருப்புக்கல் - இருப்பிடமாகிய மேரு மலையை.

7. உணர்த்துகேம் - அறிவிப்பேம். ஏதினால் - என்ன காரணத்தால். பசுவினைப் படுத்து - நாற்காற் பிராணிகளைக்கொன்று. மிச்சில்- எச்சில். இல்லை - ஒருயிரும் இல்லை. பசுவினைக் கொன்று, அனல் வளர்க்கும் யாகம் அதிகம் என்பது என்ன காரணத்தினால்? அன்பர்தம் இறைச்சி மிச்சில் (அதிகம்). அதில் இச்சையார் ஆதியார் (அதனை) அறிவர். அது கிடக்க, மது வருந்தில் அப்பொழுதே பெறுதற்கரிய சுகம் உண்டாகும். அதை மறுத்த வுயிர்களும் இல்லை. என்பதாம்.

அன்பர் தம் இறைச்சி மிச்சில் அதிகம் என்றது, கண்ணப்ப நாயனார் சரித்திரத்தை யுட் கொண்டு.

களியாவது, கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது.

8. தறுகண் - அஞ்சாமையுடைய. திருமுகம் - முகம். தொட்டு- தோண்டி. முட்டைகதையின் - (எங்கள்) முட்டையென்பவனுடைய கதாயுதத்தினால். கொடிறு - கன்னம். நாசியொடு செவியும் அரிவோம் என்க.

ஓலையைத் திருமுகம் என்பது வழக்காதலால், தூதர் 'எங்கள் அரசன் திருமுகம் கொணர்ந்தோம்' என்று கூற, அதனை யறியாத மறவர், 'ஆயின், அவன் திருமுகத்தைக் காட்டு; யாங்கள் இவ்வாறு செய்வோம்' என்றார் என்க.

முட்டை என்பது, வேடரின் பெயராக வந்துள்ளதனால் 'முட்டை கதையின்' எனக் கூறப்பட்டது. முள் தை கதை எனப் பிரிக்கலுமாம். இதற்கு வேறு பொருள் கூறுவாருமுளர்.

மறம் ஆவது, மறவர், தம் பெண்ணை மணம் பேசி ஒரரசன் விடுத்த தூதுவனிடம் மகள் மறுத்து, அவ்வரசனை இகழ்ந்து, தம் வீரந் தோன்றக் கூறுவது.

TAMIL NADU ARCHIVES
111057